# உதயன்



www.onlineuthayan.com

26: பக்கங்கள் சுடர் 27 கதிர் 296 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 01 திங்கட்கிழமை (17/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


# நான்கு அம்சக் கோரிக்கைகளின் கீழ் தேசிய அரசமைக்க ஐ.தே.க. ஆதரவு

கொழும்பு, செப்.17

கிழக்கில் தேசிய அரசொன்றை அமைக்கும் யோசனைத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கான நிபந்தனையாக நான்கு அம்சக் கோரிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அரசிடம் முன்வைத்தது.

வடக்குத் தேர்தல், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட இந்த நான்கு நிபந்தனைகளுக்கும் அரசிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் கிடைக்கும் பட்சத்திலேயே தேசிய அரசொன்றை அமைப்பதற்குப் பங்களிப்புச் செய்வோம் என்று ஐ.தே.க. தமது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாக வெளிப்படுத்தியது.

ஐ.தே.கவின் இந்த நிலைப்பாட்டை கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன நேற்று வெளிப் படுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கில் ஆட்சியமைக்கக்கூடிய பெரும்பான்மைப் பலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் இல்லை. அதனால்தான் அரசு இவ்வாறானதொரு யோசனைத் திட்டத்தை முன்வைத்துள்ளது.

கிழக்கில் தேசிய அரசொன்றை அமைக்கும் அரசின் யோசனைத்திட்டம்

பார்க்க பக்கம் 4

## அமைச்சர் பீரிஸுடன் ஐ.நா.குழு சந்திப்பு

கொழும்பு, செப்.17

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் இருவர் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கான செயற்றிட்டம், எதிர்காலத் திட்டங்கள் குறித்து இந்தச் சந் திப்பில் பேசப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## மஹிந்தவை எதிர்த்து புதுவையில் கடையடைப்பு

சென்னை, செப்.17

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று இந்தியாவுக்குச் செல்லவுள்ள நிலையில் அவரது வருகையைக் கண்டித்து புதுச்சேரி மாநிலத்தில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த போராட்டத்திற்கு ஐக்கிய ஜனதா தளம் கட்சியும் ஆதரவளித்துள்ளது.

இந்தப் போராட்டத்தால் புதுச்சேரியின் இயல்புநிலை பாதிப்புக்குள்ளாகும் என்றும் ஆயினும் அரச பாடசாலைகளும், மருத்துவமனைகளும் வழமை போல இயங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் போராட்டத்தை ஒட்டி தமிழகத்தில் இருந்தும் நாம் தமிழர் கட்சி

பார்க்க பக்கம் 4

### கிழக்கில் ஆட்சியமைப்பது குறித்து

# மு.கா. – கூட்டமைப்பு நேற்று முக்கிய பேச்சு

கொழும்பு, செப்.17

கிழக்கு மாகாணசபையில் ஆட்சியமைப்பதற்குத் தயாரென்றும், அதற்கு முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு இருப்பதாகவும் தெரிவித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த கிழக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் எழுதியுள்ள சூழ்நிலையில், கிழக்கில் ஆட்சியமைப்பது குறித்தான முக்கிய பேச்சுகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நேற்று நடத்தியுள்ளன.



நாரஹேன்பிட்டியிலுள்ள பிரபல ஹோட்டலொன்றில் இந்தப் பேச்சுவார்த்தை நடந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதி ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம், செயலாளரும் நாடாளு

பார்க்க பக்கம் 4

**5** ஒரே பாடசாலையில் தொடர்ந்து ஏழு வருடங்கள் பணியாற்றிய, 55 வயதுக்கு உட்பட்ட, உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வலயத்துக்குள்ளான இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

**8** அணுமின் நிலையத்தை எதிர்த்து கடல் மணலில் புதைந்து மீனவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**9** லிபியாவைத் தாக்கும் எண்ணத்துடன் போர்க்கப் பல்களை அனுப்பவில்லை என்று அமெரிக்க பாதுகாப்பு துறையின் தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

**10** பிரபல ஹொலிவூட் நடிகையான ஏஞ்சலினா ஜூலி சிரிய வன்முறைகளால் ஈராக்குக்கு இடம்பெயர்ந்த சுமார் 50 ஆயிரம் அகதிகளுக்கு உதவ முன்வந்துள்ளார்.

## தேசிய அரசு அமைக்க மு.காவும் பச்சைக் கொடி

கொழும்பு, செப்.17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் தேசிய அரசொன்றை அமைப்பதற்கு சந்தர்ப்பம் உருவாகுமானால் அதற்கு நாம் மதிப்பளிப்போம்.

- இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அத்துடன், அவசர முடிவொன்றை எடுத்து முதல்வர் கதிரையில் அமர்வதற்குப் புறம்பாக, எதிர்ப்பார்த்த கொள்கையளவிலான காரணிகளில் தமக்குத் திருப்தி இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் ஆட்சியொன்றை ஏற்படுத்தும் விடயத்தில் தமது தரப்பு ஆதரவு எந்தத் தரப்புக்கு வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் தொடர்ந்தும் இழுத்தடிப்புப் போக்கைக் கடைப்பிடித்து வரும் மு.கா. எது எப்படியிருந்த போதிலும் கிழக்கு மாகாண முதல்வர் கதிரையை இம்முறை முஸ்லிம் ஒருவரே அலங்கரிப்பார் என்றும் நேற்று உறுதியாக

பார்க்க பக்கம் 4

## இலங்கை விமானப் படையினருக்கு இந்தியாவில் தொடர்ந்தும் பயிற்சி

### தென்மண்டல கட்டளைத் தளபதி தெரிவிப்பு

புதுடில்லி, செப்.17

இலங்கைப் படைகளுக்குத் தொடர்ந்து பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது என இந்திய சிரேஷ்ட இராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் ஏ.கே. சிங் தெரிவித்துள்ளார். அத்துடன் பயிற்சித் திட்டம் நீடிப்பதை இவர் ஒப்புக் கொண்டுள்ளார். இவரின் அறிவித்தல் தமிழக முதல்வர் ஜே.ஜெயலலிதாவினதும், தமிழக இதர அரசியல் கட்சித் தலைவர்களினதும் குமுறல்களுக்கு எண்ணெய் வார்ப்பதாக அமைந்துள்ளது.

தென்மண்டலக் கட்டளைத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் ஏ.கே. சிங், ''இலங்கை இராணுவத்துக்கான பயிற்சித் திட்

பார்க்க பக்கம் 4

## ஆஸி.சென்ற 52 பேர் கைது

கொழும்பு, செப்.17

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவிற்கு செல்ல முற்பட்ட 52 பேர் நேற்றுக்காலை கைதுசெய்யப்பட்டு காலி துறைமுகத்திற்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் கடந்த மாதம் 26ஆம் திகதி சிலாபத்திலிருந்து ஆஸ்திரேலியா நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் பயணித்த படகு பழுதான நிலையில் இவர்கள் கடந்த 20 நாள்களாக நடுக் கடலில் தத்தளித்துள்ளனர். இந்த நிலையில் இவர்கள் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக காலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## மக்கள் விரும்பும் ஆட்சியை தடுத்தால் அரசுக்கு ஆபத்து

### எச்சரிக்கிறது சோஷலிசக் கட்சி

கொழும்பு, செப்.17

"கிழக்குவாழ் தமிழ் பேசும் மக்கள் தமது உணர்வுகளை இந்தத் தேர்தலினூடாக அரசுக்குத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளனர்.

இதன் பின்னரும், கிழக்கு மாகாண ஆட்சியை அரசு தன் கைக்குள்ளும், பைக்குள்ளும் அடக்கி வைத்திருப்பது நல்லதல்ல. எனவே, கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து - அதற்குத் தலைசாய்த்து கிழக்கு மாகாண ஆட்சி அதிகாரத்தை அரசு அவர்களுக்கு வழங்க வேண்டும். இன்றேல் அது ஒட்டுமொத்த இலங்கைக்கே பேராபத்தை ஏற்படுத்தும்.''

- இவ்வாறு நேற்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் ஐக்கிய சோஷலிஸக் கட்சித் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய. மூன்று மாகாணத் தேர்

பார்க்க பக்கம் 4

## மஹிந்தவின் மீது விசாரணை சர்வதேச நீதிமன்றுக்கு மனு

### அ.தி.மு.க. வழக்கறிஞர்கள் கையளிப்பு

புதுடில்லி, செப்.17

இலங்கையில் இறுதிப் போரின்போது ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி சர்வதேச நீதிமன்ற நீதிபதி தல்வீர் பண்டாரியிடம் அ.தி.மு.க. வழக்கறிஞர்கள் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த இந்தியாவுக்குப் பயணமாகவுள்ள நிலையிலேயே இந்திய உச்சநீதிமன்றத்தில் பணியாற்றும் அ.தி.மு.க. வழக்கறிஞர்கள் குழு டில்லியில் உள்ள சர்வதேச நீதிமன்ற நீதிபதியான தல்வீர் பண்டாரியிடம் நேற்று மாலை இந்த மனுவை கையளித்தனர்.

சர்வதேச நீதிமன்ற நீதி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த விரிக்கும் வலையில் இந்தியா சிக்கிக்கொள்ளக் கூடாது

## மத்திய அரசை எச்சரிக்கிறார் ராமதாஸ்

சென்னை, செப். 17
இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரானப் போரின் போது சிங்களப் படையினர் நடத்திய போர்க் குற்றங்கள் தொடர்பான காலமுறை மதிப்பீட்டாய்வு விசாரணையில் இலங்கை விரிக்கும் வலையில் இந்தியா விழக்கூடாது என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆறு மாதங்கள் கடந்த போதிலும், இலங்கையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்களும், அடக்குமுறைகளும் அதிகரித்திருக்கின்றன.

இதற்காக இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற அழுத்தங்கள் தமிழகத்தில் அதிகரித்துள்ள நிலையில், இலங்கையில் போருக்கு முன்பும், போரின் போதும், போருக்குப் பிறகும் மனித உரிமைகள் எவ்வாறு மீறப்பட்டன என்பது குறித்த முழுமையான காலமுறை மதிப்பீட்டாய்வு, ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் எதிர்வரும் ஒக்டோபர் 22ஆம் திகதி முதல் நவம்பர் 5ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் காலமுறை மதிப்பீட்டாய்வு பணிக்குழுவின் 14 ஆவது கூட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தக்கூட்டத்தின் போது நவம்பர் 1ஆம் திகதி இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணை நடத்தப்பட்டு, அதன் முடிவுகள் நவம்பர் 5ம் திகதி அறிவிக்கப்படவுள்ளன. இந்த விசாரணையை நடத்தும் பொறுப்பு இந்தியா, ஸ்பெயின், பெனின் ஆகிய நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அளித்த அறிக்கையில் பொய்கள் மட்டுமே இருப்பது தான் இதற்கு காரணமாகும். இலங்கை மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறு நாடுகளும் வலியுறுத்தி வருவதால்

இலங்கைக்கு எதிராக பன்னாட்டு விசாரணைக்கு ஆணையிடப்பட வாய்ப்புள்ளது. ஆனால், இதை தடுப்பதற்கான முயற்சிகளில் இலங்கை ஈடுபட்டிருக்கிறது. விசாரணைக்குழுவில் இடம்பெற்றுள்ள ஸ்பெயினும், பெனினும் ஏற்கனவே மனித உரிமை ஆணையகத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தவை என்பதால், இம்முறையும் நடுநிலையாக செயற்பட்டு தீர்ப்பளிக்க முடிவு செய்துள்ளன.

ஆனால், கடந்தமுறை தங்களுக்கு எதிரான தீர்மானத்தில் திருத்தம் கொண்டு வந்து, அதை நீர்த்துப் போகச் செய்த இந்தியா, இம்முறையும் தங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு தங்களை காக்கும் என்று இலங்கை அரசு நம்புகிறது.

இதற்காக பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து ஆதரவை திரட்டவே மஹிந்த



ராஜபக்ஷ நாளை இந்தியா வருகிறார். போர் முடிந்த பிறகு இலங்கைக்கு ஆதரவாக செயல்பட்டதால் உலக அரங்கில் இந்தியாவுக்கு ஏற்கனவே அவப்பெயர் ஏற்பட்டிருக்கிறது.

ஐ.நா. நெருக்கடியிலிருந்து இந்தியாவின் உதவியுடன் தப்பிக்கும் நோக்குடன் இலங்கை விரித்துள்ள வலையில் இந்தியா விழுந்துவிடக்கூடாது. எனவே, இந்தியா வரும் மஹிந்தவைச் சந்திப்பதை மன்மோகன் சிங் தவிர்க்க வேண்டும். மேலும், இப்பிரச்சினையில் இந்தியா நடுநிலையுடன் செயற்படும் என்று வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (16)

# வேலணைக் கடற்கரையில் கரையொதுங்கும் சடலங்கள்

## அச்சத்தில் உறைந்துள்ளனர் மக்கள்

யாழ்ப்பாணம், செப்.17
யாழ்.வேலணை, மண்கும்பான் கடற்பரப்பில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

இதேபோன்று நேற்று முன்தினமும் சடலம் ஒன்று கரையொதுங்கியிருந்த நிலையில் நேற்றும் மற்றொரு சடலம் கரையொதுங்கியிருக்கின்றது.

இந்தச் சடலமும் முற்றாக உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாக அந்தப் பகுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன. சடலத்தின் தலைப் பகுதி முற்றாக உருக்குலைந்துள்ளது,

தற்போது சடலத்தை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மீட்டுள்ளதோடு, இந்த சம்பவம் குறித்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ங-16)

# எரிகாயங்களுக்குள்ளான தம்பதிகள் ஆஸ்பத்திரியில்

எரிகாயங்களுக்குள்ளான நிலையில் கர்ப்பிணிப் பெண்ணொருவரும் அவரது கணவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் மன்னார் வெள்ளாங்குளம் சேவா கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நிஷாந்தன் மயூரி (வயது- 18) என்ற நிறைமாதக் கர்ப்பிணி தீ விபத்தில் காயமடைந்ததாகவும் அவரைக் காப்பாற்றச் சென்ற அவரது கணவரான அ.நிஷாந்தனும் தீக்காயங்களுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருவரும் உடனடியாக முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதானா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சமையல் வேலையில் குறித்த பெண் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த தீ விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (16-4)

# கிழக்கு மக்களின் விடிவை மு.காவின் முடிவே தீர்மானிக்கும்

கொழும்பு, செப்.17
கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்கவேண்டுமாயின் முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கூட்டாட்சியை ஏற்படுத்தவேண்டும். இதை நாம் தெளிவாக முஸ்லிம் காங்கிரஸிடம் கூறிவிட்டோம். அவர்கள்தான் இனி சரியான தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இவ்வாறு நேற்றுக் குறிப்பிட்டார். மு.காவுடனான சந்திப்புக் குறித்து கேட்ட போதே சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

தமிழ்க் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றுபட வேண்டுமென்பதுதான் தமிழ்பேசும் மக்களின் விருப்பம். முதலமைச்சர் பதவியை முஸ்லிம் ஒருவருக்கு விட்டுக்கொடுப்பது மட்டுமன்றி, அதிகாரப் பகிர்வு உட்பட்ட பல விடயங்கள் குறித்து முஸ்லிம் சமூகத்துடன் பேசத் தயாராக இருக்கிறோம்.

தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு, எமது இரு கட்சிகளும் இணைந்தாலே கிடைக்கும். அதில் நாங்கள் தவறு செய்துவிடக்கூடாது. எங்களுடன் பேச்சு நடத்தியபோது முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் அனைவரும் நல்ல பிரதிபலிப்பையே வெளிப்படுத்தினர்- என்றார்.

# கைகலப்பில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், செப். 17
அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கு இடையிலான மோதலில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் அளவெட்டி தெற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் கிருபானந்தம் சிவதாசன் (வயது-24), தவரட்ணம் சிரோன் (வயது -35) ஆகிய இருவரும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

அளவெட்டி தெற்குப் பகுதியிலுள்ள வீதி ஒன்றுக்கு பெயர் மாற்றம் செய்வதில் இடம்பெற்ற முறுகல் நிலையாலேயே நேற்று இந்த மோதல் இடம்பெற்றதாக தெரியவருகிறது. நேற்று முன்தினம் இரவு வீதியின் பெயர்ப் பலகைக்கு விசமிகள் கழிவு ஒயில் ஊற்றிச் சென்றுள்ளதாகவும் இதனால் ஆத்திரமடைந்த இரு பிரிவினரே மோதிக்கொண்டுள்ளனர்.. சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ங-16)



இலங்கை வந்துள்ள மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் நட்சத்திரமான பிரைன்லாரா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்தார்.

# தமிழீழத்தை ஆதரிப்பவர்களே கிழக்கில் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளார்கள்

## டலஸ் அழகப் பெரும கூறுகிறார்

கிழக்கு மாகாண மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தமிழீழத்தை தோற்கடித்திருப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஹொரனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 2% சதவீதமானவர்களே சிங்களவர்கள் இருக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 6% சதவீதமானவர்கள் தமிழர்கள், நான்கு சதவீதமானவர்களே சிங்களவர்களாக இருக்கிறார்கள்.

இருந்த போதும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு 31 சதவீதமானவர்களே வாக்களித்துள்ளனர். அரசாங்கத்துக்கு 69 சதவீதமானவர்கள் வாக்களித்துள்ளனர். இதன் மூலம் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தமிழீழ எண்ணத்தை தோற்கடித்திருப்பதாக அமைச்சர் டளஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார். (16)

# பட்டாசு வெடித்ததில் ஐவர் காயம்

பட்டாசுப் பொருள்களுடன் சென்றவாகனத்திலிருந்த பட்டாசுகள் திடீரென வெடித்ததில் ஐவர் காயமடைந்துள்ளனர். குருநாகல் - தம்புள்ளை வீதியில் திவுள்கஸ்தோட்டை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கலேவல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (16)

# மிருகபலியை நிறுத்துவதை விடுத்து மனிதக் கொலையை முதலில் நிறுத்தவும்

## அமைச்சர் மேர்வினுக்கு மனோ அறிவுரை

மிருக பலியை தடுத்து நிறுத்துவதை விடுத்து முதலில் மனித பலியை நிறுத்த அமைச்சர் மேர்வின் சில்வா நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

நாட்டில் தலைபோகிற விடயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. மிருகபலியை விட, மனிதபலி நடக்கிறது. தினசரி படுகொலைகள் நடந்தேறுகின்றன. இவற்றிற்கு எதிராக, ஒரு அஹிம்சை இயக்கத்தை இவர் ஆரம்பித்து நடத்தலாம்.

ஆனால் குற்றவாளியான தனது மகனை சட்டத்தின் முன் நிறுத்த தயங்கும் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு கோயில்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை யார் வழங்கியது.

''நம்நாட்டில் இந்து மத தலைவர்கள் அரசியலில் தலையிடுவதில்லை. இப்போது, இந்து மத ஆலயங்கள் தொடர்பில் தாகே பொலிஸ்காரன் வேலை செய்ய போவதாக அவரது அறிவிப்பு புதிதாக வந்துள்ளது.

மலையகத்திலும், கிழக்கிலும், வடக்கிலும் கோவில்களில் மிருகபலியிடும் முறைமை இருக்கிறது. நாளை, 'தாங்கள் அமைச்சர் அனுப்பிய விசாரணை அதிகாரிகள்' என்று சொல்லி சில கோஷ்டிகள் கோவில்களுக்குள் வந்து மிரட்டி கப்பம் கேட்கலாம்.

எனவே இந்து மத நிறுவனங்கள் இந்த விவகாரம் மேலும் வளரும் முன்னர் தலையிட வேண்டும். மத விவகார அமைச்சிடம் பேச்சு வார்த்தைகளை நடத்தி இதற்கு முடிவு காண வேண்டும்.

அரசில் உள்ள இந்து அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவை அமர்வின் போது ஜனாதிபதியிடம் தீர்க்கமாக, மேர்வின் சில்வாவின் நடவடிக்கைகள் தொடர்பாக கேள்வி எழுப்ப வேண்டும். இஸ்லாமிய பள்ளிகள் தொடர்பில் எந்த ஒரு முஸ்லிம் அமைச்சரும் தன்னிடம் எடுத்து முறையிடவில்லை என ஜனாதிபதி சமீபத்தில் சொன்னார். அதுபோல் என்றாவது ஒரு நாள் ஜனாதிபதி, தனது இந்து அமைச்சர்களும், தன்னிடம் எதுவும் கேட்காமல், அமைச்சரவையில் எலிகள் மாதிரி அமைதியாக இருக்கிறார்கள் என்றும் சொல்லிவிடுவார்.'' (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.வடக்கில் மீளக்குடியமர்வு நிதி 1,421 குடும்பங்களுக்கு இதுவரை இல்லை

யாழ்ப்பாணம், செப்.17

வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளில் மக்களுக்கு வழங்கப்படும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா இதுவரையில் ஆயிரத்து 421 குடும்பங்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வழங்கப் படவில்லை.

அத்துடன் காணி துப்புரவு செய்வதற்குரிய 7.54 மில்லியன் ரூபா நிதியும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வழங்கப்படவில்லை என்று வலி.வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலரால் தெரிவிக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 1.88 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்று அதனூடாக 166.7 ஏக்கர் காணிகளில் இருந்த பற்றைகள், சிறு காடுகளை துப்புரவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கு மேலதிகமாக 431.1 ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள பற்றைகள், சிறுகாடுகளைத் துப்புரவாக்குவதற்குரிய நிதி தேவைப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் ஊடாக மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 13 கிராம சேவையாளர் பிரிவில் மீளக் குடியமர்வதற்கு 6 ஆயிரத்து 567 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டன. எனினும் 2 ஆயிரத்து 267 குடும்பங்களே மீளக் குடியமர்ந்துள்ளன. இவர்களில் 841 குடும்பங்களுக்கே 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய ஆயிரத்து 421 குடும்பங்களுக்கும் அந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று பிரதேச செயலரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இவற்றைத் தவிர 198.65 ஹெக்ரேயர் நிலப்பரப்பைத் துப்புரவு செய்வதற்கு 7.5 மில்லியன் ரூபா இன்னமும் தேவை என்றும் பிரதேச செயலர் அங்கு குறிப்பிட்டார். (ம-5)

## எடுத்து ருசித்துப் பார்ப்போமா....?



உதயன் ஊடக அனுசரணையுடன் யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையம் நடத்திய மாபெரும் சமையல் போட்டி நேற்று முன்தினம் யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது. யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலும் இருந்து 300 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றிய இந்தப் போட்டியில் ஆறு வகைகளில் உணவுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. பிரதான உணவு, சிற்றுண்டிகள், உலர் உணவுகள், பானங்கள் எனப் போட்டியாளர்கள் தமது விருப்பத்துக்கு ஏற்ப உணவுகளைத் தயார் செய்து போட்டியில் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். பாடசாலை மாணவர்கள் உட்பட முதியவர்கள் பலர் போட்டியாளர்களாகக் கலந்து கொண்டதுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் போட்டியைப் பார்வையிட்டனர். (ம-14-86)

## இரவலாகப் பெற்ற வாகனங்களை திருப்பி செலுத்தாமையால் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்ப்பாணம், அச்சுவேலி பொலிஸ் பிரிவுகளில் வாகனங்களைப் பெற்றுக் கொண்டு அவற்றைத் திருப்பிக் கொடுக்காது மோசடி செய்துள்ளமை தொடர்பாக இரண்டு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

**அச்சுவேலியில் வான் ஒன்றை வாங்கிச் சென்ற நபர் ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் அதனைத் திருப்பித் தரவில்லை.**

யாழ்.நாவலர் வீதியில் உள்ள ஒருவர் தமது 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை தமது மகனின் நண்பன் கடந்த 3 ஆம் திகதி வாங்கிச் சென்றார். அதனை அவர் திருப்பி ஒப்படைக்கவில்லை என்று கடந்த 10ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அச்சுவேலியில் வான் ஒன்றை வாங்கிச் சென்ற நபர் ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் அதனைத் திருப்பித் தரவில்லை. கடந்த மார்ச் மாதம் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் வானை வாங்கிச் சென்றுள்ளார். இன்றுவரை அதனை திருப்பி ஒப்படைக்கவில்லை. என்று கடந்த 12 ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். வாகனத்தைக் கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று எரிக் பெரேரா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நிறுவனம் ஒன்றில் மோட்டார் சைக்கிளின் இரண்டு ரயர்களைத் திருடியதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் பெறுமதி ஒரு லட்சத்து 43 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. திருடிய சந்தேகத்தில் இரண்டு பேரைக் கைது செய்துள்ளதாகவும் ஒருவர் தலைமறைவாகியுள்ளதாகவும் எரிக் பெரேரா மேலும் கூறினார். (ம-4)

# நோயாளர்கள் செல்லும் வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படமாட்டா

### பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவிப்பு

வடமராட்சி, செப்.17

*பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்களின் வாகனங்கள் வழிமறித்துச் சோதனை இடப்படமாட்டா என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.அபயக்கோன் உறுதியளித்துள்ளார்.*

நெல்லியடி, கரவெட்டி, மாலுசந்தி, வதிரி, அல்வாய் போன்ற இடங்களிலிருந்து காலை வேளைகளில் மோட்டார் சைக்கிள், ஓட்டோ மற்றும் வாகனங்களில் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அவசரமாகச் செல்லும் நோயாளர்களின் வாகனங்களைப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மந்திகை- நெல்லியடிப் பிரதான பாதையில் மந்திகை, மடத்தடி, மாலுசந்தி போன்ற இடங்களில் நின்று வழி மறித்துச் சோதனை இடுகின்றனர். இதனால் உரிய நேரத்துக்கு வைத்தியசாலைக்கு நோயாளர்கள் செல்ல முடியாதுள்ளது.

எனவே வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களின் வாகனங்களை குறிப்பிட்ட காலைவேளைகளில் வழி மறித்து சாரதி அனுமதி, காப்புறுதி அனுமதிப் பத்திரங்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகளை நிறுத்தி நோயாளர்கள் உரிய வேளைகளில் சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டும் என வதிரியைச் சேர்ந்த பொதுமகன் ஒருவர் பருத்தித்துறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுத்துக் கூறினார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு சமுகமளித்திருந்த பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு பொதுமகனின் ஆதங்கத்தை பருத்தித்துறைப் பிரதேச செயலர் விளக்கிக் கூறியிருந்தார்.

இதற்கமைய குறிப்பிட்ட இடங்களில் வைத்து வாகனப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டாம் எனப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாருக்கு அறிவுறுத்தல்களை வழங்கி நடவடிக்கை எடுப்பதாகப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ம-8)





சர்வதேச இந்துமத குருபீடத்தின் ஏற்பாட்டில் சங்கானை இலுப்பை வெல்லில் முருகமூர்த்தி ஆலயத்தில் அண்மையில் ஆன்மிகப் பெருவிழா நடத்தப்பட்டது. நிகழ்வில் கன்[illegible] ஆச்சாரியர்கள் [illegible] அழைத்து வரப்படுகின்றனர். (ம-29)

## கல்லுடைக்கும் ஆலைகள் மூடல்

இராச வீதியில் அமைக்கப்பட்டிருந்த 4 கல்லுடைக்கும் ஆலைகளும் வலி.கிழக்குப் பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானத்துக்கு அமைய மூடப்பட்டுள்ளன.

வலி.கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்றது. இதன்போது இராச பாதை வீதியில் இயங்கி வருகின்ற 4 கல்லுடைக்கும் ஆலைகளால் அந்தப் பகுதி சுற்றாடல் மாசடைகின்றது.

இதன் காரணமாக குறித்த ஆலைகள் இந்தப் பிரதேசத்தில் இயங்குவதை தடை செய்ய வேண்டும் என்று பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கு அமைவாக மத்திய சுற்றாடல் அதிகார சபையால் மேற்படி 4 கல்லுடைக்கும் ஆலைகளுக்குரிய புதிய அனுமதி வழங்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து இதில் இரண்டு கல்லுடைக்கும் ஆலைகள் கைதடி - மானிப்பாய் வீதியிலுள்ள கோப்பாய் வெளிப் பிரதேசத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன.

எஞ்சிய இரு ஆலை உரிமையாளர்களில் ஒருவர் தனக்கான அனுமதி வழங்காததற்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். மற்றைய உரிமையாளர் இதுவரை மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் தொடர்பு கொள்ளவில்லை என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-5)




## நிகழ்வுகள் இன்று

**பொதுக்கூட்டம்**

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பின் பொதுக் கூட்டம் இன்று கல்வயல் பொது நோக்கு மண்டபத்தில் பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் சத்தியேந்திரா தலைமையில் நடைபெறவுள்ளது. இதன்போதே புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறும். (ம-9)

**அதிபர்கள் கூட்டம்**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்விப் பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிவித்தது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 12 ஆவது நினைவு தினம் மு.காவின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வு முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

**கூட்டமைப்புக்கு பதிலளிக்கவில்லை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசு ஆகியவற்றுடன் இணைந்து தேசிய அரசொன்றை அமைப்பதற்கான சந்தர்ப்பம் உருவாகுமானால் அதற்கு நாம் மதிப்பளிப்போம்.

மூவின மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடியதொரு முறைமை அங்கு உருவானால் அதை நாம் மதிப்போம். இதற்கிணங்கவே மக்கள் தீர்ப்பு அமைந்துள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தம்முடன் இணைந்து தனியானதொரு ஆட்சியை அமைக்க வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமக்கு அழைப்பு விடுத்தது. அதற்கு நாம் இன்னும் பதிலளிக்கவில்லை. அது குறித்து கலந்துரையாட வேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஒருவரே முதலமைச்சர் பதவியை அலங்கரிப்பார் என்ற எதிர்பார்ப்பு உச்சத்தில் இருக்கின்றது.

குறிப்பாக, அவசர தீர்மானமொன்றுக்குச் சென்று முதலமைச்சர் பதவியில் அமர்வதற்கு புறம்பாக, நாம் எதிர்பார்த்த கொள்கையளவிலான காரணிகளில் திருப்பதியிருக்க வேண்டும். சங்கீதக் கதிரை அல்ல அரசியல் - என்றார்.

அதேவேளை, முதலமைச்சர் பதவியை மு.காவுக்கு வழங்கி, தாராள விட்டுக்கொடுப்புக்குத் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. அப்படியிருக்கையில் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பதில் மு.காவுக்கு என்ன பிரச்சினை உள்ளது என்று அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்கு,

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாம் இன்று ( நேற்று) பேச்சு நடத்தினோம். ஊடகங்கள் வாயிலாக அறிவித்த அனைத்தையும் அவர்கள் எம்மிடம் மீண்டும் உறுதிப்படுத்தினர். இதற்காக நான் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவை குறித்து நாம் கலந்துரையாட வேண்டியுள்ளது.

இதனையடுத்து, மு.கா.வின் இறுதிமுடிவு எப்போது அறிவிக்கப்படும் என உறுதியாக கூறமுடியுமா என அமைச்சரிடம் எழுப்பிய மற்றுமொரு கேள்விக்கு,

''இருதரப்பிடமும் எமது நியாயங்களை முன்வைத்துள்ளோம். அரசிடம் இருந்து பதில் கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது. பதில் கிடைத்ததும் நாம் இறுதியானதொரு முடிவை எடுப்போம். எப்படியிருப்பினும், சமூக நலன், தூரநோக்கு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே மு.கா. எந்தவொரு முடிவையும் எடுக்கும்'' என்று அமைச்சர் பதிலளித்தார்.

அதேவேளை, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் பின் 12 ஆவது நினைவுத்தின நிகழ்வில் ,மு.காவின் செயலாளர் நாயகம் ஹஸன்லி, தவிசாளர் பஷீர் சேகுதாவூத், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபைக்கு தெரிவாகியுள்ள ஏழு உறுப்பினர்கள், உயர்பீட உறுப்பினர்கள் உட்பட கட்சியின் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றுகையில் மு.கா.தலைவர் ஹக்கீம் கூறியவை வருமாறு:-

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிகப்பெரியதொரு வெற்றியைப் பெற்றுள்ளது. மக்கள் எமக்கு உயரிய ஆணையை வழங்கியுள்ளனர். எனவே, நாம் மக்களின் அபிலாசைகளை புறந்தள்ளிவிட்டு செயற்பட முடியாது.

நாம் சந்தர்ப்பவாத அரசியல் நடத்தவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசு ஆகிய இரு தரப்புடனும் பேச்சு நடத்தினோம். நாம் எதிர்பார்த்த இலக்கை நோக்கி பயணிக்க சக்தி கிடைத்துள்ளது. என்னவாக இருந்தாலும் இம்முறை கிழக்கு மாகாண முதல்வர் பதவியை முஸ்லிம் ஒருவரே அலங்கரிப்பார் என்பதை உறுதியாகக் கூறிக் கொள்கின்றேன். எந்த தரப்பு ஆட்சிக்கு வந்தாலும் கிழக்கு மாகாணத்தில் ஆளுந்தரப்புடனேயே மு.கா. இருக்கும். இன்னும் ஓரிரு தினங்களில் எமது முடிவை அறிவிப்போம்- என் றார்.

இதேவேளை, கிழக்கில் தேசிய அரசு அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி நேரடியாகத் தமக்கு அழைப்பு விடுத்தால் அதுகுறித்துப் பலிசீலிக்கத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை நோக்கி சீனாவின் படையெடுப்பு தொடர்கிறது

சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலையியல் குழுத் தலைவர் வூ பங்குவோ நான்கு நாள் பயணமாக நேற்றுமுன்தினம் இலங்கை வந்துள்ளார்.

இவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட இலங்கையின் உயர்மட்ட அரச தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

அத்துடன் சீனாவும் இலங்கையும் இணைந்து மேற்கொள்ளும் பல்வேறு அபிவிருத்தி மற்றும் பொருளாதாரத் திட்டங்களையும் இவர் நேரில் சென்று பார்வையிடவுள்ளார். இதன்போது வன்னியில் அமைக்கப்பட்டுவரும் படையினருக்கான குடியிருப்புகளையும் இந்த குழு பார்வையிடவுள்ளதாகத் தெரியவருகிறது.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லி தலைமையிலான உயர்மட்ட படை அதிகாரிகள் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இரண்டு வாரங்களில், சீனாவின் உயர்மட்ட அரசியல் தலைவர் ஒருவர் இலங்கை வந்துள்ளார்.

இவருடன் 95 பேரைக் கொண்ட பெரியதொரு சீன அதிகாரிகள் குழுவும் இலங்கை வந்துள்ளது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டத்தை நாம் நடைமுறைப் படுத்தி வருகிறோம். இத்திட்டம் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய இராணுவத்தால் அளிக்கப்படும் பயிற்சி குறித்து இலங்கை இராணுவத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த நிபுணர்களும் திருப்தி தெரிவிக்கிறார்கள்'' - என குறிப்பிட்டுள்ளார் என 'டெக்கான் குரோனிக்கல்' குறிப்பிட்டுள்ளது.

இந்திய இராணுவமும், விமானப்படையும், கடற்படையும் அளிக்கும் இப்பயிற்சிகள் மிக நேர்த்தியானவை. பல வியூகங்களையும், யுக்திகளையும் கொண்டவை என்பதை இலங்கை இராணுவத்தின் பல்துறை நிபுணர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றும் தென்மண்டலக் கட்டளைத் தளபதி பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

தென்மண்டலக் கட்டளைத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் ஏ.கே.சிங்கின் இந்தப் பெருமித வுரை தமிழக அரசியல் கட்சிகளுக்கிடையே தணிந்து வந்த புயலைத் தட்டியெழுப்பியுள்ளது. மந்தமாருதம் சண்டமாருதமாக உருக்கொள்ள ஆரம்பித்துள்ளது.

இலங்கை இராணுவத்தினருக்கும் இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் பயிற்சியளிப்பதற்கு ஏற்கனவே முதலமைச்சர் ஜெயலலிதாவும், பல்வேறுபட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கடும் ஆட்சேபணை தெரிவித்துள்ளார்கள்.

இந்தப் பயிற்சித் திட்டத்தைக் கைவிடுமாறும், இலங்கை இராணுவ அதிகாரிகளைத் திருப்பியனுப்புமாறும் கோரி, இவர்கள் மத்திய அரசுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியும் வந்துள்ளார்கள்.

## மஹிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யின் முக்கிய தலைவர்கள் புதுவைக்கு விரைந்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தையொட்டி புதுவையில் பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. போராட்டக்காரர்கள் பலவந்தத்தைப் பிரயோகித்து, கடைகளை மூடுமாறு மிரட்டினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று பொலிஸார் எச்சரித் துள்ளனர்.

எனினும் தாமாகவே வர்த்தகர்கள் கடைகளைப் பூட்டுவதற்கு எந்தவிதத் தடைகளும் கிடையாது என்றும் புதுச்சேரி அரசு தெரிவித்துள்ளது.

(ந)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதியிடம் அரசியல் கட்சி ஒன்றின் சார்பில் இலங்கை அரசு மீது போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி கொடுத்துள்ளமை இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.(ந)

## மு.கா.-...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்ற உறுப்பினருமான ஹசனலி, இதர நாடாளுமன்ற உறுப்பினர்களான பஷீர் சேகு தாவூத், ஹரீஸ், பைசால் காசிம், எம்.எஸ்.தௌபீக் மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான நிஸாம் காரியப்பர், சட்டத்தரணி பாயிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணசபையில் கூட்டமைப்பும் மு.காவும் இணைந்து ஆட்சியமைப்பதால் வரும் அனுகூலங்களை இங்கு விளக்கிக் கூறிய சம்பந்தன் முதலமைச்சர் பதவியை முஸ்லிம் ஒருவருக்கு வழங்குவது பற்றி கூட்டமைப்பு உறுதியான தீர்மானம் எடுத்துள்ளது பற்றிக் கூறியதுடன் இருதரப்பும் ஏனைய விடயங்களைப் பேசித் தீர்த்துக் கொள்ள முடியுமென்றும் கூறியுள்ளார்.

இங்கு கருத்து வெளியிட்டிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரமுகர்கள் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் மக்களிடையே ஆதரவு இருப்பதை ஏற்றுக்கொள்வதாகவும், இதுபற்றி கட்சி மட்டத்தில் ஆராய்ந்து இறுதி முடிவை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் ஆட்சியமைக்க மு.காவின் ஆதரவு கிடைத்துள்ளதாக அரச தரப்பில் கூறப்பட்டு வருகின்றபோதிலும், அரசுக்கான ஆதரவை வழங்குவது தெடர்பில் இதுவரை உறுதிமொழிகள் எதுவும் வழங்கவில்லையென்றும் மு.கா. தரப்பில் இங்கு சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்து நாமும் அறிந்துள்ளோம். அரசின் இந்த யோசனைத் திட்டத்திற்கு ஆதரவு வழங்க நாம் தயாராக உள்ளோம்.

தேசிய அரசொன்றை அமைக்கும் விவகாரத்தில் எமது பங்களிப்பையும் அரசு பெறவேண்டுமாயின் நாம் முன்வைக்கும் நிபந்தனைகளான நான்கு அம்சக் கோரிக்கைகளுக்கும் அரசு ஆக்கபூர்வமான முறையில் பதிலளிக்கவேண்டும்.

வடமாகாணசபைத் தேர்தல், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் அமுலாக்கம், நாடாளுமன்றத் தெரிவுக்குழு, கிழக்கு மாகாண ஆட்சி முதலான நான்கு அம்சக் கோரிக்கைகளையே நாம் அரசிடம் முன்வைக்கிறோம்.

இதனடிப்படையில் முதலாவதாக வடமாகாணசபைத் தேர்தல் எப்போது நடத்தப்படும் என அரசு உத்தியோகபூர்வமான முறையில் அறிவிக்கவேண்டும். இது தொடர்பில் அது தமதுநிலைப்பாட்டைத் தெளிவான முறையில் வெளிப்படுத்த வேண்டும். வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் குறித்த காலம், காலவரையறை என்பவற்றை அரசு உடனடியாக அறிவிக்கவேண்டும்.

இரண்டாவது, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அரசு கட்டாயமாக நடைமுறைப்படுத்தியாக வேண்டும். இதன்படி, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அரசு நடைமுறைப்படுத்தும் காலம், காலவரையறை, அரசின் செயற்பாட்டுத் திட்டம் என்பவற்றையும் தெளிவாகக் கூறவேண்டும்.

மூன்றாவது, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்தல். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான அரசின் நிகழ்ச்சித்திட்டம் என்ன என்பதையும், தெரிவுக்குழு அமைப்பதற்கான நோக்கத்தையும் அரசு தெளிவாக விபரிக்க வேண்டும்.

அத்துடன், தெரிவுக்குழு அமைக்கும் காலம், காலவரையறை என்பவற்றையும் அது தெளிவாகத் தெரிவிக்கவேண்டும்.

நான்காவது, கிழக்கு மாகாண சபை ஆட்சி. கிழக்கு மாகாணசபையில் முதலமைச்சர் பதவி குறித்தும் அரசு அவதானம் செலுத்தவேண்டும். இதன்படி, கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் பதவியின் முதல் இரண்டு வருடங்கள் தமிழர் ஒருவருக்கும், அடுத்த இரு வருடங்கள் முஸ்லிம் ஒருவருக்கும், இறுதி வருடம் சிங்களவர் ஒருவருக்கும் வழங்கப்படவேண்டும்.

கிழக்கு மாகாணசபை ஆட்சியானது மூவினத்தையும் பிரதிபலிப்பதாக அமையவேண்டும். கிழக்கு மாகாணத்தில் எமக்கு ஆட்சி கிடைக்கவேண்டும் என நாம் எதிர்பார்க்கவில்லை. கிழக்கு வாழ் அனைத்து மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

தேசிய அரசொன்றை அமைக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு முன்னதாக நாம் முன்வைத்துள்ள இந்த நான்கு அம்சக் கோரிக்கைகளுக்கும் அரசிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் வரவேண்டும். அப்போதுதான் அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவு வழங்குவோம் - என்றார்.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தல் முடிவுகளினூடாக அவதானமாக இருங்கள் என்ற அபாய எச்சரிக்கையுடன் கூடிய சிவப்புநிற சமிக்ஞையையே மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஷபக்ஷ அரசுக்குக் காண்பித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடந்துமுடிந்த கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய ஆகிய மூன்று மாகாணங்களின் தேர்தல்களும் நீதியானதும் - சுதந்திரமானதுமாக நடைபெற்றவை அல்ல. இது மஹிந்த அரசால் திட்டமிட்டு, தினம் ஒதுக்கி, முழுமையாக அரச வளத்தைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட ஒரு மோசடியான தேர்தலே.

இருப்பினும், இந்தத் தேர்தலினூடாக கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மாகாணங்களில் வாழும் மக்கள் அரசுக்கு நல்ல பதி லொன்றைக் கொடுத்துள்ளனர். அவதானமாக இருங்கள் என சிவப்பு நிற சமிக்ஞை காட்டி அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அங்கு ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை அதிகாரத்தை அரசு பெற்றிராத போதிலும், அம்மாகாண ஆட்சியைத் தமது கைக்குள்ளும், பைக்குள்ளும் வைத்திருக்கிறது.

79 சதவீதமான கிழக்குவாழ் மக்கள் அரசுக்கு எதிராகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள னர். 36.5 சதவீதமான தமிழ் மக்கள் அங்கு வாழ்கின்றனர். இவர்களுள் 31 சதவீதமானோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர். அதாவது, நூற்றுக்கு 60 சதவீதமான தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமது முழு ஆதரவையும் வழங்கியுள்ளனர்.

ஒரு பகுதி மக்கள் தமது உள்ளத்து உணர்வுகளைத் தெளிவாக எடுத்துக்கூறிய பின்னரும் அதற்கு அரசு தலைசாய்க்காது செயற்படுகின்றது. அரசின் இந்தச் செயற்பாடு நாட்டுக்கு நல்லதல்ல. இது முழு இலங்கைக்குமே பேராபத்தை ஏற்படுத்திவிடும். எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு அரசு தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கிழக்கு மாகாண ஆட்சி அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கவேண்டும்.

13 ஆவது அரசியல் சீர்திருத்தமானது, தமிழ் மக்களின் நலனுக்காகக் கொண்டுவரப்பட்டதொன்றாகும். அதனைக் கருத்திற்கொண்டும் அரசு செயற்படவேண்டும் - என்றார்.

**சரத் மனமேந்திர**

இதன்போது கருத்துத் தெரிவித்த புதிய சிஹல உறுமய கட்சித் தலைவர் சரத் மனமேந்திர கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மைப் பலம் பெற்று அரசுக்கு ஆட்சியமைக்க முடியாமல் போயுள்ளது. இதனால் நான் கூறுவது என்னவெனில், கிழக்கில் 12 தமிழ் உறுப்பினர்களும், 15 முஸ்லிம் உறுப்பினர்களும், 8 சிங்கள உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆகையால் கிழக்கில் 12 தமிழ் உறுப்பினர்களும் , 15 முஸ்லிம் உறுப்பினர்களும் இணைந்து ஓர் ஆட்சியை ஏற்படுத்துங்கள்.

இந்த அரசு இனவாதத்தின் பின்னே ஓடிக்கொண்டிருக்கின்றது. மு.கா. தலைவர் ஹக்கீமுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சின் பின்னணியில் ஒரு பில்லியன் ரூபா பணம் இருக்கிறது. அத்துடன், முதலமைச்சர், அமைச்சர், பிரதி அமைச்சர் என்ற பதவிகளும் இருக்கின்றன. இதற்கு ஆசைப்பட்டு அரசின் பின்னால் ஹக்கீம் செல்வாராயின் கிழக்கில் பொம்மை ஆட்சியொன்றை உருவாக்குவதற்கே அவரும் வழி வகுப்பார் - என்றார்.

**அருண சொய்ஸா**

இதன்போது கருத்துத் தெரிவித்த ருஹுணு மக்கள் கட்சித் தலைவர் அருண சொய்ஸா கூறியவை வருமாறு:-

தென்மாகாணசபையைக் கலைத்து அங்கு தேர்தல் நடத்தி னால் அரசு தோற்பது உறுதி. அரசு தனது அனைத்து வளங்களையும் பயன்படுத்தி முடிந்தால் தென்மாகாணத்தில் வெற்றிபெற்றுக் காட்டட்டும் என நான் சவால் விடுக்கிறேன்.

அரசின் இறுதிப்பயணம் தெற்கில்தான் - என்றார்.

(ந-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நவீன யுகத்தில் அரசியலிலும் ஒளித்துப் பிடித்து விளையாடமுடியாதே!

*சகல வகையான மனித உரிமை மீறல்கள், காணாமல் போனவர்களின் விவகாரம், ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்படுதல் ஆகியன குறித்து அப்பழுக்கற்ற விசாரணைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. நடத்தப்படும் விசாரணைகள் வெளிப்படைத் தன்மை, நம்பகத் தன்மை கொண்டவையாக இருக்கவேண்டும்.

*கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைந்து செயற்படுத்த வேண்டும். போர் முடிவுற்று மூன்று வருடங்கள் கழிந்து- கரைந்துவிட்டன. இனியும் தாமதம் விரும்பத்தக்கதல்ல. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த தேசிய செயற்பாட்டுத் திட்டம் மிக இன்றியமையாதது.

*எதிர்வரும் நவம்பரில் ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெறும் அனைத்துலக பூகோள கால மீளாய்வு அமர்வின் போதும், இலங்கை அரசாங்கத்திடமும் நாம் இவற்றைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார், இங்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க இராஜாங்க அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக்.

அத்தோடு நிற்காமல், வடக்கில் இராணுவத்தினரின் பரம்பலை உடனடியாக குறைக்க வேண்டும் என்றும் பிளேக் வலியுறுத்தியுள்ளார்.

மேலும்-

வடமாகாண சபைக்கான தேர்தலை விரைந்து நடத்த வேண்டும். நாட்டின் ஏனைய மாகாணங்களில் உள்ள மக்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தையும் சமவுரிமைகளையும் வடக்கு மக்களும் அனுபவிக்க வகை செய்யவேண்டும். அதற்கான சூழலை இலங்கை அரசு உருவாக்கவேண்டும் - என்றும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் தமது பயணத்தின் போது அரசு தரப்புகளிடம் வலியுறுத்திச் சென்றுள்ளார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலதிகமாக முறிந்து வீழ்ந்துபோய்க் கிடக்கும் அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களை மீள்விப்பது குறித்து இரண்டு தரப்புகளிடமும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் பேச்சு நடத்தியுள்ளார்.

தமிழர் தரப்பே பேச்சுவார்த்தைகள் முடங்கிக் கிடப்பதற்கு மூல காரணம் என்று கூறி, அரச அமைச்சர்கள் தப்பித்துக்கொண்டனர். ஆனால்-

கடந்த பல மாதங்களாக அரச -தமிழர் தரப்புப் பேச்சுக்கள் கீழே விழுந்து கிடப்பதற்கு அரசாங்கமே காரணம். தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு விருப்பமின்றி தாம் நினைக்கும் சில்லறைகளை அவர்கள் மீது திணிப்பதற்காக, நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்து அங்கு பேசலாம் என்ற சுலோக மட்டையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நிற்கிறது மஹிந்த அரசு.

இவ்வாறு காலத்தை விழுங்கி தமிழர் பிரதேசங்களில், அவர்தம் பெரும் நிலப்பரப்பில் இப்போதுள்ளதை விடவும் மேலும் அதிக விஸ்தீரணத்தில் இராணுவ முகாம்களையும் தளங்களையும் வேக வேகமாக நிறுவுவதே அரசின் பிரதான நோக்கம்.

அதனைத் தொடர்ந்து, சிங்கள மக்களுக்கென குடியேற்றத் திட்டங்களைத் தொடங்கலாம், தமிழ் மக்கள் பல்லாண்டு காலமாக, பற்பல சந்ததிகளாக வாழ்ந்துவரும் பிரதேசங்களை 'பாதுகாப்புக் கருதியும் தொல்பொருள் பெருவியம்' என்றும் காரண காரியங்களைக் காட்டி அங்கு சிங்களக் குடிப்பரம்பல்களை உண்டாக்கும் உள்நோக்கத்துடனுமே -

தமிழர் தரப்புடன் அரசியல் சார் பேச்சுக்களை நடத்துவதனை தட்டிக்கழித்து வருகிறது அரசு.

இனப்பிரச்சினை இந்த நாட்டின் தேசியப் பிரச்சினை. அதனை சுமுகமாகவும் நீதி நெறிசார்ந்தும், மனம் விரும்பியும் தீர்ப்பதில், கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமாக கொழும்பு அரசுகள் உள்ளார்த்தமான விருப்பம் கொள்ளவில்லை.

பெரும்பான்மையினர் ஆள்வோராகவும் சிறுபான்மையின மக்கள் ஆளப்படுவோராகவும் வாழும் நிலையே, இந்த நாட்டில் மறுவின்றி நிலைநாட்டப் படவேண்டும் என்பது ஆளும் தரப்பினரின் ஆறா விருப்பமாகும்.

சிறுபான்மையின மக்களுக்குரிய உரிமைகளை முழு அளவில் வழங்காது, அவர்களுக்குச் சில அற்பசலுகைகளை உரிமைகளாகக் காட்டி, தாங்கள் புத்துலகிலும் உயர்ந்தவர்களாக வாழவேண்டும் என்ற உள்ளாசையுடன் இருக்கிறார்கள் ஆளும் தரப்பினர்.

இல்லையெனில் -

இந்தியா, அமெரிக்கா, இலங்கையை ஒரு சகாப்தத்தில் ஆண்டு களித்த பிரிட்டனுடன் மற்றும் ஐரோப்பிய அணிசேரா நாடுகள் என்று பூமிப்பந்தின் பல தேசங்கள் நியாயத்தை எடுத்துச் சொன்னாலும்-

அதனைக் காதில் போட்டுக் கொள்ளாமல் தனது விருப்பத்தையும் திட்டத்தையும் செயற்படுத்துவதிலேயே இந் நாட்டு அரசுகள் கண்ணும் கருத்துமாக இருந்தன. அதுவே இப்போதும் நிலைகொண்டுள்ளது. புதிய மொந்தையில் பழைய கள்ளு என்ற நிலையே தொடர்கிறது.

இலங்கை விடயத்தில் வேற்று நாடுகள் தங்கள் மூக்கை நுழைக்க இடம்கொடுக்கப்போவதில்லை என்ற ஒருவித சபதத்துடன் காலம் கழிந்தது, இப்போதும் கழிந்தும் வருகிறது.

ஆனால் இன்றைய விஞ்ஞான, தொழில் நுட்ப யுகத்தில் உலகம் சுருங்கிவிட்டது. தனித்து நின்று மேலோங்குவது கடினம். இதனை மனதில் கொள்ள மறுத்து வெளியார் உதவியோ அனுசரணையோ இன்றி தம்மால் தனித்து எதனையும் நிலைநாட்ட, சாதிக்க இயலாது என்பதனை பெரும்பான்மையினஅரசியல் தலைவர்களால் ஏனோ புரிந்துகொள்ள முடியவில்லை!.

உள்நாட்டுப் பிரச்சினை என்ற வகையில் எதனையும் தனித்து நிலைநாட்ட முடியாது. சமூகப் பொருளாதார அபிவிருத்தி உதவிகளை வெளியுலகில் இருந்து பெறுவது போலவே, அரசியல் உரிமை விவகாரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றிலும் ஒத்திசைந்தும், விட்டுக் கொடுத்தும் செயற்படுவது அவசியமாகிறது.

இதனை அளந்து அசைபோடும் நிலைக்கு இலங்கை ஆட்சியாளர்கள் தம்மை மாற்றிக் கொள்ளாவிடில், அனைத்துலக மட்டத்தில் சகல விடயங்களில் பகுத்துரைத்து செயற்படாவிடில், அதன் விளைவுகள் எதிர்மறையாக, பன்முகப்பட்டவையாக மாறவும் நேரிடலாம்.

தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்று கூறி காலத்தைக் கடத்தி எல்லோரையும் ஏமாற்றிவிடமுடியாதே! இன்றைய அனைத்துலக அரசியல் அரங்கில் எதையும் ஒளித்துப் பிடித்து விளையாடுவதும் மறைப்பதும் இயலாதனவாகிவிட்டன. இதனை இலங்கை அரசு தரப்பினர் எப்போது உணரப் போகின்றனரோ....?

# ஒரே பாடசாலையில் தொடர்ந்து 7 வருடங்கள் கற்பித்த உயர்தர ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

## வலயத்துக்குள் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.17

ஒரே பாடசாலையில் தொடர்ந்து ஏழு வருடங்கள் பணியாற்றிய, 55 வயதுக்கு உட்பட்ட, உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வலயத்துக்குள்ளான இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று கூறப்பட்டது.

ஓரிரு வாரங்களில் இந்தச் செயற்பாடு நடைமுறைக்கு வந்துவிடும் என்று இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர்ந்து ஒரே பாடசாலையில் 7 வருடங்கள் பணியாற்றுபவர்கள் வலயத்துக்குள் பிறிதொரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படல் வேண்டும்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இடமாற்ற நடவடிக்கை இதனுடன், 2012 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் 55 வயதைப் பூர்த்தி செய்யாத ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்பு கணிதம், உயிரியல், கலை, வர்த்தகபிரிவு ஆசிரியர்களுக்கானது.

உயர்தர வகுப்பில் கற்பிக்கும் இடமாற்றம் பெறத் தகுதியுடைய ஆசிரியர்கள் அனைவரும் உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை நிறைவடைந்தவுடன் மூன்றாம் தவணை ஆரம்பத்தில் இடமாற்றம் செய்யப்படுவர்.

ஏனைய வகுப்பு ஆசிரியர்கள், பிரதி அதிபர்கள், அதிபர்கள், பகுதித் தலைவர்கள் அனைவரும் வருடாந்தம் ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்படுவர்.

இடமாற்றங்களுக்கான ஏற்பாடுகள் யாவும் ஒவ்வொரு வலயங்களிலும் உள்ள இடமாற்ற சபைகளின் ஊடாக தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஓரிரு வாரங்களில் இவை நடைமுறைக்கு வந்து விடும்.

மாகாண கல்வித் திணைக்களம் வெளியிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த இடமாற்றம் செப்ரெம்பர் 3 ஆம் திகதி நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (ம-4)

# ஒரு லட்சம் முருங்கை நாற்றுகள் மாவட்ட ரீதியாக விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.17

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் ஏழு தனியார் நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டு ஒரு லட்சம் முருங்கை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப் பட்டு ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண காணி, கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன கடற்றொழில் அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம். ஹால்டீன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

முருங்கை நாற்றுமேடைகள் அமைப்பதற்காக பொருளாதார அமைச்சினால் 5.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

உற்பத்தி செய்யப்பட்ட முருங்கை நாற்றுக்கள் ஏனைய மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்துக்கு 30 ஆயிரத்து 749, நாற்றுக்களும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 5 ஆயிரம் நாற்றுக்களும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 7 ஆயிரத்து 915 நாற்றுக்களும், மன்னார் மாவட்டத்துக்கு 4 ஆயிரம் நாற்றுக்களும், வவுனியா மாவட்டத்துக்கு 5 ஆயிரத்து 936 நாற்றுக்களும் வழங்கப்பட்டன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு ஆயிரம் நாற்றுக்கள் வழங்கப்பட்டன.

வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் மரக்கறிச் செய்கைகள் அதிக விளைச்சலையே தருகின்றன.

தென்மாகாணத்திலும் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்காக 5 லட்சம் முருங்கை நாற்றுக்களை வழங்கி பயன் பெறுவதற்கு திவிநெகும திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று கூறினார்.

(ம-13)

# 'சாதாளை' சேதனப் பசளை சாட்டியில் வைத்து விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.17

வயல்கள், தென்னந்தோட்டம் மற்றும் தோட்டப் பயிர் உற்பத்திக்கான சேதனப் பசளையான ''சாதாளை''சாட்டியில் வைத்து மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

குடாநாட்டில் உள்ளோர் சாட்டி ''சாதாளை'' பசளையை பெற விருப்பம் தெரிவிக்குமிடத்து உடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

''சாதாளை''யைப் பெற விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு வேலணை பிரதேச சபை சுகாதார அலுவலர்களின் உதவியுடன் வாகனங்களில் ஏற்றி விநியோகிக்கப்படும்.

இந்தப் பசளையைப் பெற வருபவர்கள் வேலணை பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ள முடியும்.

இதற்கான ஒழுங்குகளை வேலணை உப-அலுவலக பொறுப்பதிகாரி பி.பாலசுப்பிரமணியம் மேற்கொண்டுள்ளார். (ம-50)

## வீதி அகலிப்பு பணி செய்யும் டிப்பருடன் மோதி விபத்து

யாழ்ப்பாணம், செப்.17

வீதி அகலிப்புப் பணிக்கு பொருள்களை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த டிப்பர் வாகனம் அவ்வழியே வந்த மோட் டார் சைக்கிளுடன் மோதியதில் அதில் பயணித்தவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நாவற்குழி-கேரதீவு வீதியில் இடம் பெற்றது.

தனங்களப்பைச் சேர்ந்த விவேகானந்தம் பிரகாஷ் (வயது-32) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பேராளர் மாநாடு வவுனியாவில்

யாழ்ப்பாணம், செப்.17

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55 ஆவது பேராளர் மாநாடு வவுனியாவில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மாநாட்டில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் தமது கடமை விடுமுறையையும் ரயில் பயணச் சீட்டையும் பெறுவதற்கு அதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் விண்ணப்பிக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த மாநாடு வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகில் வவுனியா முத்தையா மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது.

''ஆசிரியர், அதிபர் மாணவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குப் போராடுவோம்'' எனும் தொனிப் பொருளில் இந்த வருடத்துக்கான மாநாடு நடைபெறவுள்ளது. குறிப்பாக மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகளில் நடைபெறும் பிரச்சினைகளையும் நாட்டின் சமகால பிரச்சினைகளையும் ஆராய்ந்து முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிக்கப்படவுள்ளது.

மாநாட்டில் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. அழைப்பிதழ் இன்றி மாநாட்டு மண்டபத்துக்கு எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு தாபனக்கோவை பிரிவின்படி ஒரு நாள் கடமை விடுமுறையும், ஒரு சோடி ரயில் பயணப்பத்திரமும் ஆசிரியர்களுக்கு உண்டு.

இந்த உரிமைகளை மறுப்பதற்கு அதிபர்களுக்கோ வேறு அதிகாரிகளுக்கோ உரிமை யில்லை. கடமை விடுமுறையும் ரயில் பயணச் சீட்டையும்பெறுவதற்குஅதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

வடமாகாண ஆசிரியர்களுக்கு ரயில் சேவை இல்லை. எனவே பயணச்சீட்டுப் பெற வேண்டிய அவசியம் இல்லை.- என்று மேலும் தெரிவித்தார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையிழந்த நிலையில் சொந்த மண் திரும்பிய மக்கள்

## இதுவரை அனுமதி கிடைக்காத போதும் புதுக்குடியிருப்பு, மந்துவிலில் துப்புரவுப் பணிகள்

வவுனியா,செப்.17

மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மந்துவில் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த மக்கள் பொறுமையிழந்து அனுமதி பெறாது தமது சொந்த இடங்களைத் துப்புரவு செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போர் நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தவர்களில் பெரும்பாலானோர் முல்லைத்தீவுச் செயலகத்தால் புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

ஆனால் மந்துவில் பகுதியைச் சேர்ந்த மக்கள் இதுவரை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படாது மெனிக்பாம் நலன்புரி நிலையங்களிலும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இவர்களை அவர்களுடைய சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான அறிவித்தல் நலன்புரி நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும், மிதிவெடி அகற்றும் பணி நிறைவடையவில்லை என்பதைக் காரணம் காட்டி இதுவரை மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இப்பகுதியைச் சூழவுள்ள அனைத்துப்பகுதிகளும் குறிப்பாக மல்லிகைத்தீவு, ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இதனால் மந்துவில் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளில் எஞ்சிக் காரணப்படுகின்ற வீட்டுத் தளபாடங்கள் களவாடக் கூடிய சூழ்நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் நீண்டகாலமாக நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தற்போது நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால், அப்பகுதிகளில் திருடர்களின் பயம் அதிகரித்துள்ளதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் விரக்தியின் விளிம்புக்குச் சென்ற மந்துவில் பகுதியைச் சேர்ந்த மக்கள் இராணுவத்தினரின் அனுமதி எவையுமின்றித் தமது வீடுகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மந்துவில் பகுதியில் இருபகுதியினருக்கும் இடையில் கடுமையான போர் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-410)

## கிராம யுவதிக்கு தண்டம்

முல்லைத்தீவு,செப்.17

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு வைத்திருந்த இளம் யுவதிக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப்பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பை தனது உடைமையில் வைத்திருந்த இளம் யுவதி ஒருவரை கடந்த 12 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து மறுநாள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இந்தப் பெண்ணுக்கு நீதிமன்றத்தால் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதுடன், இதனைச் செலுத்தத் தவறின் ஒரு மாத கால சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் மெனவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (க-6)

## நாற்று மேடைப் பராமரிப்பு

கிளிநொச்சி,செப்.17

கிளிநொச்சி மாவட்டத்தில் நாற்றுமேடைப் பராமரிப்புக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நாற்று மேடைப் பராமரிப்புக் கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கு நாற்றுமேடைப் பராமரிப்பு கூடாரங்கள் கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களத்தினூடாக போதனாசிரியர் பிரிவுகளின் ரீதியாக வழங்கப்பட்டுள்ளன. (க-6)

## பனைகளை வெட்டிச் சாய்த்தவர் கைது

கிளிநொச்சி பளைப் பகுதியில் அனுமதியின்றிப் பனை மரங்களை வெட்டிய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பளை தர்மக் கேணிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி பனைமரங்களை வெட்டி உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்ற ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க-6)

## வீதியில் போதை; பறிபோனது ரூபா 1,500

கிளிநொச்சி,செப்.17

முழங்காவில் பகுதியில் மதுபோதையில் இடையூறு விளைவித்த ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் வீதியால் பயணித்தவர்களுக்கு மது போதையில் இடையூறு விளைவித்த நபர் முழங்காவில் பொலிஸாரல் கைது செய்யப்பட்டுக் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இந்நபரை ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (க-6)

## அக்கராயன் பகுதியில் மதுவின் ஆதிக்கம்

கிளிநொச்சி,செப்.17

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் சட்டவிரோத மது உற்பத்தி நிலையங்கள், மற்றும் அனுமதியற்ற மதுபான விற்பனை நிலையங்கள் அதிகளவில் இயங்கிவருவதால் இங்குள்ள பலரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் குளம் மருத்துவமனையை அண்டிய பகுதிகள், அணைக்கட்டு வீதி, மற்றும் கெங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் சிறுசிறு வர்த்தக நிலையங்களிலும் மதுபான விற்பனை இடம்பெற்று வருகின்றது.

இதனால் அப்பகுதிகளைச் சூழவுள்ள சிறுவர்கள், குழந்தைகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் அசௌகரியங்களுக்குச் உள்ளாகி வருகின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)



ஓமந்தையில் அமைந்துள்ள வவுனியா அரச உத்தியோகத்தர்களின் வீடமைப்புத் திட்ட காணிகளுக்குச் செல்லும் வீதி மண் வீதியாகக் காணப்படுவதால் பல்வேறு வசதியீனங்களுடன் போக்குவரத்து. (க-402)

## விதை உற்பத்தி வயல் விழா தச்சடம்பன் கிராமத்தில்

முல்லைத்தீவு,செப்.17

ஒலுமடு விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட தச்சடம்பன் கிராமத்தில், நிலக்கடலை விதை உற்பத்திக்கான வயல் விழா கடந்த வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கடலை விதை உற்பத்தியை விருத்தி செய்வதை மையமாகக் கொண்டு இடம்பெற்ற இந்த விழா விவசாயப் போதனாசிரியர் எஸ்.கபிலன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் தி.திரேஸ்குமார், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக விதை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், விவசாய உதவிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வானம் பொய்த்துக் கடும் வறட்சி இங்கு நிலவி வருகின்ற போதிலும் நிலக்கடலை விதை உற்பத்தியை இங்கு வெற்றிகரமாக மேற்கொண்டு இன்று மிகப் பெரிய விழாவாக கொண்டாடுகின்றமை பெரு மகிழ்வைத் தருவதாக விவசாய போதனாசிரியர் கபிலன் தெரிவித்தார். (க-500)

# போதிய நிதி கிடைத்தால் ஒரே நாளில் 10 மாத கடன்

## முல்லை. கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா,செப்.17

வடமாகாண கல்வித் திணைக்களத்திலிருந்து போதிய நிதி கிடைக்கப் பெறுமாயின், ஆசிரியர்களின் 10 மாதச் சம்பளக் கடனை ஒரே நாளிலேயே வழங்க முடியும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வரதராஜமூர்த்தி.

முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், தமது 10 மாத சம்பளத்தைக் கடனாகப் பெறுவதில் பல்வேறு இடையூறுகள் தோன்றியுள்ளதாக தெரிவித்தமை தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தக் கடனைப் பெறும் பொருட்டு சுமார் 300 விண்ணப்பங்கள் கல்வி வலயத்துக்கு கிடைத்துள்ளன. ஆனால் விண்ணப்பித்த அனைவருக்கும் கடனை வழங்குவதற்கான நிதி கிடைப்பதில்லை. இதனால் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களுள் அவசர தேவையுடையோர் தெரிவு செய்யப்பட்டு அவ்வப்போது கிடைக்கும் நிதியின் மூலமாக அவர்களுக்குக் கடனை வழங்கி வருகின்றோம்.

எமக்குக் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் அனைத்துக்கும் தேவையான நிதி கிடைக்கப் பெறுமாயின் ஒரே நாளிலேயே அனைவருக்கும் கடனை வழங்க எம்மால் முடியும்.- என்றார்.

இதேவேளை இக்கடனைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுள் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் இதனைப் பெற முடியாத நிலையில் உள்ளதாக ஆசிரியர் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த தமக்குத் தமது வீடுகளைப் புனரமைப்பதற்கான தேவையிருப்பதாகக் கூறும் இவர்கள் தாம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துப் பல மாதங்கள் கடந்து விட்ட போதிலும் கடனைப் பெற முடியாத நிலையே தொடர்வதாகவும் மேலும் தெரிவித்தனர்.

மேலும் கல்வி வலயத்தில் பணி புரியும் சில அதிகாரிகளின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு கடன் வழங்கப்படுவதாகவும் இவர்கள் குற்றம் சுமத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-400)

# சொந்தக் காணிகள் இல்லாது அவதியுறும் 1050 குடும்பங்கள்

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் சுமார் ஆயிரத்தி ஐம்பது குடும்பங்களுக்குச் சொந்தக்காணிகள் இல்லாமையால் உதவிகள் பெறுவதில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உமையாள்புரம், பரந்தன், கோரக்கன்கட்டு ஊரியான், முரசுமோட்டை, கண்டாவளை கல்மடுநகர், புளியம்பொக்கணை, தருபுரம், மயில்வாகனபுரம், பிரமந்தனாறு, தட்டுவன்கொட்டி கண்ணகை நகர் உள்ளிட்ட இடங்களில் சுமார் ஆயிரத்தி 50 குடும்பங்கள் வரை சொந்தக்காணிகள் இன்றி வாழ்ந்து வருகின்றன.

இவர்களுக்குக் காணிகளை வழங்குவதற்கு இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் மேற்படி பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவப் படைப்புரிவுகள் சுமார் 183 ஏக்கர் தனியார் மற்றும் அரச காணிகளை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு அக்காணிகளைத் தமக்கு வழங்குமாறு வற்புறுத்தி வருகின்றனர். இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில் மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் தனியாருக்கு விவசாயச் செய்கைகளுக்கு வழங்கப்பட்ட காணிகளே அதிகளவில் இருக்கின்றன.

அத்துடன் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் தமக்கான குடிதண்ணீர் வசதிகள் இன்றி தினமும் அவதிப்படுகின்றனர். ஆங்காங்கே தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அது போதியளவு இடம்பெறுவதில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த வியாழக்கிழமைக்குப் பின்னர் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை என்றும், இதைவிட பாடசாலை வசதிகளோ அல்லது வீட்டு வசதிகளோ இல்லாது தாம் அவதிப்படுவதாகவும் இந்தப்பகுதி மக்கள், விசனம் தெரிவித்துள்ளனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா, நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்ற கண்காட்சியில் இந்த மாதிரித் தொலைத் தொடர்புக் கோபுரம் அனைவரதும் கவனத்தை ஈர்த்துக் கொண்டது.

# முழங்காவில், செட்டிகுளம் பகுதிகளில் வெடி மருந்து, துப்பாக்கி ரவைகள் மீட்பு

## யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்

கிளிநொச்சி,செப்.17

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் வெடிமருந்துகள் மற்றும் குண்டுகள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஐந்து சந்தேக நபர்கள் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வாராந்தம் நடைபெறும் ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முழங்காவில் பகுதியில் கிளிநொச்சிப் பொலிஸார் தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் அந்த வேளையில் 950 கிராம் சி4 வெடி மருந்துகள் மற்றும் கைக்குண்டுகள் 9 ஆகியவற்றுடன் ஐந்து சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா செட்டிகுளம் பொலிஸாரால் துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் ரவைகள் துப்பாக்கிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

செட்டிகுளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையைத் தொடர்ந்து 3100 துப்பாக்கி ரவைகள் நிலத்தின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப் பட்டன.

மேலும் இருவரிடமிருந்து இடியன் துப்பாக்கிகள் 2 மீட்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-86)

# அரச தரப்பு உறுப்பினருக்கு எதிராக மூன்று வழக்குகள்

## மன்னார் நீதிமன்றத்தில்

மன்னார் நகரசபையின் அரச தரப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்கு எதிராக மன்னார் பொலிஸார் மூன்று வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

மன்னார் நீதிமன்றத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இவர் ஏற்கனவே பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் மீது நீதிமன்றத் தாக்குதல் சம்பவம், ஊடகவியலாளர்களுக்குக் கொலை மிரட்டல் விடுத்தமை, கோந்தைப்பிட்டியிலுள்ள மீன் வாடிகளை உடைத்துச் சேதமாக்கியமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் பொலிஸார் வழக்குத் தாக்குதல் செய்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் இம்மாதம் 24 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது. இதன் போது அமைச்சர் ரிஷாத் பதியுதீனையும் அன்றைய தினம் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு மன்னார் பதில் நீதிவான் எஸ்.ஆர்.எம். திஸாநாயக்க உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-12)

# முதியோர் சங்கக் கூட்டம்

வவுனியா நகர சபை முதியோர் சங்கத்தின் மாதாந்தக்கூட்டம் முதியோர் சங்கத்தின் தலைவர் தா.சலசலோசன் தலைமையில் முதியோர் நலன்சார் பலநோக்கு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன் போது போரினால் பாதிக்கப்பட்ட முதியவர்கள், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட முதியவர்கள், பல்வேறு மன உளைச்சலுக்கு உள்ளான முதியவர்கள் என வவுனியா நகரத்தைச் சார்ந்த பல முதியவர்களுக்குத் தியானப்பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தத் தியானப் பயிற்சியை பிரம்மகுமாரிகளின் இராஜயோக வவுனியா நிலையத்தைச் சேர்ந்த சகோதரிகள் வழங்கினர். முதியவர்களைப் பல்வேறு மனஅழுத்தங்களில் இருந்து விடுவித்து மன உறுதியை வளர்த்துத் தனிமையைப் போக்கி மனதில் இனிமையையும் சந்தோசத்தையும் உண்டு பண்ணிச் சமூகத்தின் பால் அக்கறை கொள்ளும் செயல் முறைக்கான அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதில் சிறப்பு விருந்தினராக கிராமசேவகர் வீ.ஜெகசோதிநாதன் கலந்துகொண்டார்.

(க-402)

# மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் மாணவர்களுக்கு காத்திருக்கும் ஆபத்து

மன்னார்,செப்.17

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு முன்பாக வீதிக் கடவைகளும், பாதுகாப்புக் குறியீடுகளும் அமைக்கப்படாததால் பாடசாலை செல்லும் மாணவர்கள் உயிராபத்தை எதிர்கொள்வதோடு வீதியைக் கடந்து பாடசாலைகளுக்குச் செல்வதற்குச் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் ஓய்ந்த பின்னர் மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் வாகனப் போக்குவரத்து பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. வெளியிடங்களிலிருந்து வரும் ஏராளமான வாகனங்கள் மன்னாருக்கு வருவதற்கு இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றன. இதனால் வாகன நெரிசலும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் உயிலங்குளம் மற்றும் முருங்கன் பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்த வீதியூடாகவே செல்கின்றனர்.

**இவர்கள் வீதியைக் கடந்து பாடசாலைகளுக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மஞ்சள் கோட்டுக் கடவையோ அல்லது போக்குவரத்துப் பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கையோ இங்கு இல்லாததால் மாணவர்கள் வீதியைக் கடந்து செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்**

ஆனால் இவர்கள் வீதியைக் கடந்து பாடசாலைகளுக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மஞ்சள் கோட்டுக் கடவையோ அல்லது போக்குவரத்துப் பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கையோ இங்கு இல்லாததால் மாணவர்கள் வீதியைக் கடந்து செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் வேகமாகச் செல்லும் வாகனங்களால் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இதனால் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு என்ன நேருமோ என்ற அச்சத்துடன் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மன்னார் நகரிலுள்ள பாடசாலைகள் முடிவடைகின்ற போது மன்னார்ப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் அர்ப்பணிப்புடன் பாடசாலைகளுக்கு முன்னால் நின்று சேவையாற்றுவதைக் காணமுடிகின்றது.

இதனைப் போன்று முருங்கன் பொலிஸாரும் செயற்பட வேண்டுமென இங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-12)

# பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு சந்தேக நபர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் 13 வயது சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள முரசுமோட்டைப் பகுதியில் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றஞ்சாட்டின் பேரில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 14 ஆம் திகதி புதுக்குடியிருப்புப் பகுதியில் வைத்துக் கைது செய்துள்ளனர். இதேவேளை பரந்தன் பகுதியில் எட்டுவயதுச் சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சந்தேக நபரைப் பொலிஸார் தேடி வருகின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

(க-6)

# அடிப்படை வசதிகள் ஏதுமின்றி சிரமத்தில் மீள்குடியமர்ந்த மக்கள்

## வெடி பொருள்களுக்கு மத்தியில் அச்சத்துடன் வாழ்வதாக தெரிவிப்பு

முல்லைத்தீவு,செப்.17

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் அண்மையில் எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி வெறும் பற்றைக் காடுகளுக்குள் மீள்குடியமர்வு என்ற பெயரில் இறக்கிவிடப்பட்ட தாம் குடிதண்ணீர் வசதி உட்பட ஏனைய அடிப்படை வசதிகள் இன்றிச் சிரமப்படுவதாக மீள்குடியமர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு கைவேலி, ஆனந்தபுரம், மல்லிகைத்தீவு, மற்றும் புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை வலைஞர் மடம் ஆகிய பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களே மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி முதல் எட்டாம் திகதி வரை மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகள் எவையும் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. குடிதண்ணீர் தொடக்கம் வீட்டுவசதிகள், கழிப்பறை வசதிகள், மாணவர்களுக்கான பாடசாலை வசதிகள் வரை என எதுவித வசதிகளும் இன்றி தாம் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் ஐந்தாம் வட்டாரம், ஆறாம் வட்டாரம் ஆகிய பகுதிகளில் மீள்குடியமர்வு என்ற பெயரில் வெடிக்காத எறிகணைகள் வெடிபொருள்கள், மத்தியிலுமான பற்றைக்காடுகள் வளர்ந்துள்ள காணிகளில் தாம் இறக்கி விடப்பட்டுள்ளதாகவும் இந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீடுகளை அமைப்பதற்கெனக் காணிகளைத் துப்புரவு செய்யும் போது, ஆபத்தான நிலையில் வெடி பொருள்களும், உருக்குலைந்த நிலையில் மனித சடலங்களின் எச்சங்களும், எரியூட்டப்பட்ட மனித எச்சங்களும் பரவலாகக்காணப் படுவதாகவும் மேலும் தெரிவிக் கப்படுகின்றது.

அத்துடன் சில இடங்களில் மனித உடல்களைப் புதைத்த தடயங்கள் காணப்படுவதாகவும், இதனால் தாம் அச்சத்தின் மத்தியில் வாழ்வதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

(க-8)



திருகோணமலை, முருகாபுரியில் நாய்க்குட்டியொன்று தும்பிக்கை போன்ற முகத்துடன் அதிசயமாகப் பிறந்துள்ளது. எனினும் குறித்த நாய்க்குட்டி பிறந்து சில மணிநேரங்களில் உயிரிழந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**OBTAIN YOUR U.K ABC AWARD (QCF)**
QUALIFICATION IN
HOSPITALITY WORLD LEADING INDUSTRY
PORTFOLIO METHOD ON LINE TRAINING
ACADEMY IN JAFFNA and MANIPAY
Further Details CONTACT
* S.SENTHILINGAM (0771286382) (ABC -AWARD Examiner)
* JUDE PRATHEPAN (0778536736) (LANKA A.B.C - AWARD TUTOR)
NEW STUDENTS ADMISSION 17.09.2012 - 20.09.2012
LANKA SKILL DEVELOPMENT ACADEMY

# வரலாற்றுக் கடமையை மு.கா. நிறைவேற்ற வேண்டும்

திருகோணமலை,செப்.17

சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் கிழக்கில் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க வரலாறு வழியைக் காட்டியுள்ளது. இந்த வழியில் பயணிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைகோர்க்க வேண்டும். இதனூடாகத் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கமுடியும்.''

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருமலை மாவட்டக் கிளைத் தலைவருமான க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்க வரலாறு எமக்கு வழியைக் காட்டியுள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் தவறவிடக்கூடாது. சிறுபான்மை இனங்களான நாம் இவ் வழியில் ஒற்றுமையுடன் பயணிக்கவேண்டும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைகோர்த்தால்தான் கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மை சமூகத்தினர் ஆட்சியமைக்கலாம்.

தமிழ் மக்கள் காலம்காலமாக உரிமைக்காகப் போராடி வருகின்றனர். அதேபோல முஸ்லிம் மக்களும் தங்களின் உரிமைகளை இந்த நாட்டில் வென்றெடுக்கவேண்டும். இதற்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

கிழக்குத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து கூட்டமைப்பை வெற்றிப்பாதையில் விட்டுள்ளனர். அதேபோல பெரும்பாலான முஸ்லிம் மக்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்து கட்சியின் பெருமையை நிலை நாட்டியுள்ளனர்.

அரசில் இருந்து விலகி தனியாக மு.கா. தேர்தலில் போட்டியிட்டதனாலும், தேர்தலின் பின்னர் தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து மு.கா. ஆட்சியமைக்கும் என்ற நம்பிக்கையினாலும்தான் தாம் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்தோம் என கிழக்கில் உள்ள பெரும்பாலான முஸ்லிம் மக்கள் எம்மிடம் கூறியுள்ளனர். அதேவேளை, கூட்டமைப்புடன் இணைந்து மு.கா. ஆட்சியமைக்க வேண்டும் என்று கிழக்கு புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்கும் வரலாற்றுக் கடமையை மு.கா. செய்ய வேண்டும். அதைவிடுத்து அரசுடன் இணைந்து ஆட்சியமைத்து மாபெரும் வரலாற்றுத் துரோகத்தை மு.கா. செய்யக்கூடாது.

கிழக்குத் தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக வெளியான தினமன்றே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், மு.காவுடன் இணைந்து ஆட்சியை அமைக்க அழைப்பு விடுத்துள்ளார்.

முதலமைச்சர் பதவியைக்கூட மு.காவுக்கு விட்டுக் கொடுக்கிறது கூட்டமைப்பு- என்றார்.

(ச-சி)

## ஐ.தே.க.குழுத் தலைவராக தயாகமகே

கிழக்கு மாகாண சபையின் ஐ.தே.க. குழுத் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரான தயாகமகே நியமிக்கப்பட்டுள்ளார். அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய வேட்பாளர்கள் அனைவரிலும் அதிகூடிய விருப்பு வாக்குகளை (41,067) இவர் பெற்றிருந்தார் என்பதுடன், கிழக்கு மாகாணத்திலும் ஒட்டுமொத்தமாக இவரது விருப்பு வாக்குகளே முதலிடம் பெற்றுள்ளது. (ச)

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் சிதம்பரப்பிள்ளை தபேந்திரநாதன்
(அன்ரியப்பா)



மலர்வு
23.03.1954

உதிர்வு
29.09.2011

எங்கள் அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து
இன்று ஓராண்டு ஆனதுவோ -இல்லை இன்னும்
எம்மோடுதான் உம் நினைவுகள் இன்று மட்டுமல்ல
என்றென்றும் நீங்கள் எல்லோர் மனதிலும் சிரித்திடும்
இன்முகத்துடன் வாழ தினம் தினம் இறைவனை
வேண்டுகிறோம்.

உன்குலத்தை
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(சி/3423)(9.14)

உம் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

(மண்டைதீவு 6)
கண்ணதாசன் கிருஷ்ணருபன்
(கிருஷ்ணா)



திதி நாள் - பூர்வபக்க துதியை
(17.09.2012)

மலர்வு
10.01.1989

உதிர்வு
29.09.2011

பாசத்துடன் பவனி வந்தாய்
நேசத்துடன் பழகி வந்தாய்
காசினியில் கவரும் உன் புன் சிரிப்பு
மனம் மிகிழக் குறும்பு செய்தாய்
சோகத்தில் ஆழ்த்திப் பிரிந்து சென்றாய்
கடமையும் கண்ணியமும் இவ்வுலகுக்கு
பொருந்தாதென அங்கு அழைத்தனரோ
மறுக்காது நீயும் பணி செய்யச் சென்றனையோ
விதி வரைந்த பாதையில் நீ எமைவிட்டுச் சென்றாலும்
உன் சிரித்த முகம் எம் கண்முன்னே நிழலாடுகிறது
கிருஷ்ணா...
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

6.ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(சி/3404)(9.14)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

திருமதி சு.மல்லிகாதேவி



எம்மோடு பழகி ஒன்றாகி சேவை செய்த திருமதி சு.மல்லிகாதேவியின் மறைவுச் செய்தி கேட்டு மனம் கலங்கியுள்ளோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுவதுடன் அவரின் இழப்பால் துயருற்றுள்ள அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கின்றோம்.

சாந்தி...சாந்தி..சாந்தி.

பணியாளர் நலன்புரி சங்கம் ஆயுர்வேத
வைத்தியசாலை, கைதடி.

(22982)(9.14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மனோகரன்
பிரதீப்

Best Wishes

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் (SLEAS)
நியமனம் பெறும் எமது நண்பர் மனோகரன் பிரதீப்
அவர்களை மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

(22986)(8.14)

யாழ். பல்கலைக்கழக
சங்கானை, நண்பர்கள்.

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருவது எதிர்வரும் (30.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு எமது சங்கப் பணிமனையில் பொதுக் கூட்டம் இடம்பெறும் என்பதனை அனைத்து அங்கத்தவர்களிற்கும் அறியத் தருகின்றோம். தவறாது கலந்து கொள்ளவும்.

செயலாளர்
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.

## மரண அறிவித்தல்

ஆசைப்பிள்ளை ரூபதாஸ்

(முன்னாள் தலவாக்கலை அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொட்டைக்காடு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை ரூபதாஸ் நேற்று (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை மற்றும் ஆனந்தம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், திரு. திருமதி கோபாலசிங்கம் தம்பதியரின் அன்புமருமகனும், பானுமதியின் அன்புக்கணவரும், சரண் (யா / இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்), யுவன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், சறோஜினி, சுலோஜனா, சுசீலா, சாந்தா (ஜேர்மனி), சிகமாலா (கனடா), சித்திரா (கனடா), சண்முகதாஸ் (நோர்வே) ஆகியோரின் அன்புச்சகோதரனும், நடேசன் (வியாபாரம், உரும்பிராய் காலஞ்சென்ற சந்திரபோஸ் மற்றும் ரவீந்திரன், ராஜேந்திரா (ஜேர்மனி), வசந்தன் (கனடா), புவனி (நோர்வே), கோமதி, கோகுலதாஸ், ஜெகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேன் (லண்டன்), சுஜிதரன் (உரிமையாளர் சண் மிக்ஸ் நெற்வேக், உரும்பிராய்), தினேஸ், Dr.சிவானுஜா (பொது வைத்தியசாலை, களுத்துறை), சரண்ஜா (சுவிஸ்), தஜி, நிஷாந், கிசோன்மாறன் (சம்பத்வங்கி, யாழ்ப்பாணம்), நிஷானி (கனடா), ஜஸ்மினா (ஜேர்மனி), ஸ்வன்ஜா (ஜேர்மனி), தர்ஷா (கனடா), பபிகா (கனடா), திவிஷன் (கனடா), ரீத்திகா (கனடா), ரூபிகா (கனடா) ஆகியோரின் அன்புமாமனும், சேரன் (நோர்வே), மாறன் (நோர்வே) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொட்டைக்காடு, கோண்டாவில்

(சி/1558)(8-14)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணைக்கு வாழ்வாதார உதவி

**பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் இந்தத் திட்டத்தின் போது கவனத்தில் கொள்ளப்படும்.**

யாழ்ப்பாணம், செப்.17

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளுக்கு எதிர்காலத்தில் வாழ்வாதார மற்றும் சிறு உட்கட்டுமான உதவிகள் வழங்கப்படும்.

இவ்வாறு கெயர்-சர்வதேச நிறுவன ஆலோசகர் செல்வி ஜெ.எஸ்தர் தெரிவித்தார்.

வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்விலேயே எஸ்தர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்களும் போரால் பாதிக்கப்பட்ட விதவைப் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களும் அதிகம் உள்ளமை புள்ளிவிவரம் ஊடாக அறியக் கூடியதாக உள்ளது.

இவ்வாறான மக்களுக்கு உதவ எம்மால் சில உதவிகள் எதிர்காலத்தில் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.


இதில் வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா உரையாற்றுகையில்:-

கடந்த 20 வருட காலமாக இந்தப் பிரதேசம் அபிவிருத்தி இன்றி உள்ளது.

படித்த இளைஞர், யுவதிகள் வேலையற்று உள்ளனர். மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பிரதேசங்களில் மக்கள் வீடுகள் இன்றி சிறு கொட்டில்களில் வாழ்ந்து வருகின்றனர்.

குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. 70 வீதமான மக்களுக்கு இன் னும் மின்சாரம் கிடைக்கவில்லை. - என்று கூறினார். (ம-50)

## புல்லுக்குள கழிவினால் வீதியில் பயணிப்போர் பெரும் சிரமத்தில்



யாழ்ப்பாணம், செப்.17

யாழ்.நகரில் முற்றவெளி புல்லுக்குளத்தில் இருந்து அகற்றப்படும் கழிவுப் பொருள்கள் வீதியோரத்தில் கொட்டப்படுவதால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

புல்லுக்குளத்தின் தண்ணீர் முழுமையாக வற்றியதை அடுத்து இந்தக் குளம் கனரக வாகனம் மூலம் ஆழமாக்கப்பட்டு வருகிறது.

கனரக வாகனங்களின் உதவியுடன் ஆழமாக்கி அகற்றப்படும் சேற்று கழிவுகள் புல்லுக்குளம் வீதியோரத்தில் கொட்டப்பட்டு வருகின்றன.

கொட்டப்படும் சேறுகள் உடன் அகற்றப்படாமையால் குறித்த வீதியில் செல்லும் வாகனங்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ம-17)

## செம்மணியில் பாலம் திருத்த வீதித் தடை

யாழ்ப்பாணம், செப்.17

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் சங்கிலித் தோப்பு-செம்மணி வீதியில் 2/2 இலக்க பால திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பார ஊர்திகள்-மாற்று வழிப் பாதையைப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இந்த வீதிப் பாவனையாளர்கள் மாற்று வழியாக ஆனந்த லட்சுமி வீதி, இளையதம்பி வீதி ஆகிய வீதிகளைப் பயன்படுத்தலாம் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ம-14)




கே.ஆர்.டேவிட்டின் "பாடுகள்" சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் வி.றி.கணேசலிங்கம் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர் சி.குமரவேல் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். (ம-14)

## நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் கழிவுகள் கொட்டுவதற்கு இடம்

யாழ்ப்பாணம், செப்.17

நீர்வேலி வடக்கு மற்றும் கோப்பாய் பிரதேசக் கழிவுகளைக் கொட்டுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் உள்ள இந்து மயானங்களுக்கு அருகில் ஒதுக்கப்பட்ட இடங்களில் கழிவுகளைக் கொட்டுவதற்கு வலி.கிழக்கு பிரதேச சபை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தப் பகுதிகளில் கொட்டப்படும் கழிவுகள் நிலத்துள் புதைக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகள் இங்கேயே கொட்டப்பட வேண்டும் என்றும் பிரதேச சபை தெரிவித்துள்ளது. (ம-17)

## பெண்களுக்கான உடற் பயிற்சி' கூடம் ஆரம்பம்

சாவகச்சேரி, செப்.17

சாவகச்சேரி புவேந்தன் முன்பள்ளி அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் உடற்பயிற்சிக் கூடமாக மாறியுள்ளது. தினமும் மாலை வேளையில் வயது வேறு பாடின்றி முப்பதுக்கும் மேற்பட்ட மாதர்கள் உடற்பயிற் சிக்காக வருகின்றனர்.

சங்க உறுப்பினர் திருமதி சற்குணநாதன் சாந்தசிவரூபி ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உடற்பயிற்சி சாதனங்களை வழங்கியதையடுத்து, தினமும் பலர் உடற்பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாக சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தெரிவித்தார். (ம-9)

## யாழ்.பிரதேச செயலர் பிரிவில் ரூ.42 மில்.செலவில் வீதி திருத்தம்

**அனுமதி கிடைத்ததும் பணிகள் ஆரம்பம்**

யாழ்ப்பாணம், செப்.17

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (நெல்சிப்) யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட குறிக்கப்பட்ட வீதிகள் 42 மில்லியன் ரூபா நிதியில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கமைவாக 8 மில்லியன் ரூபா நிதியில் ஜின்னாவீதி, அசாத்வீதி, காதி அபூபக்கர் வீதி, ஐதரிஸ் மக்கா வீதி, பேடிலேன் வீதிகள் திருத்தம் செய்யப்படவுள்ளதுடன் வடிகால்கள், மதகுகள் என்பனவும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கொட்டடி வீதி, சின்னக்கடை நான்காம் குறுக்கு வீதி, குருநகர் தண்ணீர் தாங்கி முதலாம், மூன்றாம் குறுக்கு வீதிகள், வடிகால் என்பன 7 மில்லியன் ரூபா செலவிலும், மாவடி வீதி, ஜமால்வீதி, வைரவர் கோயில் கற்குளம் வீதி, வடிகால் திருத்தம் என்பன 7 மில்லியன் ரூபா செலவிலும் பாரதி வீதியும், உப ஒழுங்கைகளும், ஸ்ரான்லி வீதி ஒழுங்கை, பேரின்பநாயகம் வீதி திருத்தம் 7 மில்லியன் ரூபா செலவிலும், மடம் வீதி, மத்தியூஸ் வீதி வடிகால்கள் புனரமைப்பு 6 மில்லியன் ரூபா செலவிலும், சுவாமியார் வீதி, உப்புக்குளம் வீதி, குறுக்கு வீதிகள், றெக்கிளமேசன் வீதி புனரமைப்பு என்பன 7 மில்லியன் ரூபா செலவிலும் இடம் பெறவுள்ளன.இந்த வேலைத் திட்டங்களுக்கு மாநகர சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் புனரமைப்பு மற்றும்திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ம-14)

## உடுவிலில் வீதியால் சென்ற பெண்ணின் தாலிக்கொடி, சங்கிலி இரண்டும் அபேஸ்

**மோ.சைக்கிளில் வந்த இருவரால்**

யாழ்ப்பாணம், செப்.17

மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்கள் வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணின் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி, சங்கிலி இரண்டையும் அபகரித்துச் சென்றுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் உடுவில், அம்பலவாணர் வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்றது. இணுவிலைச் சேர்ந்த இரண்டு பெண்கள் அந்தவீதி வழியே நடந்து சென்று கொண்டி ருந்தனர். இதன் போது மோட்டார் சைக்கிளில் அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற நபர்கள் நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர் என்று ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரிய வந்தது.

சம்பவம் தொடர்பில் எவரும்கைதுசெய்யப்படவில்லை அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருகிறோம் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-4)

## திருட்டு தொடர்பில் கடந்த வாரம் 6 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் தாலிக்கொடி கொள்ளை, சங்கிலித் திருட்டு, வீடு உடைத்துத் திருட்டு உட்பட 6 திருட்டுக்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் கடந்த 10 ஆம் திகதி வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் தாலிக் கொடியை அபகரித்துச் சென்றுள்ளனர். இதில் எவரும் கைது செய்யப்படவில்லை.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் நள்ளிரவு வீடு உடைத்து உட் சென்றவர்கள் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியைத் திருடிச் சென்றுள்ளனர்.

அந்தச் சங்கிலி வங்கி ஒன்றில் அடைவு வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸ் விசாரணைமூலம் வங்கியிலிருந்து மீட் கப்பட்டுள்ளது. உரிமையாளர் அதனைத் தன்னுடையது என்று உறுதிப் படுத்தியுள்ளார்.

இதனுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் கல்வியங்காடு பகுதியில் கடந்த 7 ஆம் திகதி பகல் வேளை வீட்டில் யாரும் இல்லாதபோது வீட்டை உடைத்து உட்சென்ற திருடர்கள் 22 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான உடைமைகளைத் திருடியுள்ளனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் வைத்தியசாலை ஒன்றில் கதவை உடைத்து உட்சென்ற திருடர்கள் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் மோட்டார் ஒன்றையும், ஒரு தொகை [illegible] திருடர் சென்றுள்ளனர். கடந்த 8 ஆம் திகதி இந்தச்சம்பவம்இடம்பெற்றுள்ளது.

வரணியில் வீடு ஒன்று உடைத்து சேதமாக்கப்பட்டதோடு அங்கிருந்த பெறுமதியான பொருள்களும் திருட்டுப் போயுள்ளன. ஒரு லட்சத்து 95 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று முறையிடப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பகுதியில் கடந்த 5 ஆம் திகதி யாருமில்லாத வேளை வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்று இனந்தெரியாதவர்களால் அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளது. பகைமை காரணமாக இது இடம்பெற்றிருக்கிறது. சந்தேகத்தில் ஒருவர் கைது [illegible] என்றும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## மக்கள் நிதியுதவி வழங்கினால் படையினர் குளங்களைப் புனரமைப்பர்

**யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்ப்பாணத்தில் மீள் குடியமர்ந்துள்ள முஸ்லிம் கிராமங்களில் 3 குளங்களை புனரமைப்புச் செய்வதற்கு மக்கள் நிதிப் பங்களிப்பு வழங்கினால் படையினர் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளத் தயாராக உள்ளனர் என்று யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் உள்ள சின்னக்குளம், வில்வராயன்குளம், கோம்பயன் குளம் என்பன தற்போது பயனற்று இருப்பதால் இராணுவத்தினர் இவற்றைப் புனரமைப்புச் செய்ய முன்வந்துள்ளனர். எனவே அந்தப் பகுதி மக்கள் புனரமைப்புச் செய்வதற்கு தேவையான இயந்திரங்களை இயக்க மண்ணெண்ணெய் தேவைப்படுவதால் அவற்றுக்கான நிதியை வழங்கினால் குளங்களை ஆழமாக்குவதுடன், அணைகட்டிக் கொடுப்பதற்கும் இராணுவத்தினர் தமது ஆளணியைக் கொண்டு பணிகளை முன்னெடுப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொளத்தூர்மணியுடன் 500 பேர் இடிந்தகரை சென்றபோது கைது

தூத்துக்குடி, செப்.17

தூத்துக்குடியிலிருந்து இடிந்தகரை நோக்கி பேரணியாகச் செல்ல முயன்ற திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உட்பட 500 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தியும், கூடங்குளம் போராட்டக்காரர்களுடன் கலந்து கொள்வதற்காகவும் தூத்துக்குடியில் இருந்து இடிந்தகரை செல்ல கொளத்தூர் மணி தலைமையில் 500 பேர் ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

இதையடுத்து அவர்களை பொலிஸார் தீயணைப்பு நிலையம் அருகே தடுத்து நிறுத்தி கைது செய்து கொண்டு சென்றனர்.

இந்தப் போராட்டத்தில் அணு சக்திக்கு எதிரான மக்கள் கூட்டமைப்பினரும் திரளாக கலந்துகொண்டனர்.

# அணுமின் நிலையத்தை எதிர்த்து மணலில் புதைந்து ஆர்ப்பாட்டம்

கூடங்குளம், செப்.17

அணுமின் நிலையத்தை எதிர்த்து கடல் மணலில் புதைந்து மீனவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கூடங்குளம், இடிந்தகரை மக்கள் நூதன போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கடலுக்குள் இறங்கி போராட்டம் நடத்திய அவர்கள் நேற்று முன்தினம் கூட்டப்புளி கடற்கரையில் பொக்லைன் மூலம் கடற்கரை மணலை தோண்டி அதில் தங்கள் உடலை இடுப்புவரை புதைத்துக்கொண்டு போராட்டத்தை ஆரம்பித்தனர். நேற்றுக் காலை 2 ஆவது நாளாக இந்தப் போராட்டம் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய வடிவத்தில் கூடங்குளம் போராட்டம் நீடிப்பு



முன்னதாக ஜல சந்தியாக்கிரகா என சொல்லப்படும் தண்ணீரில் இறங்கிப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த போது, கடலோரக் காவல் படை விமானம் மிக தாழ்வாகப் பறந்ததில் மீனவர் சகாயம் என்பவர் காயம் அடைந்து மருத்துவ மனையில் உயிரிழந்தார். இதனால் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், அவரது உடலையும் மீனவர்கள் வாங்க மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவில் மேலும் 16 அணுமின் நிலையங்கள்

## மன்மோகன் சிங் ஒப்புதல்

இந்தியாவில் மேலும் 16 அணுமின் நிலையங்கள் அமைக்க பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

2014 - 2016 ஆம் ஆண்டு கால கட்டம் வரையிலான திட்ட அறிக்கையின் படி, இந்தியாவில் மேலும் 16 அணுமின் நிலையங்கள் அமைக்க பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக அந்தத் தகவல் கூறுகின்றது.

அடுத்த 5 ஆண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்வதற்கான திட்ட அறிக்கையில் அணு மின் நிலையத் திட்டப் பணியும் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கென மத்திய அரசு 66 ஆயிரத்து 690 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதாகவும் அறிவித்துள்ளது. இது கடந்த முறையை பன்மடங்கு அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கூடங்குளத்தில் மேலும் இரண்டு அணு உலைகள் அமைக்கவும் இந்தத் திட்டப் பணியில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் 16 அணுமின் நிலையங்களை கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 72 மணி நேர காலக்கெடு முடிவுறும் நிலையில்

# மத்திய அமைச்சரவையிலிருந்து திரிணாமுல் காங்.வெளியேற முடிவு

திரிணாமுல் காங்கிரஸ், மத்திய அமைச்சரவையிலிருந்து விலகி காங்கிரஸ் அரசை வெளியிலிருந்து ஆதரிக்கும் சாத்தியம் அதிகரித்துள்ளது.

சில்லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீடு மற்றும் டீசல் திடீர் விலையேற்றம் என்பவற்றை கண்டித்து, உடனடியாக இம்முடிவுகளை மத்திய அரசு வாபஸ்பெற வேண்டும் என்று வலியுறுத்தி 72 மணி நேர காலக்கெடு விதித்திருந்தார் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி.

கடந்த வெள்ளிக்கிழமை கொல்கத்தாவில் இக்கோரிக்கையை வலியுறுத்தி நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்திலும் அவர் கலந்து கொண்டார். இந்நிகழ்வின் முடிவில் மம்தா பானர்ஜி சில அதிரடி முடிவுகளை வெளியிடுவார் என்று ஊகங்கள் எழுந்தன.

எனினும் எப்போதும் போன்று ஆட்சியைக் கவிழ்க்க நாம் விரும்பவில்லை. அதே நேரத்தில் கூட்டணி அரசில் லட்சுமண ரேகை என ஒன்றிருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். சீர்திருத்தங்கள் என்ற பெயரில் ஏழை மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்த கூடாது.' மத்திய அமைச்சரவையில் இரண்டாவதுபெரியகூட்டணிக் கட்சி நாம் தான். ஆனால் ரயில்வே அமைச் சகம் மட்டுமே எங்கள் கைகளில் உள்ளது. எங்களுக்கு 4 அமைச்சரவை அமைச்சர்கள் பதவி கிடைத்திருக்க வேண்டும். ஆனால் நாம் பதவிக்காக ஆசைப்பட்டு தொங்கிக்கொண்டிருப்பவர்கள் அல்ல என்று அவர் தெரிவித்துள்ளார்.

## நகைச்சுவை நடிகர் லூஸ் மோகன் காலமானார்



தமிழ் சினிமாவின் பழம் பெரும் நகைச்சுவை நடிகர் லூஸ்மோகன் (84), நேற்று காலமானார்.தமிழ் சினிமாவில் ஆயிரத்துககும் மேற்பட்ட படங்களில் நகைச்சுவை வேடத்தில் லூஸ்மோகன் நடித்திருக்கிறார்.

ஹொலிவூட்டில் இறுதியாக 2008 ஆம் ஆண்டு வெளிவந்த 'சுட்டபழம்' படத்தில் நடித்தார். பின்னர் இரு கன்னட மொழிகளில் நடித்தார். அதன் பின்பு இவர் கடந்த சில நாள்களாக நலக்குறைவால் சிகிச்சை பெற்று வந்தார். தனது ஒரே மகன் கார்த்திக் வீடு உள்ள மைலாப் பூரில் வசித்து வந்த நிலையில் நேற்றுக் காலை அவர் காலமானார்.

# சினிமாப் படம் திரையிடக்கோரி சிறையில் கைதிகள் ரகளை

சேலம் மத்திய சிறையில் சினிமாப் படம் திரையிடக் கோரி நேற்றுமுன்தினம் கைதிகள் திடீர் ரகளையில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் மத்திய சிறையில் 700 இற்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர். 15 தினங்களுக்கு ஒரு முறை சிறை வளாகத்தில் அவர்களுக்கு சினிமா திரையிடப்படும்.

ஆனால் இந்த மாதத்தில் நேற்றுமுன்தினம் வரை சினிமா திரையிடப்படாததால் ஜோதிபாசு என்ற கைதி சிறை வளாகத்தில் உள்ள கட்டடத்தின் மீது ஏறி கீழே குதித்து தற்கொலை செய்து கொள்ளப் போவதாக மிரட்டினார்.

பின்னர் ஜெயிலர் ஊர்மிளா தலைமையில் அதிகாரிகள் பேச்சு நடத்தி அவரை கீழே வரவழைத்து தனி அறையில் அடைத்தனர்.

அதைத் தொடர்ந்து கருவாடு மாரியப்பன், சங்கர், கவுதமன் ஆகிய கைதிகள், சிறை அதிகாரி களைக் கண்டித்து கோஷம் எழுப்பினர். தொடர்ந்து டவர் பிளாக்கில் ஏறி அங்கிருந்து குதித்து விடுவதாக மிரட்டினர்.

அங்கிருந்த டியூப் லைட்டுக்களை அடித்து நொறுக்கினர். அதிகாரிகள் நாளை சினிமா திரையிடப்படும் என்று கூறி அவர்களை சமாதானப்படுத்தினர்.

அதன்பின், கைதிகள் போராட்டத்தை கைவிட்டனர். ரகளையில் ஈடுபட்ட போது, காயமடைந்த கருவாடு மாரியப்பன், சங்கர் ஆகியோருக்கு சிறை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.



அண்ணாதுரையின் 104 ஆவது பிறந்த நாளான நேற்று அண்ணாசாலையில் உள்ள அவரது சிலைக்கு முதல்வர் ஜெயலலிதா மலர் துவி மரியாதை செலுத்தினார்.

## 11 வயது சிறுவனை ஆடு மேய்க்க விற்ற தந்தை

ஆடு மேய்ப்பதற்காக 11 வயதுச் சிறுவனை அவனது பெற்றோரே விற்ற அவலம் தமிழ் நாட்டில் நடந்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ராம்குமார் என்ற இந்தச் சிறுவனை இரவு நேரத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த செந்தில்குமார் என்பவர் மீட்டுள்ளார்.

அவனிடம் விசாரித்த போது, தனது தந்தை ஆடு, மாடு மேய்க்கும் உரிமையாளரிடம் விற்று விட்டதாகவும் இன்றைய பொழுதில் நான் மேய்த்த மாட்டு மந்தைகளில் தவறிவிட்ட ஒன்றைத் தேடி வந்தேன். இரவு நேரம் வந்தமையால் பயம் தாங்க முடியாமல் அலறினேன் என்று கூறியுள்ளான்.

உடனே சிறுவன் தெரிவித்த முகவரியின் கீழ், அவனது தந்தை அய்யா சாமிக்கு தகவல் சென்றது. ஆனால் அவருடன் செல்ல சிறுவன் ராம்குமார் மறுத்துவிட்டான். இதன் காரணமாக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டான். இதில் சிறுவனை 2 ஆயிரம் ரூபாவுக்கு விற்றுள்ளது தெரிய வந்தது. சிறுவனை வாங்கிய நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

# சுதந்திர தமிழீழம் அமைப்பதற்காக உலகெங்கும் ஆதரவு திரட்டும் பணி

## ம.தி.மு.க. கரூர் மாநாட்டில் தீர்மானம்

பொதுவாக்கெடுப்பு மூலம் சுதந்திரத் தமிழீழம் அமைப்பதை ஒரே இலக் காகக் கொண்டு உலகம் முழுவதும் ஆதரவைத் திரட்டும் பணியில் ஈடுபடு வோம் என்று ம.தி.மு.கவின் கரூர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரூரில் நடைபெற்ற ம.தி.மு.கவின் அண்ணா பிறந்ததின விழா மற்றும் திராவிட இயக்க நூற்றாண்டு விழா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

பொது வாக்கெடுப்பு மூலம் இலங்கையில் சுதந்திர தமிழ் ஈழத்தை அமைப்பதையும் ஒரே இலக்காகக் கொண்டு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டு வருகிறது. உலகம் முழுவதிலும் இதற்கான ஆதரவை திரட்டு கின்ற பணியில் ம.தி.மு.க. ஈடுபடும்.

இலங்கை ஜனாதிபதி சாஞ்சிக்கு வர அனும திக்கக் கூடாது. மீறி வந்தால் பெரியார் பிறந்த தினமான இன்று திங்கட்கிழமை வைகோ தலைமையில் மஹிந்த ராஜபஷவுக்கு கறுப்புக் கொடி காட்டுவதற்காக சாஞ்சிக்கு புறப்பட்டுச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களின் கண்ணீரைத் துடைக்கவும், அவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கவும், திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தி, மீனவர் வாழ்வுரிமை மாநாடு எதிர்வரும் நவம்பர் 24 ஆம் திகதி தூத்துக்குடியில் நடத்தப்படும். இவை உள்ளிட்ட தீர்மானங்கள் மதிமுக மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

# மத்திய அரசுக்கு எதிராக இன்று கம்யூ. ஆர்ப்பாட்டம்

சென்னை, செப். 17

மத்திய அரசின் மக்கள் விரோத போக்கைக் கண்டித்து இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

டீசல் விலை உயர்வு, சமையல் எரிவாயுவுக்கு கட்டுப்பாடு ஆகிவற்றை கைவிடுவதுடன் அன்னிய முதலீடுகளைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு முன்வரவேண்டுமென வலியுறுத்தி இன்று திங்கட்கிழமை முற்பகல்10 மணியளவில் சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் முன்னால் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்

ஆர்ப்பாட்டத்துக்கு தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.ஏழுமலை தலைமை தாங்குகிறார்.

ஏஐடியூசி மாநிலத்துணைத் தலைவர் எஸ்.எஸ். தியாகராஜன், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலத் தலைவர் ஆர்.சுசீலா மற்றும் க.தனபால், எம். இசக்கிமுத்து ஆகியோர் கண்டன உரையாற்றுவர் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்கள் தாக்குதல்: நூலிழையில் தப்பினார் ஹரி

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திய தாக்குதலில் பிரிட்டன் இளவரசர் ஹரி, எந்தவித காயமும் இன்றி அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மற்றும் அல்குவைதா தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன.

நேட்டோ படையில் பிரிட்டன் இராணுவமும் இடம் பெற்றுள்ளது. பிரிட்டன் இளவரசரும், டயானாவின் இளைய மகனுமான ஹரி, ஆப்கானிஸ்தான் சென்று தீவிரவாதிகளுடன் போரிட்டு வருகிறார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஹெல்மண்ட் மாகாணத்தில் உள்ள பாஸ்டியன் என்ற இடத்தில் உள்ள நேட்டோ படைகளின் முகாம் மீது தீவிரவாதிகள் ரொக் கெட் குண்டுகள், மோட்டார் குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் அமெரிக்க வீரர் இருவர் உயிரிழந்தனர், 5 பேர் படு காயம் அடைந்தனர். இளவரசர் ஹரியும் அங்கு இருந்தார். இந்தத் தாக்குதலில் அவர் காயமின்றி உயிர் தப்பினார்.

இந்தத் தகவலை நேட்டோவின் சர்வதேச பாதுகாப்புப்படை அதிகாரி மார்டின் கிரிக்டன் உறுதி செய்துள்ளார்.

அண்மையில் இளவரசர் ஹரியைக் கொலை செய்வோம் அல்லது உயிருடன் கடத்துவோம் என்று தலிபான்கள் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## கம்பியாவில் தூக்குத் தண்டனை நிறுத்தம்

மேற்கு ஆபிரிக்க நாடான கம்பியாவின் ஜனாதிபதி யாசியா மரணதண்டனை வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளார்.

பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்தே தாம் இந்த முடிவை எடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.


கடந்த மாதத்தில் மீண்டும் தூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கான பிரகடனத்தை அவர் வெளியிட்டிருந்தார்.

இதேவேளை, 47 கைதிகளில் 9 கைதிகளுக்கான தூக்கு தண்டனைகள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு விட்டன.



லெபனான் சென்றுள்ள பாப்பாண்டவர் 16 ஆம் ஆசீர்வாதப்பர், பெய்ரூட் நகரில் ஜனாதிபதி ஜெனரல் மிசெல் ஸ்லெய்மேனைச் சந்தித்துப் பேசினார்.

# நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் உடல் சனியன்று கடலில் அடக்கம்



நிலவில் முதலில் காலடி வைத்த நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் உடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை கடலில் அடக்கம் செய்யப்பட்டது.

நீல்ஆம்ஸ்ட்ரோங் கடந்த மாதம் 25 ஆம் திகதி உடல் நலக்குறைவால் காலமானார். அவரது விருப்பப்படி, கடலில் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் உடல் முறைப்படி அடக்கம் செய்யப்பட்டது. இதையொட்டி, நேற்றுமுன்தினம் நீல்ஆம்ஸ்ட்ரோங் கின் உடலுக்கு, பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில், நிலவுக்கு அப்போலோ விண்கலத்தில் சென்ற சகவீரர்கள், பஸ் ஆல்ட்ரின், மைக்கேல் காலின்ஸ், இப்போதைய விண்வெளி வீரர்கள், நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# பல்கலை விழாவில் பங்கேற்ற சீனா துணை ஜனாதிபதி



மாயமான சீனா துணை ஜனாதிபதி ஷி ஜின்பிங் திடீரென பல்கலைக்கழக விழாவில் பங்கேற்றார். இந்தச் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவர் தான் நாட்டின் அடுத்த ஜனாதிபதி என்று கூறப்பட்டு வந்த நிலையில், கடந்த 2 வாரங்களாக இவர் எந்தவித பொது நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளாமல் இருந்தார்.

இதனையடுத்து இவர் குறித்து அதிகளவு வதந்திகள் பரவி பரபரப்பை ஏற்படுத்தின.

இந்தநிலையில் ஷி ஜின்பிங் நேற்றுமுன்தினம் சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள வேளாண்மை பல் கலைக் கழகத்தில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டார்.

மாணவர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். மாணவர்களைப் பார்த்து கை அசைத்தவாறு காரில் சென்றார். இவர் விழாவில் கலந்து கொண்ட படங்கள் அரச இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன. கடந்த மாதம் நீச்சல் பயிற்சியின் போது அவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டது என்றும், மருத்துவர்களின் அறிவுரையின்படி 2 வாரங்களாக அவர் ஓய்வில் இருந்தார் என்றும் கூறப்படுகிறது.

# லிபியாவை தாக்கும் எண்ணமில்லை

## பென்டகன் மறுப்பு

**லிபியாவின் பெங்காசி நகரில் அமெரிக்கத் தூதர் உள்ளிட்ட 4 அமெரிக்க அதிகாரிகள் கொல்லப்பட்டதை அடுத்து, லிபிய கடல்பகு திக்கு இரு அமெரிக்க போர்க் கப்பல்கள் நகர்த்தப்பட்டுள்ளன.**

லிபியாவைத் தாக்கும் எண்ணத்துடன் போர்க்கப்பல்களை அனுப்பவில்லை என்று அமெரிக்க பாதுகாப்பு துறையின் தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

லிபியாவின் பெங்காசி நகரில் அமெரிக்கத் தூதர் உள்ளிட்ட 4 அமெரிக்க அதிகாரிகள் கொல்லப்பட்டதை அடுத்து, லிபிய கடல்பகுதிக்கு இரு அமெரிக்க போர்க் கப்பல்கள் அனுப்பி வைக் கப்பட்டன. லிபியா மீது தாக்குதல் நடத்தவே இந்த கப்பல்களை அமெரிக்கா அனுப்பியுள்ளதாக தகவல் வெளியானது.

இந்தநிலையில் பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜார்க் லிட்டில் தெரிவித்ததாவது:-

சில நேரங்களில் மத்திய தரைக்கடல் பகுதிக்கு அமெரிக்கக் கப்பல்களை அனுப்புவது வழக்கமான ஒன்று தான். லிபியாவைத் தாக்க வேண்டும் என்பதற்காக போர்க் கப்பல்களை அனுப்பவில்லை. அந்தப்பகுதியில் எந்த நாட்டின் மீதும் இந்த போர்க் கப்பல்கள் தாக்குதலில் ஈடுபடமாட்டாது.

இதனிடையே பெங்காசி நகரில் நடைபெற்ற தாக்குதலில் உயிரிழந்த ஏனைய 3 அமெரிக்க அதிகாரிகள் குறித்த தகவல் தெரிய வந்துள்ளது.

இதில் இருவர் அமெரிக்க கடற்படையின் சிறப்பு அதிரடிப்படையில் முன்பு பணியாற்றியவர்கள். மற்றொருவரும் தூதரகத்தின் தகவல் நிர்வாக மேலாளராகப் பணியாற்றி வந்தவர்.

இறந்தவர்களின் குடும்பத்துக்கு அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

லிபியாவுக்கான அமெரிக்க தூதர் கொல்லப்பட்டது குறித்துப் பேசிய ஜனாதிபதி ஒபாமா, லிபியாவில் திட்டமிட்டு அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் நமது சகோதரர்கள் 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதற்குக் காரணமான அனைவரும் நீதிக்கு முன்பு நிறுத்தப்படுவார்கள். லட்சக் கணக்கான முஸ்லிம்கள் உட்பட பல் வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் நமது நாட்டில் உள்ளனர். நாம் ஒரு குறிப்பிட்ட மதத்தின் எதிர்ப்பாளர்கள் என்ற சாயத்தைப் பூச நினைக்கிறார்கள். அது எப்போதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒரு திரைப்படத்தை மையமாக வைத்து வன்முறையில் இறங்குவதை நியாயப்படுத்த முடியாது என்று தெரிவித்துள்ளார்.

# அமெ. எதிர்ப்பு காணொலியை தடைசெய்ய கூகுள் மறுப்பு

உலகளாவிய ரீதியில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தோற்றுவித்துள்ள காணொலியை தடை செய்ய கூகுள் நிறுவனம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான பயன்பாடு காரணமாக லிபியா மற்றும் எகிப்தைத் தொடர்ந்து இந்தியா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் குறித்த காணொலியைத் தடை செய்துள்ளதாக கூகுள் அறிவித்துள்ளது.

மதத்தை இழிவுபடுத்தும் விதமாக தயாரிக்கப்பட்டுள்ள குறித்த காணொலிக் காட்சி காரணமாக மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதரகங்கள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் அழுத்தங்களால் அல்லாது உள்நாட்டு சட்டங்களுக்கு அமையவே குறித்த காணொலியை எதிர்காலத்தில் கட்டுப்படுத்துவதாக கூகுள் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே குறித்த வீடியோ காட்சியுடன் தொடர்புடைய நபர் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

வங்கி மோசடி தொடர்பாக குற்றவாளியாகக் காணப்பட்ட 55 வயதான ஒருவரை இது குறித்து விசாரணை செய்து வருவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# கனேடிய தூதரகம் மூடப்பட்டது எகிப்தில்

கெய்ரோ,செப்.17

எகிப்தின் தலைநகரம் கெய்ரோவில் உள்ள கனடா தூதரகம் பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த வாரம் மூடப்பட்டது என்று வெளிவிவகாரத்துறையின் செய்தி தொடர்பாளர் ரிக் ரோத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம்களை மோசமாக சித்திரித்து அமெரிக்கா வெளியிட்ட திரைப்படத்துக்கு [illegible] முஸ்லிம் நாடுகளில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் அமெரிக்க தூதரகத்தை போராட்டக்காரர்கள் தாக்கினர். இதனையடுத்து கனேடிய தூதரகம் மூடப்படுகின்றது.

இது குறித்து கனடாவின் முன்னாள் தூதரான ஃபெரிடி கெர்கோவ் கூறுகையில்,

தீவிரவாதிகள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வன்முறைத் தாக்குதல் நடத்தத் தயங்குவதில்லை. உலகின் எந்தப் பகுதியாக இருந்தாலும் இத்தாக்குதலை நடத்த அவர்கள் அஞ்சுவதில்லை -என்றார்.

# மகனின் உயிரைக் காப்பாற்ற நுரையீரலை கொடுத்த பெற்றோர்



ஜேர்மனியில் மூச்சு விட இயலாமல் மிகவும் சிரமப்பட்டு வந்த 12 வயது சிறுவன் மாரியஸுக்கு, அவனது பெற்றோர் தங்களது நுரையீரலை கொடுத்து உயிரைக் காப்பாற்றி உள்ளனர்.

ஹேனாவர் மெடிக்கல் பல்கலைக்கழகத்தில் இந்த சிறுவனுக்கும், பெற்றோருக்கும் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

இதுகுறித்து மருத்துவர் கிரிகோர் வார்னெக் தெரிவித்ததாவது:-

பெற்றோரின் நுரையீரல்கள் மிகப்பெரியதாய் இருந்ததால் சிறுவனுக்குச் சரியாகப் பொருந்தின. அறுவைச் சிகிச்சை சுமார் 6 மணி நேரம் நடைபெற்றது.

மாரியஸ் 155 தினங்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றான் என்று தெரிவித்துள்ளார்.

இனிமேல் மாரியஸ் கால்பந்து விளையாடலாம், மோட்டார் சைக்கிள் செலுத்தலாம். ஆனால் அவனது நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் குறைவாக இருப்பதால், தொடர்ந்து மருந்து உட்கொள்ள வேண்டும். அவனுக்கிருந்த நோய்த்தொற்றும், சளித் தொல்லையும் புதிய நுரையீரல்களையும் தாக்கும் அபாயம் உள்ளது-என்றார்.

இந்த நோய் பெரும்பாலும் ஜப்பான் மற்றும் தென்கொரியா நாடுகளில் அதிகம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் தூதரகம் சீனர்களால் முற்றுகை

## தீவுப் பிரச்சினை தீரவில்லை



பீஜிங், செப்.17

தீவுப் பிரச்சினை தொடர்பாக சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள ஜப்பானியத் தூதரகத்தை ஆயிரக்கணக்கானோர் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

தென் சீனக் கடலில் உள்ள சென்காகூ தீவை தனக்குச் சொந்தமானது என்று ஜப்பான் உரிமை கொண்டாடி வருகிறது. அதே தீவை டயாவூ என்ற பெயரில் அழைக்கும் சீனா, அத்தீவு தங்கள் எல்லைக்கு உட்பட்டது என்று கூறி வருகிறது.

இந்தநிலையில், அந்தத் தீவை நோக்கி ரோந்துக் கப்பல்களை சீனா அனுப்பியுள்ளது. அதையடுத்து டோக்கியோவில் உள்ள சீனத் தூதரை வரவழைத்த ஜப்பான் அரசு, சீனாவின் செயலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்தது.

இரு நாடுகளிலும் பதற்றமான சூழ்நிலை நிலவி வரும் நிலையில், பீஜிங்கில் உள்ள ஜப்பான் தூதரகம் முன் ஆயிரக்கணக்கான சீனர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

அமைதியான முறையில் பதாகைகளை ஏந்திப் போராட்டம் நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள், திடீரென ஆவேசமடைந்து கல்வீச்சில் ஈடுபட்டனர். ஜப்பான் தூதரகத்தை நோக்கி தண்ணீர் போத்தல்களை வீசினர்.

அதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டோரை விரட்டியடிக்க இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர். பீஜிங்கைத் தொடர்ந்து ஷாங்காயிலும் ஜப்பான் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# அணுகுண்டு தொழில்நுட்பத்தை இரு நாடுகளுக்கும் வழங்கியுள்ளோம்

## பாக். விஞ்ஞானி தகவல்

அணு குண்டு தயாரிப்பதற்கான தொழில் நுட்பத்தை இரு நாடுகளுக்கு பாகிஸ்தான் வழங்கி உள்ளதாக அணு விஞ்ஞானி ஏ.க்யூ. கான் தெரிவித்தார்.

அவை எந்த நாடுகள் என்பதை கான் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. எனினும் லிபியா மற்றும் தென் கொரியாவாக இருக்க லாம் என்று தகவல் வெளியாகி உள்ளது.

இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது :-

பாகிஸ்தானின் பிரதமராக பெனாசீர் பூட்டோ இருந்த கால கட்டத்தில் இரு நாடுகளுக்கு அணு குண்டு தொழில் நுட்பத்தை அளிக்குமாறு எனக்கு உத்தரவிட்டார். அப்போது பிரதமரின் உத்தரவை நிறைவேற்று வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

அணு தொழில்நுட்பத்தை பரிமாற்றம் செய்வது என்பது எளிதான காரியமல்ல. சுமார் 800 பேரது மேற்பார்வையில் அந்தப் பணி நடைபெற்றது.

1998ஆம் ஆண்டில் இந்தியா அணுகுண்டு பரிசோதனை மேற்கொண்ட போது, பாகிஸ்தானும் அணுகுண்டு சோதனை மேற்கொண்டது.

ஆனால் அப்போது பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப், அணுகுண்டு சோதனையை மேற்கொள்ள முழுமையாக தயாராக இருக்கவில்லை. ஏனெனில் அமெரிக்காவால் தனது அரசுக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்று அவர் பயந்தார்.

ஆனால் நானும், அவாது நெருங்கிய அரசி யல் நண்பர்களும், இது தொடர்பாக அவரிடம் எடுத்துக் கூறி அணுகுண்டு சோதனையை மேற்கொண்டோம்.

அப்போது அவர் உறுதி யாக இருந்திருந்தால் இந்தியா அணுகுண்டு சோதனை மேற்கொண்ட அடுத்த அரை மணி நேரத்திலேயே நாங்களும் சோதனைக்கு தயாராகியிருப்போம். ஆனால் சுமார் 2 வாரங்கள் தாமத மாகவே சோதனை நடத்த முடிந்தது- என்றார்.


## 7 ஆம் ஆண்டு நினைவுதினம்



திருமதி

**றஞ்சிதலேகா (லதா) நவநீதன்**

திதி: 17.09.2012 திங்கட்கிழமை

மண்ணில்
19★07★1961

விண்ணில்
05★09★2005

ஏழு ஆண்டுகள் எப்படியோ மறைந்தனவே
எங்கள் லதாவை இன்னுமேன் காணவில்லை
மூளும் அக்கினியில் எம்மனம் வேகிறதே
முற்றத்து மல்லிகையே முகமிழந்து போனதேனோ
வாழும் நினைவுகளில் நிழல்போல் வருகிறாயே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த குலவிளக்கே
நாளும் பொழுதும் கனவாய்க் கரைகிறதே
நம்மோடு வாழ்ந்த காலங்கள் மீளாதோ....?

"திருத்தணி"
பிரதான வீதி, வியாபாரி மூலை,
அல்வாய். (22938) (45.6.7)

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



## 8 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **பாலன் இராமன்**

(தலைப்பாக் கட்டி றைவர்)

(முன்னாள் சாரதி, SLRC/ICRC/KDRRO/KVR/ சலாம்ஸ் கம்பனி)

அமரர் பாலன் இராமன் அவர்களின் மரணச்செய்தி கேட்டு, நேரிலும் தொலைபேசி, தொலைநகல், மின்அஞ்சல் மற்றும் இணையத்தளமூடாகவும் ஆறுதல் கூறி அனுதாபத்தை தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள், உத்தியோகஸ்தர்கள், பணியாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவ, மாணவிகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (17.09.2012) திங்கட் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 8 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாயவன் தீன் சுவையகம்,
TKST CD வேன்ட்
இரத்தினபுரம், கிளிநொச்சி. (077 4862660)

குடும்பத்தினர்,
இல, 60/A, இரத்தினபுரம், கிளிநொச்சி.


# ஜேர்மன் தூதரகத்துக்கு சூடானில் தீ வைப்பு

கார்ட்டூம், செப்.17

சூடான் தலைநகர் கார்ட்டூமிலுள்ள ஜேர்மன் தூதரகத்தின் மீது கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய முற்றுகையையடுத்து தூதரகக் கட்டடத்துக்கு தீ வைக்கப்பட்டது.

இஸ்லாத்தையும் முஹம்மது நபிகள் நாயகத்தையும் அவமதிக்கும் விதமாக தயாரிக்கப்பட்ட திரைப்படமொன்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சூடானிலுள்ள பிரிட்டன் தூதரகத்தின் மீதும் முற்றுகை மேற்கொள்ளப் பட்டுள்ளது. சுமார் 5 ஆயிரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்த முற்றுகைகளில் பங்கு பற்றினர்.

இதேவேளை, பாகிஸ்தான், லெபனான், மலேஷியா, பங்களாதேஷ் ஈராக், இந்தியா முதலான நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழகத்தின் சென்னை யிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்தின் மீதும் கற்கள் மற்றும் செருப்பு வீச்சு இடம்பெற்றுள்ளது.

# சிரிய அகதிகளுக்கு உதவுவதற்கு ஹொலிவூட் நடிகை விருப்பம்



பாக்தாத், செப்.17

பிரபல ஹொலிவூட் நடிகையான ஏஞ்சலினா ஜூலி சிரிய வன்முறைகளால் ஈராக்குக்கு இடம்பெயர்ந்த சுமார் 50 ஆயிரம் அகதிகளுக்கு உதவ முன்வந்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக ஈராக் சென்றுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகள் மறுவாழ்வு அமைப்பு பிரதிநிதியும் மற்றும் நடிகையுமான ஏஞ்சலினா ஜூலி, தலைநகர் பாக்தாத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹோஸ்யார் ஷெபாரியை சந்தித்துப் பேசினார். இதன் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

ஈராக்கில் தஞ்சமடைந்துள்ள சிரிய அகதிகளின் நிலை குறித்து அந்த நாட்டின் முக்கிய தலைவர்களிடம் கேட்டு அறிந்து கொள்வதற்காக ஈராக் சென்றுள்ளார்.

இதுகுறித்து ஷெபாரி ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில்,

சுமார் 21 ஆயிரம் சிரிய அகதிகள் வெளியேறி ஈராக்கின் மேற்கு அன்பார் மற்றும் டோஹுக் மாகாணங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

31 ஆயிரம் ஈராக்கியர்கள் பல வருடங்களுக்கு முன்னர் ஈராக்கில் நிலவிய நெருக்கடி மிக்க சூழ்நிலையால் அங்கிருந்து சிரியாவுக்குச் சென்று அங்கு தஞ்சமடைந்திருந் தனர். அவர்களும் திருப்பி இப்போது ஈராக்குக்கு வந்துள்ளனர்.

# நியூயோர்க் தியேட்டர்களில் குளிர்பானங்களுக்குத் தடை

நியூயோர்க்கில் தியேட்டரில் சோடா, இனிப்புக் கலந்த குளிர்பானங்களுக்கு தடை விதிக்கப்பட உள்ளது.

அமெரிக்காவில் உடல் பருமன் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மக்கள் உடல் பருமனை குறைக்க பல்வேறு பிரசாரங்கள் நடத்தப்படுகின்றன. எனினும் துரித உணவகங்களில் ஜங்க் புட் சாப்பிடுவதால் இந்த பிரச்சினையைத் தடுக்க முடியவில்லை.

நியூயோர்க் நகரில் மட்டும் ஆண்டுக்கு 6 ஆயிரம் பேர் உடல் பருமன் பிரச்சினையால் இறப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் உடல் பருமன் பிரச்சினைக்குத் தீர்வுகாண, உணவகம் மற்றும் தியேட்டர்களில் சோடா, குளிர்பானங்களின் விற்பனையைத் தடை செய்ய மேயர் மைக்கேறல் புளூம்பர்க் முடிவெடுத்துள்ளார்.


A/L மாணவர்களுக்கான விசேட கணினி வகுப்புக்களும்
(Office Application, Graphic, Multimedia, Programming, Accounting)
**ஆங்கில** மற்றும் **சிங்கள** வகுப்புக்கள் ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம். **A/L** பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களுக்கு கணினி கற்கை நெறிகளுக்கு விசேட சலுகை

**10.09.2012 முதல் 18.09.2012 வரை**
**பதிவுகளை மேற்கொள்ளும் அனைவருக்கும் கணினி பாடநெறிகளுக்கு**

**70%**
**விசேட கட்டணக்கழிவு இச்சலுகை**

இலவச பரீட்சை 23.09.2012 ஞாயிறு

win **மெகா** கம்பியூட்டர் ஸ்கொலர்ஸிப்

இப் புலமைப்பரிசில் பரீட்சையானது பொதுஅறிவு மற்றும் பொதுஉளச்சார்பினைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. இப் பரீட்சையில் மாணவர்கள் பெறும்புள்ளிகளுக்கமைய 30%, 40%, 50%,60%,70% மற்றும் 80% வரை ஸ்கொலசிப் வழங்கப்படும். இதனைப் பெறுவதனூடாக மாணவர்களின் கட்டணச் செலவு குறைக்கப்படுகிறது.

இப் புலமை பரீசில் திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு முன்கூட்டி பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

**TECHNO WORLD**
**Studies(Pvt)Ltd**

| | |
|---|---|
| 344,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.021-4921124 | கண்டிவீதி, சாவகச்சேரி 021-4922400 |
| கொடிகாமம் வீதி, நெல்லியடி 021-4925145 | பலாலி வீதி, திருநெல்வேலி 021-4922401 |
| திருநகர் வீதி, கிளிநொச்சி 021-4925112 | முள்ளியவளை, தண்ணீரூற்று 024-3243660 |

வவுனியாவில்

| | |
|---|---|
| 77, 1ம் குறுக்குத்தெரு 024 4925972<br>147, குள வீதி, குடியிருப்பு 024 4925973<br>06, [illegible] வீதி, கரப்பன்காடு024 4925974<br>[illegible] வீதி,தோணிக்கல் 024 4921893 | 26/15, மன்னார் வீதி , நெளுக்குளம் 024 4921892<br>கூமாங்குளம் வீதி, பண்டாரிகுளம் 024 4927259<br>சாஸ்திரிகூழாங்குளம் 024 4924451<br>செட்டிகுளம் 024 4924975 |

(சி/3397)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(12)

சில சிறுவர்கள் நெருக்கடிகளின் போது காட்டும் துணிச்சலைப் பார்க்கும் பொழுது நமக்கெல்லாம், பெரு வியப்பாக இருக்கிறது இந்தச் சிறுவர்களால் எவ்வாறு இவ்வளவு துணிச்சலுடன் நடந்து கொள்ள முடிகிறது என்று பிரமித்துப் போகிறோம்.

ஹாலந்து நாட்டில் கடலை விட பூமி தாழ்வான மட்டத்திலிருக்கிறது.ஆகவே நீர் ஊருக்குள் நுழைந்து விடாதபடி கடல் ஓரங்களில் டைக் என்று சொல்லப்படும் மதில் சுவர்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். ஒரு சமயம் இந்த மதில் சுவரில் சிறிய ஓட்டை ஒன்று விழுந்து விட்டது. அதன் வழியாகத் தண்ணீர் கசிந்ததை யாரும் கவனிக்கவில்லை.

அது இரவு நேரம். தொடர்ந்து தண்ணீர் கசிந்தால் துவாரம் பெரிதாகி கடல் நீர் உள்ளே நுழைந்து ஊரையே நாசம் செய்து விடும். இதை யாரும் கவனிக்கவில்லை. விளையாடி விட்டு அந்த வழியாக வந்த சிறுவன் ஒருவன் அதைக் கவனித்து விட்டான் உடனே அந்த இடத்திலேயே அமர்ந்து தன்னுடைய கையை வைத்து துவாரத்தை அடைத்தான். ஊருக்குள் போய் சனங்களைக் கூட்டி வரலாம் என்றால் அதற்குள் துவாரம் பெரிதாகி, தடுக்க முடியாத அளவிற்கு கடல் வெள்ளம் பெருக்கெடுத்து ஊருக்குள் புகுந்து விடும் என்று அந்தச் சிறுவன் பயந்தான்.



எனவே இரவு பூராவும் அங்கேயே கடும் குளிரில் அமர்ந்து கையினால் அந்தத் துவாரத்தை அடைத்தபடி வீற்றிருந்தான். சோர்வை அவன் பொருட்படுத்தவில்லை. அதிகாலையில் சன நடமாட்டம் ஏற்பட்டு அவனைக் கவனித்த பிறகுதான் அவனுடைய பணி முடிவுக்கு வந்தது. மயங்கிய நிலையிலும் மதிற் சுவரில் வைத்த கையை எடுக்காமல் ஊரையே காப்பாற்றிய அந்தச் சிறுவன் அனைவருடைய பாராட்டுதலுக்கும் உள்ளானான். அந்தச் சிறுவன் இளமைப் பருவத்திலேயே இரவு பூராகவும் தனிமையாயிருந்து, கடற்கரை மதில் சுவரின் துவாரத்தை அடைத்து, ஊரை ஆபத்திலிருந்து காப்பாற்றிய துணிச்சலை எவ்வாறு பெற்றான்? நிச்சயமாக அவனின் பெற்றோர்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே பய உணர்ச்சி தெரியாதவனாக அவனை வளர்த்திருக்க வேண்டும். அவ்வாறு வளர்க்கப்படும் குழந்தைகளே பிற்காலத்தில் துணிச்சல் பெற்று காரியங்களைச் செய்யும் வீரர்களாகத் திகழ்கிறார்கள்.

தந்தையின் கட்டளைகளுக்கு கீழ் படிந்து கப்பல் தளத்திலேயே நின்று நெருப்பின் சுவாலை நாக்குகளால் எரிந்து சாம்பலாகிப்போன கசபியன் காவைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். மேல் தளத்தில் அவனை நிறுத்தி வைத்துவிட்டு 'நான் மறு உத்தரவு கொடுக்கும் வரையில் நீ இங்கேயே நிற்க வேண்டும்' எனக் கூறி தந்தை கீழ் தளத்திற்குச் சென்றார். திடீரென்று கப்பல் தீப்பிடித்துக் கொண்டது. மகன் கூக்குரல் இட்டுத் தந்தையை அழைத்தான். ஆனால் கீழே எரிந்து கொண்டிருக்கின்ற நெருப்பின் மத்தியில் அகப்பட்டுக் கொண்ட தந்தையின் காதில் மகனின் அபயக்குரல் விழவில்லை. மகனோ தந்தை மறு உத்தரவு தரும் வரையில் அங்கேயே நிற்க வேண்டும் என்று சொல்லி விட்டதால் அதைக் காப்பாற்ற வேண்டும் என்கிற எண்ணத்தில் துணிச்சலுடன் அங்கேயே நின்று தீயின் கோரப் பசிக்கு இரையாகிப் போனான். ஒரு சிறுவனுக்கு துணிச்சல் எங்கிருந்து வந்தது? அவன் வளர்ந்த விதம் அப்படி. பயமறியாத சூழ்நிலையில் வளர்க்கப்பட்டதால் தந்தை சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என்கிற உறுதியுடன் தீயின் வெப்பத்தையும் துணிச்சலுடன் தாங்கிக் கொண்டு மடிந்து போகும் மனநிலையை அவன் பெற்றான்.

தமிழில் 'இளம் கன்று பயம் அறியாது' என்று சொல்லுவார்கள் பொதுவாக பய உணர்ச்சி சூழ் நிலையால் ஏற்படுத்தப்படுகின்ற உணர்ச்சியே தவிர இயற்கையாகக் குழந்தைகளிடத்தே காணப்படும் உணர்ச்சியல்ல. எனவே இளம் கன்று பயம் அறியாது எனச் சொல்லுகின்ற வாசகத்தின் பொருள் என்னவாக இருக்கும் என்று ஆழ்ந்து சிந்தித்தால் இளமைப் பிராயத்தில் இயற்கையாகவே பய உணர்ச்சி ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை.

இந்த வாக்கியத்தில் சொற்களைக் கூட ஆழமான அர்த்தத்தோடு பயன்படுத்தியிருக்கிறார்கள். 'அறியாது' என்கின்ற சொல்லை உபயோகித்திருக்கிறார்கள். இளம் கன்றுக்குப் பயம் தெரியாது என்று சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லவில்லை.

தெரிந்து கொள்ளுவது என்பது தானாக ஒன்றைத் தெரிந்து கொள்வதாகும். அறிந்து கொள்வது என்பது பிறர் உணர்த்தும் பொழுது அறிந்து கொள்வதாகும். பயம் என்பதைப் பிறர் உணர்த்தினால் மட்டுமேதான் இளம் பருவத்திலுள்ளவர்கள் பெறுகிறார்கள் என்ற கருத்தை உள்ளடக்கியே 'இளம் கன்று பயம் அறியாது' என்று சொல்லுகிறார்கள்.

(தொடரும்)

-பி.சி.கணேசன்-

# கல்வியில் முன்னணி வகித்த யாழ்ப்பாணம் இன்று மது பாவனையில் முதல் இடத்தில்

## கல்வித் தர நிலை 9 ஆவது இடத்தில் பரிசளிப்பு விழாவில் யாழ்.பணிப்பாளர்

அச்சுவேலி,செப்.17

யாழ்.மாவட்டம் ஒரு காலத்தில் கல்வியில் முன்னணி வகித்து சாதனை படைத்தது. ஆனால் இன்று மது பாவனையில் முன்னணி வகிக்கின்றது. இன்று கல்வித் தர நிலையில் யாழ். மாவட்டம் 9 ஆவது இடத்தில் உள்ளது. என்று யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா தெரிவித்தார்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் கல்லூரி அதிபர் ஆர்.இராசமனோகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே செல்வராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

**9ஆவது இடத்துக்கு வீழ்ச்சி**

யாழ்.மாவட்டத்தின் கல்வித் தரம் தேசிய மட்டத்தில் முன்னணி வகித்த நிலைமாறி, 2011 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டின் அடிப்படையில் 9 ஆவது இடத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. இது கவலைக்குரியது. இந்த நிலை தொடர்பாக சமூகத்தில் பொருத்தமான விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

இந்த வீழ்ச்சிக்கு ஆசிரியர்களும் கல்வி நிர்வாகிகளும் தான் பொறுப்பு எனக் கூறிக்கொண்டு பெற்றோரும் சமூகமும் அக்கறை கொள்ளாமல் இருக்கக்கூடாது. உண்மை நிலையை உற்றுநோக்க வேண்டும். எமது சமூகத்தின் பழக்கவழக்கத்தில் ஏற்பட்ட திடீர்மாற்றமும், மாணவர் மத்தியில் ஏற்பட்ட பணப்புழக்கமும் கட்டுப்பாடு இன்மையும் தான் இதற்குக் காரணம். இந்த விடயத்தில் பெற்றோர் தமது பங்களிப்பை மறந்து விடக்கூடாது. நிதானத்துடன் உற்றுநோக்கி சீர் செய்ய வேண்டும்.

தரம் 5 புலமைப்பரிசில் வரை பிள்ளைகளின் கல்வியில் காட்டும் அக்கறையையும் வழிப்படுத்தலையும் தொடர்ந்து மேற்கொள்ளத் தவறியமை. பிள்ளைகளை வாழ்விடத்துக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளாமல் நகரப் பாடசாலையில் மற்றும் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதால் மாணவர் மத்தியில் ஏற்பட்ட திடீர் மாற்றம். கையடக்கத் தொலைபேசிப்பாவனை, பிள்ளைகள் மத்தியில் தேவைக்கு அதிகமான பணப்புழக்கம், ஆடம்பரமான வாழ்க்கை வசதி, பெற்றோரின் தொலைக்காட்சி பாவனை, மோட்டார் சைக்கிள் பாவனை, பொருத்தமில்லாத நண்பர்களின் தொடர்பு நிலை. இந்த விடயங்களில் காணப்படும் தீமைகளைக் கட்டுப்படுத்துவதில் சீர்செய்வதில் பெற்றோர் தமது பங்களிப்பில் தவறு விடுகின்றனர்.

பெற்றோர்கள் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் தொடர்ச்சியான அக்கறையும் மேலான கவனமும் செலுத்தும் அதேநேரத்தில், தமது வாழ்விடத்துக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கிராமியச் சூழலில் சகல வசதிகளும் கொண்ட பாடசாலைகள் செயற்பட வேண்டும் என்பதற்காகவே இசுறு பாடசாலை மற்றும் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டம் 5000 ஊட்டப்பாடசாலை வேலைத்திட்டம் என்பன முன்னெடுக்கப்படுகின்றன.

பெற்றோர் தமது பிள்ளைகளை நகரப் பாடசாலைகளை நோக்கி அனுப்பி வைப்பதால் எதிர் கொள்ளும் தீமைகள் அதிகம். இந்த நிலையில் தமது வாழ்விடத்துக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

யாழ்.கல்வி வலயத்தில் உள்ள மூன்று கோட்டங்களில் நல்லூர், யாழ்ப்பாணம் கல்விக் கோட்டம் இரண்டும் கல்வியில் முன்னணியில் இருக்கும் அதேநேரம் கோப்பாய்க் கல்விக் கோட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. தற்போதைய கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலையிலும் குறைந்த மட்டத்தில் கோப்பாய் கோட்டம் உள்ளது. ஏன் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள மாணவர்களில் திறமையுள்ளவர்கள் நல்லூர், யாழ்ப்பாணம் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் அனுமதிபெற்று கற்கின்றனர். அவர்களின் பெறுபேறு அந்தக் கோட்டங்களுக்கு உரியதாகி விடுகின்றது. இந்த நிலை மாற வேண்டும் கோப்பாய் கோட்டத்தின் கல்வி அடைவுமட்டம் உயரவேண்டும் என்றார்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை கல்லூரியின் பழைய மாணவனும் அச்சுவேலி புனித திரேசாள் கல்லூரி ஆசிரியருமான க.துஷ்யந்தன் நிகழ்த்தினார்.

(எ-11)

# பிரிவுபசார விழா

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றி இளைப்பாறியும் இடமாற்றம் பெற்றும் சென்ற கல்வி அலுவலர்களுக்கான பிரிவுபசார விழா கடந்த வெள்ளிக்கிழமை வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வலயக் கல்வி அலுவலக ஊழியர் நலன்புரி சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு அதன் தலைவர் ஆ.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது.

வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வலிகாமம் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற பொ.இரவிச்சந்திரன், வலய விஞ்ஞான பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி இளைப்பாறிச் சென்ற ந.பாக்கியநாதன் ஆகியோருக்கு பிரவுபசார விழா நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் உட்பட வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் உரையாற்றினர்.

(எ-9)


# நியமனம்

வடக்கு மாகாணசபையின் கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளராக வைத்திலிங்கம் குகதாஸ் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முன்னர் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மற்றும் புனர்வாழ்வுத் திட்டத்தின் (NEHRP) கணக்காளராகக் கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடக்கு மாகாண கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக இதுவரை காலமும் கடமை புரிந்த க.மகாலிங்கம் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார்.

(எ-288)




யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட தேசிய பாடசாலையின் முத்தமிழ் விழாவும் 'கலைத் தளிர்' சஞ்சிகை வெளியீடும் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் வடமாகாண கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து ராதாகிருஷ்ணன் நூலின் முதற் பிரதியை வழங்குகிறார். மருத்துவர் [illegible] பெற்றுக் கொள்கிறார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

**விளம்பர முகவர்கள்:** 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# இதுவும் ஒரு காரணமா?

**ஆஸி. நோக்கிய படகுப் பயணங்களும், இடைநடுவில் இளைஞர்கள் பிடிபடுதலும் இன்னமும் அனுமார்வால் போல நீண்டுகொண்டே இருக்கிறது. பல லட்சங்களைக் கொடுத்து எப்படியேனும் கடல் கடந்து, ஆஸிக்கு உயிரைப் பணயம் வைத்து செல்வதில் இளைஞர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.**

பாறையில் மோதி படகு சிதறினால் என்ன, இடைநடுவில் பிடிபட்டு கொடுத்த பணமும் போனால் என்ன அதைப்பற்றியெல்லாம் கணக்கெடுக்காது திரைகடலோடி திரவியம் தேடுவதற்கான பயணங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. நேற்றுக் காலை கூட 52 பேர் ஆஸிக்குச் செல்லும் வழியில் கைதாகியுள்ளனர்.

இப்போது ஆஸிப் பயணத்துக்கான பிரதான புறப்படு மார்க்கமாக இலங்கையின் வடபகுதிக் கடற்பகுதி புதிதாக உருவெடுத்துள்ளது. இதனை அண்மைக்காலமாக வடபகுதிக் கடலில் பிடிபட்ட சட்டவிரோதப் பயணப் படகுகள் மூலம் உணரமுடிகிறது. இதனைத் தடுப்பதற்காக விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கடற்படை அறிவித்தும் கூட, கங்காரு தேசம் நோக்கிய படையெடுப்புகளுக்கு முற்றுப்புள்ளி விழுந்தபாடாயில்லை.

போர் நிகழ்ந்த காலப்பகுதியில் வடக்கின் ஒட்டுமொத்த கடற்பகுதியையும் கழுகுப் பார்வையில் கடற்படை வைத்திருந்தது. ஒரு சிறிய படகு நகர்ந்தால் கூட மோப்பம் பிடித்துவிடும் வல்லமையும் அதற்கு இருந்தது. இப்போதும் கடற்படையிடம் கடலை ஒரு அங்குலம் கூட தவறவிடாது கண்காணிக்கக்கூடிய நவீன சாதனங்கள் இயங்கு நிலையிலேயே உள்ளன. ஆயினும் 40 இற்கும் மேற்பட்டோர் பயணிக்கக்கூடிய பல நாட் கலன்கள் எப்படி கடற்படையை உச்சிவிட்டு பயணிகளையும் ஏற்றிக்கொண்டு பறக்கமுடியும்?

அதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று, ஆஸிப் பயணிகளை ஏற்றிச்செல்லும் படகுகள் யாவும் சிங்கள முதலாளிகளுக்கு சொந்தமானவை. இரண்டாவது, கடற் படையினருக்கு தெரிந்தே–அவர்களுக்கும் ஒரு தொகைப் பணம் வழங்கப்பட்டே– இந்தப் பயணங்கள் நடப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த இரண்டு காரணங்களை விடவும் மூன்றாவதாகவும் ஒரு காரணம் இருக்கக்கூடும் எனவும் சந்தேகம் எழுப்பப்படுகிறது. 'சட்ட விரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு செல்ல வேண்டாம்' என்று வெளிப்பூச்சுக்கு அரசு மாரடித்துக் கொண்டாலும், தமிழ் இளைஞர்கள் ஆஸிக்குச் செல்வதற்கு அரசின் மறைமுக ஆதரவு இருக்கின்றது என்பதே அந்தச் சந்தேகம்.

புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் வடக்குக் கிழக்கில் ஆயுத முனையில் மௌனிக்கப்பட்ட தமிழர்களின் உரிமைக் குரல், தற்போது மெல்ல மெல்ல வெவ்வேறு திசைகளில், வெவ்வேறு கோரிக்கைகளுடன் எழத் தொடங்கிவிட்டன. நில அபகரிப்பு, அரசியல் கைதிகளின் படுகொலை, காணாமல் போனோர் விவகாரம் என்று போராட்டங்கள் முளைகொள்வத் தொடங்கிவிட்டன. இந்தப் போராட்டங்களை வளரவிட்டால் மீண்டும் ஒரு பெரும் சக்தியாக தமிழர்கள் ஒன்றிணைந்து, ஆயுதப் போரில் குதித்துவிடுவார்களோ என்ற அச்சம் அரசுக்கு உண்டு.

போராட்டத்தின் ஆதார சக்தி இளைஞர்கள் கைகளிலேயே உண்டு. இளைஞர்களின் எண்ணிக்கையை தமிழ்சமூகத்தில் இருந்து குறைப்பதன் மூலம் அவர்களின் உரிமைக் குரலையும் பலவீனப்படுத்திவிடலாம். இந்தக் கணக்கை மனதில் கொண்டே இலங்கையில் இருந்து, தமிழ் இளைஞர்களை ஆயிரக்கணக்கில் அப்புறப்படுத்துவதற்கு ஆஸிப் பயணத்தை அரசு ஒரு கருவியாகக் கையாளுவதாக ஐயங்கள் எழுந்துள்ளன. அதனாலேயே அனேக பயணங்கள் ஆஸி. வரை அனுமதிக்கப்படுவதாகவும், சாட்டுக்கு ஓரிரண்டு படகுகள் பிடிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இன்னமும் ஆஸிக் கனவில் மிதக்கும் இளைஞர்கள் இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு, இனியாவது தமிழ் மக்களின் உரிமைக் குரலுக்கு பலம் சேர்க்க முனைவார்களா?

# கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சர் மத்தியில் மேலும் ஒரு முழு அமைச்சர்

## ஹக்கீமின் பேரம் இதுதான்

சண்டே ரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து கோகுலன்

பல்லின சமூக அமைப்பைக் கொண்ட கிழக்கு மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சியானது 14 ஆசனங்களை வெற்றி கொண்டு முன்னிலையில் திகழ்ந்தாலும் அந்த மாகாணத்தில் தொங்கு மாகாண சபையொன்றுக்கே வழி சமைத்துள்ளது. இலங்கை தமிழரசுக்கட்சி 11 ஆசனங்களுடன் இரண்டாவது இடத்திலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களுடன் மூன்றாவது இடத்திலும் வந்துள்ளன.

ஐ.தே.கவுக்கு 4 ஆசனங்கள் கிடைத்துள்ளன. ஐ.ம.சு. முன்னணிக்குக் கிடைக்கும் இரண்டு போனஸ் ஆசனங்களையும் சேர்த்து மொத்தம் 16 ஆசனங்கள் வந்தால் சிறுபான்மை ஆட்சியொன்றை அமைக்க முற்பட்டாலும் 37 அங்கத்தவர்களைக் கொண்ட சபையில் தோல்வியைத்தான் எதிர்கொள்வதாய் இருக்கும்.

இந்த நிலைமையில் அரசியலில் பேரம் பேசுதல் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டிருப்பதை சுட்டிக்காட்டத் தேவையில்லை. எதிர்த்தரப்பு உறுப்பினர்களை தன்பக்கம் இழுத்துக் கொள்வதற்கு ஐ.ம.சு. முன்னணி பிரமுகர்கள் தாராளமாக சலுகைகளும் பண முடிப்புகளும் வழங்குவதற்கு முன்வந்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன. இந்தப் பின்னணியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இப்பொழுது எல்லாத் தரப்பினராலும் வருந்தி அழைக்கப்படும் விருந்தாளியின் நிலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்.

தேர்தல் காலத்தில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அரச தரப்பினரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். அரசியல் அமைச்சராகவிருக்கும் அவர் தேர்தலுக்குப் பின்னர் தமது அமைச்சர் பதவி குறித்து முடிவெடுக்க வேண்டியிருக்கும் என்று அமைச்சர் அழகப்பெரும போன்றவர்கள் சாடினார்கள். இப்போது மாகாணசபையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அமைச்சர்கள் ஹக்கீமின் ஆதரவைத் தேடிச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் விடுத்திருந்த அறிக்கையில் தங்கள் கட்சி மாகாண சபையில் ஆட்சியமைக்கப் போவதாகவும் அதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஐ.தே.கவும் ஆதரவளிக்கவிருப்பதாகவும் அறிவித்திருந்தார்.

இருந்தாலும் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த சிரமத்தைப் பார்க்கையில், இலங்கை தமிழரசுக்கட்சி அமைக்கக்கூடிய மாகாண்சபை நிர்வாகத்தில் தமது கட்சியும் இணைந்து கொள்ளுமா என்பது பற்றி முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஹக்கீம் எந்தவித உறுதிப்பாட்டையும் தெரிவித்திருப்பதாகத் தெரியவில்லை. அதே போல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் அவர் எதுவித வாக்குறுதியையும் வழங்கியிருக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் எந்த அளவுக்கு அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொறுத்தே அவர்கள் முடிவு அமையும் என்று தெரிகிறது.

இப்பொழுது ஏற்பட்டுள்ள குழப்பகரமான தேர்தல் முடிவுகள் நிலைமையில் கிழக்கு மாகாணத்தில் சகல கட்சிகளையும் கொண்ட கூட்டணி ஆட்சியொன்றை உருவாக்குவது பொருத்தமாய் இருக்கும் என்று அரசில் உள்ள பங்காளிக் கட்சிகளில் ஒன்றான கம்யூனிஸ்ட் கட்சி யோசனை தெரிவித்துள்ளது. ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் அப்படியான ஓர் ஆட்சியை ஏற்படுத்தலாம் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் அமைச்சருமான டி.ஈ.டபிள்யூ குணசேகர யோசனை முன்வைத்துள்ளார். ஆனால் அப்படியான ஒரு கூட்டாட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இணைத்துக் கொள்வதற்கு பெரும்பான்மையான அரசாங்கக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு விருப்பமில்லை. தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைந்து கொள்வதற்கு த.தே.கூட்டமைப்பு மறுத்து வருகின்றமை இதற்குக் காரணம் என்று தெரிகிறது என்றாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இது வரைக்கும் கூட்டாட்சியொன்றை அமைப்பது தொடர்பாக அரசு எம்முடன் பேசவில்லை. அவ்வாறான அழைப்பு ஏதும் கிடைக்குமானால் அதைப்பற்றி நாம் ஆலோசிப்போம் என்று குறிப்பிட்டுள்ளார். கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை காலிமுகத்திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு கூட்டத்துக்காகக் கூடியிருந்தார்கள். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மண்டபத்துக்குள் நுழைந்த போது மாபெரும் வரவேற்பு ஆரவாரம் இடம்பெற்றது. உறுப்பினர்களைக் கைகூப்பி ஆயுபோவன் என்று ஜனாதிபதி வரவேற்றார்.

கட்சியை வெற்றிபெறச் செய்தமைக்காக அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

எல்லா மாவட்டங்களிலும் நாம் வெற்றி பெற்றுள்ளோம் என்று கூறிய ஜனாதிபதி அங்கு ஹக்கீம் நிற்பதைப் பார்த்துவிட்டு முழுமையாக இல்லை என்றாலும் கூட்டணி என்ற முறையில் எல்லா மாவட்டங்களையும் கைப்பற்றியுள்ளோம் என்றார்.

கொமன்வெல்த் 58ஆவது வருடாந்த மாநாடு கொழும்பில் நடைபெற்ற போது, கடந்த வருடம் ஒக்ரோபரில் ஆஸ்திரேலிய-பேர்த்தில் நடைபெற்ற கொமன்வெல்த் தலைவர்கள் மாநாட்டில் நிராகரிக்கப்பட்ட சில பிரச்சினைகளை பேராளர்கள் சிலர் எழுப்புவதற்கு எத்தனித்தமை ராஜபக்ஷவுக்கு கவலையைக் கொடுத்திருந்தது.

அந்த விடயம் முக்கிய சில பிரமுகர்களைக் கொண்ட குழுவினரால் எழுப்பப்பட்டிருந்தது. அதன் முக்கிய ஆதரவாளர் ஆஸ்திரேலியாவில் புகழ்பெற்ற சட்டவாளரான நீதியரசர் மைக்கப் கேர்பி ஆவார். மனித உரிமைகள் தொடர்பாக கொமன்வெல்த் ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதே அந்த விடயம். ஒருவேளை இந்த விடயம் மாநாட்டில் எழுப்பப்பட்டால் அதனை முறியடிக்கும் விதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வருகைதந்திருக்க வேண்டும் என்பது ஜனாதிபதியின் விருப்பாக இருந்தது. ஆனால் அந்த விடயம் மாநாட்டில் எழுப்பப்படவில்லை. அது ஒரு கவலை தரும் சாட்சியாக இருந்தது. இலங்கை அமைச்சர்கள் மேற்படி விடயத்தை ஆதரிக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளோடும் உள்ளூர் எதிர்க்கட்சித் தலைவர்களோடும் அவசியமற்ற விவாதங்களில் ஈடுபட்டிருந்தார்கள். ஏனைய மாநாட்டு உறுப்பினர்கள் அதனை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடந்த வியாழக்கிழமை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மீண்டும் வந்தபோது அலரிமாளிகையில் ஜனாதிபதிக்கு முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு குறித்து குறுகிய விளக்கம் ஒன்றை வழங்கினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தாம் சுமூகமான உறவைப் பேணி வருவதாகவும் கூறினார். அமைச்சர் குணசேகர முன்வைத்துள்ள ஆலோசனைபற்றி குறிப்பிட அவர் தவறவில்லை. ஆனால் அதில் ஜனாதிபதி அதிக அக்கறை காட்டிக் கொண்டதாகவுமில்லை. அதே சமயம் அதனை எதிர்க்கவுமில்லை. நாம் பிரச்சினைகளை ஆராயலாம். முதலில் அமைச்சர்களுடன் ஆராயுங்கள் என்று ஜனாதிபதி கூறினார். அதன் பிறகு அமைச்சர்கள் பஷில் ராஜபக்ஷ, அனுரபிரிய தர்சன யாப்பா, நிமால் சிறிபாலடி சில்வா, மைத்திரி பால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, டலஸ் அழகப்பெரும ஆகியவர்களுடன் ஹக்கீம் விவாதித்தார்.

### ஹக்கீமின் கோரிக்கைகள்

முஸ்லிம்கள் நீண்டகாலமாக அரசுடன் உறவு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதியை இக்கட்டான நிலைமைக்குத் தள்ளிவிட நாங்கள் விரும்பவில்லை. கிழக்கு மாகாண சபை அமைக்கும் விடயத்தில் முஸ்லிம்கள் எமக்கு அமோகமானதொரு தீர்ப்பை வழங்கியுள்ளார்கள். அவர்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை நாம் பெற்றுள்ளோம். இது ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்று ஹக்கீம் கூறினார். அதன் பிறகு தமது முதல் கோரிக்கையை அவர் முன்வைத்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முஸ்லிம் காங்கிரஸ் முதல் அமைச்சர் ஒருவரை நியமிக்கும் விடயத்தில் புறம்தள்ளி விட முடியாது. முதல் அமைச்சர் பதவியைத் தர மறுத்தமையே முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட முடிவு செய்தமைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று தேர்தலுக்கான நியமனங்கள் நடைபெறுவதற்கு முன்பதாகவே இதையே முக்கிய நிபந்தனையாக முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்திருந்தது என்று கூறினார். அவர் மேலும் கூறுகையில், எங்களுக்குப் பெரும்பான்மை இருக்கிறது. எமது சுயாதீன தனித்துவமும், பலமும் அரசுக்கு எதிரான வாக்குகளை எம்மால் பெற்றுக்கொள்ள உதவியுள்ளன. இதனை எங்களால் பேரம்பேச முடியும் என்றார். பின்னர் இரண்டாவது கோரிக்கையை முன்வைத்தார். மத்திய அரசில் மேலும் ஒரு அமைச்சர் பதவி முஸ்லிம் காங்கிரஸுக்கு வேண்டும் என்பதாகும் அது.

இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அரசு விசால மனப்பான்மை கொண்டிருக்க வேண்டும். ஏனைய கோரிக்கைகளில் 1991ஆம் ஆண்டு முதல் வடமத்திய மாகாண சபையில் உறுப்பினராக இருந்து பணியாற்றியிருந்த முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு போனஸ் உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும் என்பதும் ஒன்று. குறிப்பிட்ட அந்த உறுப்பினர் கடந்தவாரம் தேர்தலில் தோற்றுப் போயுள்ளார். அமைச்சர்கள் ராஜபக்ஷ, பிரேம ஜயந்த, அழகப்பெரும மற்றும் சில்வா ஆகியவர்கள் ஹக்கீமின் கோரிக்கைகளை கடுமையாக எதிர்த்தார்கள். இந்தச் சந்திப்பு இருதரப்புக் குழிடையில் கடும் வாக்குவாதங்களுக்கு வழி வகுத்ததாகத் தெரிகிறது. அதன் பேரில் பேச்சுக்கள் ஒரு முடிவுக்கு வந்தன.

எனது சீட்டுக்களை மேசையில் நான் விரித்து வைத்துவிட்டேன். கிழக்கு மாகாண சபைத் தேர்தலானது இம்முறை இலங்கை தமிழரசுக் கட்சியும் களம் இறங்கியுள்ளதால் சர்வதேசக் கவனத்தை ஈர்த்துள்ளது. எமக்குக் கிடைத்துள்ள தீர்ப்புக்கு நாம் அர்த்தம் கொடுத்தாக வேண்டும். அது எமது மக்களைத் திருப்திப்படுத்துவதாக இருக்கவேண்டும். நாம் ஓரங்கட்டப்படுகின்றோம் என்பதாக ஒரு தோற்றப்பாடு இருந்து வருகின்றது என்று ஹக்கீம் பத்திரிகைகளிடம் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நடத்தத் திட்டமிட்டிருந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டிருந்தபோது பஷில் ராஜபக்ஷவிடமிருந்து அவசரமாக சந்திப்பதற்கான அழைப்பொன்று வந்தது. அவசரமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில் முக்கிய சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதாகத் தெரிகின்றது. ஏனையவை ஜனாதிபதியுடன் பேசித் தீர்க்கப்படும்.

இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் காந்தா கொமன் வெல்த் மாநாட்டுக்கு வந்திருந்த இந்திய பேராளர்களுக்கு விருந்தளித்தார். அந்த விருந்தில் கலந்து கொண்ட ஹக்கீம் மற்றும் பிரதிநிதிகள் கலந்துரையாடினார்கள். ஹக்கீமுக்கு சங்கடம் கொடுக்கும் சில சம்பவங்களும் அங்கு நிகழ்ந்தன. அமைச்சர் நெவில் திஸாநாயக்க, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் றோஸி சேனாநாயக்க முதலியவர்களுடன் பேசிக்கொண்டிருந்த போது றோஸி கேட்டார் , ஹக்கீம் எந்தப் பக்கமாக நீங்கள் போகப் போகிறீர்கள் என்று. எனக்கு இது இருதலைக்கொள்ளி எறும்பின் நிலை என்றார் ஹக்கீம். அப்போது அங்கே நின்ற சுமந்திரன், 18ஆவது அரசமைப்பு தீர்மானம் நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட்ட போதும் இதையேதான் கூறினீர். பிறகு எதனை ஆதரித்தீர் என்றார்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவர்கள் சபையில் பெண்களும் இணைய வேண்டும்

லக்ஸ்மன்


**சபையில் அங்கம் வகிக்க இரகசியம் காக்கக் கூடிய, பக்கச்சார்பற்ற, வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கமுள்ள, நல்ல குணாதிசயமும், நீதியான நல்ல நடத்தையும் அனுபவம்மிக்க ஒருவரே தேவை.**

எமது பகுதிகளில் ஏற்படக் கூடிய சிறிய பிணக்குகளுக்குச் சமரசமுறையில் தீர்வு காண்பதன் மூலம் சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்த நடுவர் சபைகள் பெருமளவு உதவுகின்றன. முதலில் இணக்கசபை என கிராமங்கள் தோறும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அவை கட்சி சார்ந்த அடிப்படையில் இருந்த நிலையில் அரசியல் சார்ந்ததால் அது 1978 இல் நிராகரிக்கப்பட்டு 1988 இல் நடுவர்கள் சபையாக மாற்றப்பட்டது.

யாழ். குடாநாட்டில் முதலில் வேலணையிலும் சங்கானையிலும் தான் நடுவர்கள் சபை அறிமுகப்படுத்தப்பட்டது.

பிணக்குகளுடன் சம்பந்தப்படாத மூன்றாம் தரப்பின் உதவியுடன் பிணக்கின் அடிப்படையான காரணத்தைக் கண்டறிந்து பிணக்கோடு தொடர்புடையவர்கள் திருப்தியடையும் வகையில் தாம் தீர்மானம் எடுப்பதற்கு உதவிபுரியும் செயற்பாடாகவே நடுவர்த்துவம் கருதப்படுகின்றது.

மிகவும் குறைந்த செலவில் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய இந்தச் சபையில் போதிய அளவு பெண்கள் உறுப்புரிமையற்றவர்களாகவே உள்ளனர். நாட்டில் உள்ள நடுவர் சபைகளில் 955 பேர் மட்டுமே பெண்களாக உள்ளனர். எமது நாட்டில் 350 நடுவர்கள் சபைகள் உள்ளன. நடுவர்கள் சபைகளில் பெண்கள் மிகவும் குறைந்த அளவிலேயே பங்காளிகளாகக் காணப்படுகின்றனர். குடும்பச் சூழ்நிலை, அமைப்பு முறைகள், பாலியல் வக்கிரங்கள் காரணமாக அவர்கள் இது



போன்ற விடயங்களில் நாட்டம் கொள்வது பெரிய அளவில் இல்லாமல் போய்விடுகின்றது.

ஆண்களே கூடுதலாக இந்தச் சபைகளில் அங்கம் வகிப்பதால் தமது பிரச்சினைகளைப் பெண்கள் இங்கே கொண்டுவருவதில்லை.

இன்று பெண்கள் குடும்பத்தில் கணவருடன் ஏற்படக் கூடிய பிரச்சினைகள், மற்றும் வன்புணர்வுகளுக்கு எதிரான முறைப்பாடுகள் இங்கே முறையிடக்கூடியதான நிலை உருவாக நடுவர் சபைகளில் பெண்களின் பங்களிப்பைக் கூடுதலாக்க வேண்டும்.

குடும்பத்தில் தமக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளோ அன்றி மற்றொருவரால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்தோ வெளிப்படையாக மனம்விட்டு ஒரு பெண்ணிடம் கூற அவர்கள் தயக்கம் கொள்ளமாட்டார்கள். நடுவர் சபையில் கூடுதலான பெண்கள் இருப்பின் அது பெண்களின் நலனுக்கு உகந்ததாகவே அமையும் என்பது மறுப்பதற்கில்லை.

சபையில் அங்கம் வகிக்க இரகசியம் காக்கக் கூடிய, பக்கச்சார்பற்ற, வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கமுள்ள, நல்ல குணாதிசயமும், நீதியான நல்ல நடத்தையும் கொண்ட அனுபவமுமிக்க ஒருவரே தேவை. அதற்குரிய சமூகத்தில் அப்படிப்பட்ட ஒருவர் நான் தான் என்ற மன உறுதியுடன் ஒவ்வொரு செயலிலும் இவற்றைக் கடைப் பிடிப்பவராக இருக்க வேண்டும்.

இவ்வாறான ஆணோ, பெண்ணோ நடுவர் சபையில் தம்மை இணைத்துக் கொள்வது இணக்கப்பாடு நிறைந்த சமரசத் தீர்வுக்கு வழிவகுக்கும் என்பதை ப.சனாதனசர்மா நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நடுவர்களுக்கான கூட்டத்தில் தெளிவுடன் கூறினார். வி.சவரிநாயகம், லால்காந்த ஆகியோரும் நடுவர் சபைகளில் பெண்கள் அதிகரித்த அளவில் இடம்பெறவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர்.

இன்று பெண்கள் பல்வேறு துறைகளிலும் தலைமைத்துவப் பொறுப்புக்களிலும் தம்மை இணைத்துக் கொண்டு ஆண்களுக்கு நிகராகச் சிறந்த சேவைகளை வழங்குகிறார்கள். எல்லா நிலைகளிலும் சரிசமமாக உள்ள போதும் நடுவர்கள் சபைகளை அவர்கள் கண்டுகொள்வதில்லை. நாட்டில் உள்ள அனைத்து நடுவர் சபைகளிலும் ஊர்காவற்றுறையில் மட்டுமே பெண்கள் கூடுதலாக உள்ளனர். அங்கே உள்ள சபையில் எட்டுப் பெண்கள் உள்ளனர்.

கிராமப் புறங்கள் தோறும் ஏற்படக்கூடிய சிறிய பிணக்குகளை சம்பந்தப்பட்ட இரு சாராரையும் அழைத்து அவர்களுடன் கலந்துரையாடி பகைமைகளற்ற இருசாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான தீர்வை ஏற்படுத்தக்கூடிய நீதி நியாயத்தை மதிக்கும் பெண்கள் நடுவர்கள் சபையில் பெருமளவு தம்மை இணைத்துக்கொள்ள முன்வர வேண்டும்.

# ஆண்களுக்கு மட்டும் ஏற்படும் புற்றுநோய்

மருத்துவர்
ச.முருகானந்தன்

**புரொஸ்ரேட் புற்றுநோயின் அறிகுறிகள் சிறு நீர்த்தொகுதியில் ஏற்படும் மாற்றங்களாக வெளிப் படுகின்றன. இந்த அறிகுறிகள் வேறு சில நோய்களிலும் ஏற்படலாம். சிறுநீர்த் தொற்று, சிறுநீர்க் கல்லு, சிறுநீர்ப் பாதையில் சவ்வு வளர்தல் என்பவற்றிலும் இந்த நோய் அறிகுறிகள் ஏற்படும் என்பதால், இது புற்றுநோயா என்பதை இரத்த, ஸ்கான் பரிசோதனை மூலம் மட்டுமே உறுதிப்படுத்தலாம்.**

புற்றுநோய்கள் மிகவும் ஆபத்தானவை. இதற்கான சிகிச்சை முறைகளும் கடினமானவை. இந்தப் புற்று நோய்களினால் இறப்பவர்களின் தொகையும் அதிகமாக இருப்பதை நாம் அறிவோம்.

ஆயினும் இந்தப் புற்று நோய்களை நேரகாலத்துடன் இனங்கண்டு சிகிச்சை பெறுவதன் மூலம் பூரணமாகக் குணப்படுத்தவும் முடியும். அந்த வகையில் இன்று நாம் ஆண்களில் மட்டும் ஏற்படுகின்ற Prostate Cancer (புரொஸ்டேட் புற்றுநோய்) பற்றி நோக்குவோம்.

ஆண்களின் சிறுநீர்த் தொகுதியில் சலப்பைக்கு வெளியே கீழ்ப் புறமாக, ஆண் குறியின் மேற்பகுதியில் சலக்குழாயின் ஆரம்பப் பகுதிக்கு அருகே இருக்கும் ஒரு சுரப்பியே Prostate சுரப்பியாகும். வயது அதிகரிக்கும் போது பெரும்பாலானவர்களுக்கு இது வீங்குவதுண்டு. பலருக்கு இந்த வீக்கம் சாதாரணமானதாக இருக்கும். இது சலம் போகும் போது இடையூறை ஏற்படுத்தும். இதை மருந்துகள் மூலம் சீராக்க முடியும். அதிக இடையூறு உள்ளவர்களுக்கு இதனைச் Prostatectomy சத்திர சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும்.

இந்தக் கட்டிகள் சாதாரண கட்டிகளாக (Benign Tumour) இருக்கும் வரை நாம் அஞ்ச வேண்டியதில்லை. சிலரின் இந்தக் கட்டிகள் Malignant புற்று நோயாக இருப்பதே ஆபத்தானது புரொஸ்டேட் சுரப்பியில் காணப்படும். திசுக்களின் கலங்கள் பல்கிப் பெருகி கட்டுப்பாடின்றி வளர்ந்து (Multiplication Without Differentiation) பெரிய கட்டியாதலே புரொஸ்டேட் புற்றுநோயாகும். இக்கட்டிகள் குறுகிய காலத்துள் விரைந்து வளர்ச்சியுற்று மூர்க்கம் கொண்டதாகி பிற உறுப்புகளுக்கும் பரவுகிறது. அருகேயுள்ள எலும்புகள் தாக்கமடைவதால் கடுமையான வலியும் ஏற்படலாம்.

புரொஸ்ரேட் புற்றுநோயின் அறிகுறிகள் சிறு நீர்த்தொகுதியில் ஏற்படும் மாற்றங்களாக வெளிப்படுகின்றன. இந்த அறிகுறிகள் வேறு சில நோய்களிலும் ஏற்படலாம். சிறுநீர்த் தொற்று, சிறுநீர்க் கல்லு, சிறுநீர்ப் பாதையில் சவ்வு வளர்தல் என்பவற்றிலும் இந்த நோய் அறிகுறிகள் ஏற்படும் என்பதால், இது புற்றுநோயா என்பதை இரத்த, ஸ்கான் பரிசோதனை மூலம் மட்டுமே உறுதிப்படுத்தலாம்.

இந்த நோயின் ஆரம்ப அறிகுறியாக சிறுநீர் கழித்தலில் சிரமம் ஏற்படுவதோடு . சில வேளைகளில் முழுமையான அடைப்பும் ஏற்படலாம். இவர்களுக்கு அடிக்கடி சலம் போகும். ஆனால் தொடர்ச்சியாகப் போக முடியாமல் விட்டுவிட்டு போகும். இரவில் கூடுதலாக சலம் போகும். சலம்விடும் போது நோவோ, எரிச்சலோ ஏற்படலாம். சில வேளை சிறுநீர் கழிக்க ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்படும். அவ்வாறே சலம் விடுவதை நிறுத்துவதிலும் சிரமம் ஏற்படலாம். எப்போதாவது சிறுநீரில் இரத்தம் வெளியேறுவதுண்டு. இடுப்பில் உழைவு, நோவு அடிவயிற்று நோவு என்பவனவும் ஏற்படலாம். உடலுறவின்போது ஸ்கலிதம் வெளியேறும்போது நோவாக இருப்பதுடன், ஸ்கலிதத்தில் இரத்தமும் வெளியேறும்.

பொதுவாக புரொஸ்டேட் காண்கள் கட்டிகள் மெதுவாக வளர்ச்சியடைகின்றபோதிலும், சில வேளைகளில் மிக வேகமாக வளர்ந்து பரவுவதுண்டு எனவே சிறிதளவு சந்தேகம் இருப்பினும் வைத்திய ஆலோசனை பெற்று, பரிசோதனைகள் மூலம் நோயை இனம் காண்பதன்மூலம் உரிய நேரத்தில் உரிய சிகிச்சையைப் பெற்று குணமாகும் வாய்ப்புக் கிட்டும்.

புரொஸ்டேட் புற்றுநோய்க்கு அதன் நிலையைப் பொறுத்து பல்வேறு சிகிச்சை முறைகள் உண்டு. BIOTHERAPY அல்லது IMMUNOTHERAPY என்னும் சிகிச்சை முறையின் மூலம் ஒருவரின் நோய் எதிர்ப்புச் சக்தியை, புற்றுநோய்க்கு எதிராக போராடும் சக்தியை அதிகரிக்க முடியும். அடுத்த கட்டமாக ஆண்பால் ஓமோன்களைக் கட்டுப்படுத்துவதன்மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. இதன் அடுத்த கட்டமாக ஏனைய புற்றுநோய்களுக்கு எதிராக பாவிக்கும் CHEMOTHERAPY மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கலாம். புற்றுநோய் முற்றிய நிலையில் ஆரம்பத்திலேயே இதைத் தொடங்கலாம்.

அடுத்தது சத்திர சிகிச்சை மூலம் கட்டியை அகற்றுவதாகும். உடல் நிலை ஓரளவு ஆரோக்கியமாக உள்ளவர்களாக இருந்தால் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள முடியும். தற்போது Da-Vinci rogotic Surgery என்ற நவீன சத்திரசிகிச்சை நடைமுறைக்கு வந்துள்ளது.

சில நோயாளர்களில் சத்திர சிகிச்சையைத் தொடர்ந்து கதிர் வீச்சு சிகிச்சை (RADIATION) அவசியமாகின்றது. இதன்மூலம் நோய் பிற பகுதிகளுக்கு பரவுவதையும் எஞ்சியுள்ள நோய்க் கலங்கள் வளர்வதையும் தடுக்க முடிகிறது.

ஆரம்ப நிலையில் புரொஸ்டேட் புற்றுநோயை இனம் காண்பதுடன், உரிய சிகிச்சையைத் தாமதமின்றிப் பெறுவதன்மூலம் பூரணமாக இந்த நோயைக் குணப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலை வேறு மதிப்பு வேறு

அந்தக் காலத்தில் வீட்டுக்கு யாராவது பெரியவர்கள் வந்தால், உட்கார்ந்திருக்கிற சிறியவர்கள் எழுந்து நிற்க வேண்டும். அங்கு ஒரு நாற்காலி மட்டும் இருந்தால் பெரிய வர்களை உட்கார வைத்து விட்டு, சின்னவர்கள் நிற்க வேண் டும். பெரியவர்கள் உள்ளே வரும் போதும், புறப்படும் போதும் பாதங்களைத் தொட்டு வணங்க வேண்டும். இப்படி சில மரபுகள் இருந்தன. இவற்றை அர்த்தமற்ற அடிமைத் தனம் என்கிறார்கள் நம் இளைய தலைமுறையினர்.

பதவி அல்லது அதிகாரம், அல்லது பணத்தில் பெரிய வர்களுக்கு வேண்டா வெறுப்பாக, அல்லது பயம் காரண மாக மதிப்பளிப்பதைக் கூச்சமில்லாமல் செய்யும் இளைய தலைமுறையினர் பதவி, பணம், அதிகாரம் இல்லாத பண்பாளர் களான பெரியோர்களை ஏன் மதிக்க வேண்டும் என்கிறார் கள். அவர்கள் வரும் பொழுது நாம் எழுந்து நிற்கா விட்டால், அவர்கள் என்ன செய்து விட முடியும் என்று கேள்வி கேட்கிறார்கள்.

ஆங்கிலத்தில் value என்று ஒரு சொல் இருக்கிறது அது மதிப்பை குறிப்பது. price என்று இன்னொரு சொல் இருக்கிறது. அது விலையைக் குறிப்பது. ஒரு விதவைப் பெண்ணிடம் அவன் காதலன் தரும் ரோஜாவின் விலை ஒரு ரூபாய். ஆனால் அதன் மதிப்பு.. பல கோடி. காரணம் அந்த ரோஜாவில் அவளது எதிர்காலப் பிரகாசம் அடங்கி இருக் கிறது. எந்தப் பொருளுக்குமே விலை ஒரு விடயமல்ல.. மதிப்புதான் முக்கியம். இன்று எல்லோரும் எந்தப் பொருளை எடுத்தாலும் விலையைத்தான் கவனிக்கிறார்கள். அதன் மரியாதையை அல்ல. கண்ணபிரான் தலைமீதுள்ள மயிலிறகும், கையில் உள்ள புல்லாங்குழலும் விலைகுறைவாகக் கிடைக் கலாம். அவை படத்தில் வரையப்படும் போது கண்ணனை யும், அவன் பரத்துவத்தையும் அவன் அருளும் முத்தியையும் விளக்கும் பேறு பெற்றவை. Price முக்கியமல்ல Value தான் முக்கியம். இளைய தலைமுறை அவசியம் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். பெரியவர்களை மதிப்பதில் பாரம்பரியம், பண்பாடு என்று பல விடயங்கள் அடங்கி இருக்கின்றன!

மகாபாரதத்தில் ஒரு நிகழ்ச்சி, பாரத யுத்தகளத்தில் மாவீரன் கர்னனைத் தருமர் வெல்ல நினைத்தார். ஆனால் எதிரமறையாக முடிவு ஆனது. கர்னண் தருமரை வென்றான். அவன் நினைத்திருந்தால் தருமரைக் கொன்று விட முடியும் ஆனால் கர்னனது தாய் குந்தி ''அருச்சுனனைத் தவிர மற்ற யாரையும் கொல்ல வாய்ப்பு வந்தாலும் கொல்லக் கூடாது'' என்று சத்தியம் வாங்கியிருந்தாள். அதற்குக் கட்டுப்பட்டு தன் தம்பி தருமனைக் கர்னன் கொல்லாமல் ஓட ஓட விரட்டினான்.

அவமானத்தில் பாசறை நோக்கி ஓடிய தருமர், வழியில் அர்ச்சுனனைப் பார்த்து ''எப்படியாவது கர்ணனைக் கொன்று அந்த வெற்றிச் செய்தியுடன் என்னை வந்து பார்'' என்று கோபத்துடன் கூறிவிட்டு வந்தார்.ஆனால் அர்ச்சுனன் கர்ணனைக் கொல்லப்போன போது அர்ச்சுனன் பட்ட அவஸ்தை சொல்லில் அடங்காது. அவனை அறியாது பாசம் படை நடத்தியது. அதனால் படை பாசம்(கட்டு) உற்றது.

கர்ணனைக் கொல்ல முகம் பார்த்தால் தர்மம் முகமாக கர்ணன் முகம் தெரிகிறது. முகத்தைத் தவிர்த்து மார்பைப் பார்த்தால் அது பீமன் மார்பாக மின்னியது. அதனையும் தவிர்த்து அர்ச்சுனன் கர்ணனின் கால்களைப் பார்த்தால் அது நாளும் அவன் விழுந்து வணங்கும் குந்தி தேவியின் கால் களாய்த் தெரிகிறது. காரணம்.. கர்ணன் குந்தி தேவியின் மகன் தானே. எனவே சகோதரனாய்த் தோன்றிய (உண்மை) கர்ணனைக் கொல்லாமல் தடுமாறிப் பாசிறக்கு தரும்பினான் அர்ச்சுனன்.

உண்மை அறிந்தும் அர்ச்சுனனைக் கோபமாகத் திட்டி னார் தருமர். இவனை நம்பி போரை இழுத்துக் கொண் டோமே என்று நொந்து அர்ச்சுனன் வில்லைப் பழித்துக் கேலி பேசினார். அவ்வளவு தான்...'தன் வில்லை யார் பழித் தாலும் கொல்லுவேன்'' என்று சபதம் செய்திருந்த அர்ச்சுனன் வில்லை எடுத்துக் கொண்டு தருமரைக் கொலை செய்யத் துணிந்தான். ஆனால் பாசம் தடுத்தது.

''கண்ணா என் சபதப்படி தருமரைக் கொல்ல வேண்டும். ஆனால் அண்ணனைக் கொல்ல மனம் வரவில்லையே! கொல்லவும் வேண்டும், ஆனால் தருமர் சாகவும் கூடாது. என்ன செய்வது?''என்று புலம்பினான் அர்ச்சுனன். மாயக் கண்ணன் சொன்ன பதில் என்ன தெரியுமா?''கொல்லாமல் கொல்லலாம் சாகாமல் வாழலாம்.. தருமர் உன்னைவிடப் பெரியவர். பன்மையில் நீங்கள் என்று அழைக்கப்பட வேண்டியவர். அவரை ஒருமையில் நீ என்று அழைத்ததால் கொன்றதுக்கு சமம்'' என்றான் கண்ணன். நீங்கள் என்று அழைக்கப்பட வேண்டிய தருமரை 'நீ' என்று பன்மையில் கொல்லாமல் கொன்ற அர்ச்சுனன், ''பெரியோரை அவமதித்த நான் இனி எப்படி உயிர் வாழ முடியும். எனவே தற்கொலை செய்து கொள்வேன்.'' என்று வாளை உருவித் தற்கொலை செய்து கொள்ளப் போனான். '' நில்'' என்று தடுத்த கண்ணன், "எப்படித் தருமரைக் கொல்லாமல் கொன்றாயோ அப்படி உன் னைச் சாகாமல் சாகடித்துக் கொள்"என்று சிரித்தான். ''எப்படி? என்றான் அருச்சுனன். ''தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது தற்கொலைக்குச் சமம்.. நீயே உன்னைப் புகழ்ந்து கொள்.. தற் புகழ்ச்சி தற் கொலையாகி விடும்'' என்றான்.




பெரியோரை ஒருமையில் பேசுதல் அவர்களை அவமதிப்பதாகும்-இது கொலைக்குச் சமமாகும். தற்புகழ்ச்சி என்பது தற் கொலை.. கொஞ்சமும் கூச்சம் இல்லாமல் ஓயாமல் தன்னைப் புகழ்ந்து கொள்ளும் ஒரு சில ஜடங்களுக்கு இந்த மகா பாரதக் கதையை யார் சொல்லுவது? எப்படிப் புரிய வைப்பது?

**சுகி.சிவம்**

# இராமாயணத்துடன் தொடர்புடைய யாழ்.வில்லூன்றி வீரகத்தி விநாயகர்

**நயினை நாக கோபால கிருஷ்ணன்**

“ இந்து ஆகம விதிமுறைக்கமைய ஆலயங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதைச் செயலில் காட்டி நிர்வகிக்கப்படுகின்றது. ''வட மொழியும் தென்தமிழும் ஆயினான் காண்'' என்று அப்பரடிகள் சொன்னவாறு திருமுறைகள் பண்ணோடு ஓதப்படுகின்றன.





இலங்கையில் பூர்வீக தனுக்கோடி என்று ஏற்றிப் போற்றப்படும் தெய்வீகத் திருத்தலம் தான் யாழ்.வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற வரலாற்றுச் சிறப்பை தன்னகத்தே கொண்டு அடியவர்க்கு அருள் பாலிக்கும் வில்லூன்றி வீரகத்தி விநாயகப் பெருமானின் தெய்வீகத் திருவருளில் அள்ளுண்ட அடியவர்கள்அல்லல் அற்று அருள் வாழ்வு வாழ்கின்றனர். முத்த மிழையும் வேண்டுவோர்க்கு வாரி வழங் குகின்ற ஞான மூர்த்தியாக எம்பெருமான் வில்லூன்றியில் வீற்றிருந்து அருள் பாலிக் கின்றான்.

இராமாயணத்துடன் தொடர்புடைய வரலாற்றுச் சிறப்பைக் கொண்டது இந்த ஆலயம். இராவணனைச் சங்காரம் செய்த இராமபிரான் வில்லை ஊன்றி வெளிப்பட்ட தீர்த்தத்தில் தீர்த்தமாடி வீரத்தைத் தந்த விநாயகனை வழிபட்டதாக தலவரலாறு ''குன்றினுச்சி மேல் விளங்கும் கொடிமதில் சூழ் இலங்கை அன்றி நின்ற வரக்கர் கோனை யருவரைக்கீழ் அடர்ந்தாய்'' என்று திருஞானசம்பந்த சுவாமிகள் இடர்களையும் திருப்பதிகத்தில் சொன்னவாறு. இராமாயணம் இராமர்பாலம் என்பவை மற்றும் வில்லூன்றி என்ற சொற்பதங்கள் பூர்வீக வரலாற்றுச் சின்னங்கள். வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயமும் பூர்வீகதனுக் கோடி என்ற சிறப்புப் பெயர் கொண்டு விளங்குகின்றது.

வில்லூன்றி வீரகத்தி விநாயகனின் திருவருளின் வெளிப்பாட்டை 1995-1996 ஆம் ஆண்டில் வில்லூன்றி பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றியவர் சொன்ன வார்த்தைகள் வருமாறு. இராணுவப் பொறுப்பதிகாரி என்ற அதிகார மமதையுடன் காலணி யுடன் ஆலய உள்வீதியில் நுழைந்தேன். உள் சென்றபின் என்னை அறியாமல் காலணியைக் கழற்றி வீசினேன். என்னை அறியாமல் கணத்தெய்யோவை கை கூப்பி வணங்கி அமர்ந்துவிட்டேன். நான் ஒரு இராணுவப் பொறுப்பதிகாரி என்ற உணர்வு அற்றுப் போனது. எனது முகாமில் இருந்து கோயிலுக்கு மின் ஒளியை கொடுத்து வெளிச்சம் கொடுத்தேன். தினமும் கோயிலை வழிபடாவிட்டால் மன நிறைவடையாத நிலைக்குத் தள்ளப்பட்டேன்.கோயிலில் உள்ள கணத் தெய்யோவின் சக்தி என்மனப் பாரத்தை அடியோடு அகற்றி விட்டது. மாற்றலாகிச் செல்லும் வரை விநாயக பக்தனாக வழிபட்டேன்.தேங்காய் எண்ணெய், கற்பூரம் போன்ற பூசைப் பொருள்கள் அவரால் ஆலயத்துக்கு வழங்கப்பட்டது.

இராணுவ அதிகாரியை தனதாக்கிய எம்பெருமான் அவர் மூலமாக பிரதேச மக்களுக்கு எந்தவிதமான கைதுகள் பிரச்சினைகள் வராமல் தடுத்தாண்டார். வருடாந்த மகோற்சவத்தின் போது பல எண்ணிக்கையான இளைஞர்கள் அங்கப்பிரதட்டை செய்து தமது நன்றியை எம்பெருமானுக்கு செலுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கன.

யாழ்.குடாநாட்டில் உள்ள பல்வேறு ஆலய நிர்வாகத்தினருக்கு எல்லாம் ஒரு முன் உதாரணமான நிர்வாகமாக யாழ்.வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாகம் திகழ்கின்றது. இந்து ஆகமவிதிமுறைக்கமைய ஆலயங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதைச் செயலில் காட்டி நிர்வகிக்கப்படுகின்றது. ''வட மொழியும் தென்தமிழும் ஆயினான் காண்'' என்று அப்பரடிகள் சொன்னவாறு திருமுறைகள் பண்ணோடு ஓதப்படுகின்றன. அர்ச்சனைமாட்டேயாகும் என்று சேக்கிழார் பெருமான் சொன்னவாறு திருமுறைகளால் எம்பெருமான் அர்ச்சிக்கப்படுகின்றார். ''வான்முகில் வழாது பெய்க என்ற கச்சியப்பர் பாடல் எப்பொழுது பாடப்பெற வேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக இந்த ஆலயத்தில் ஓதப்படுகின்றது. பஞ்ச புராணம் ஓதப்பட்ட பின் குருக்களின்ஆசீர்வாதத்தின் பின்வான்முகில்வழாது பெய்க பாடப்பட்டு திருச் சிற்றம் பலம் சொல்லி முடிக்கப்படும் வசந்த மண்டபப் பூசை நிறைவுறும். தேர் இழுப்பதற்கு முன் திருப்பல்லாண்டுப் பாடல்கள் அத்தனையும் உரிய பண்ணோடு ஓதப்பட்ட பின் தான் தேர் இழுக்கப்படும். சித்திரா பூரணை தினத்தன்று தீர்த்த வாருதி முடிந்த பின் சித்திர புத்திரர் கதை படிக்கப்பட்டு ஆலயத்திற்கான கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பூசை செய்யப்படும். மேற் சொன்னவை யாவும் இந்த ஆலயத்தின் தனித்து வமான செயற்பாடாகும். சைவ ஆலயங்களிற்கு ஒரு வழிகாட்டல் நடைமுறை.

எந்தவிதமான விளம்பரமும் இல்லாமல் புதிய தேர் ஒரு ஆண்டுக்குக் செய்யப்பட்டு 17.05.2012 இல் வியாழன் வெள்ளோட்டமும் 19.05.2012 அன்று தேர்த்திருவிழாவும் நடைபெற்றது. திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் தொடர் கதாப் பிரசங்கங்கள் இந்த ஆலயத்தில் அந்த நாளில் நடைபெற்றுள்ளன. சைவப் பெரியார் அமரர் சோ.இராசரெத்தினம் அவர்களால் ஆலயமும் தீர்த்தக்கேணியும் அன்று பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளன. தற்போது அவரின் புதல்வர் பேரா சிரியர் இ.குமாரவடிவேல் அவரின் புதல்வர்களால் ஆலய நிர்வாகம் திறம்பட நடைபெற்று வருகின்றது. விநாயக தத்துவங்களை அழகுமிகு சித்திரங்களாகப் பொறிக்கப்பட்ட சித்திரத் திருத்தேரில் எம் பெருமான் எழுந்தருளி வீதியுலா வருகின்ற தெய்வீக திருக்காட்சி 19.05.2012 சனிக்கிழமை நடைபெற்றது. வில்லூன்றி வீரகத்தி விநாயகர் திருவருள் அனைவருக்கும் கிடைக்க திகட சக்கர நாயகன் தாழ் பணிவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - முஸ்லிம் ஆட்சியே கிழக்கில் மலர வேண்டும்

## மு.காவுக்கு தந்தி, தொலைநகல்கள் பறக்கின்றன முஸ்லிம் மக்கள், அமைப்புகள் பிரயத்தனம்

அம்பாறை,செப்.17

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு அளிக்கக்கூடாது. முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்த ஆட்சி ஒன்றை கிழக்கில் ஏற்படுத்த முடிவு எடுக்க வேண்டும் என்று அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசத்தில் உள்ள பல்வேறு அமைப்புகளும், முஸ்லிம் மக்களும் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பீடத்தை தந்தி மூலமும், தொலைநகல் மூலமும் கோரியுள்ளன.

தேர்தலில் முஸ்லிம் மக்கள் அரசுக்கு எதிராகவே வாக்களித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலி ஆகியோருக்கு இந்தத் தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தத் தந்திகளில் நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் மக்கள் அரசுக்கு எதிரான கோரிக்கையையே வெளிப்படுத்தியுள்ளனர் என்று வலியுறுத்தப்பட்டுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் எமது அபிலாசைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் என்ற எதிர்பார்ப்புடன்தான் தீர்மானிக்கும் சக்தியாக மாறுவதற்கு வழிவகுத்தது. எனவே தனித்துப் போட்டியிட எடுத்த முடிவைப் போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கில் ஆட்சி அமைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் இனியும் தாமதியாது முன்வர வேண்டும்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் புரிந்துணர்வுடனும், தாராள மனப்பாங்குடனும் இணைந்து ஆட்சி அமைக்க விடுத்துவரும் கோரிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் புறந்தள்ளி விடக்கூடாது என்றும் தந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு நூற்றுக்கணக்கான தந்திகளும், தொலைநகல்களும் முஸ்லிம் அமைப்புகளாலும், முஸ்லிம் மக்களாலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்துக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

## 45 வீடுகள் பயனாளிகளிடம்



மட்டக்களப்பு,செப்.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாலமுனைக் கிராமத்தில் வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட வறுமையான குடும்பங்களுக்கு என்று காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட முகம்மத் பின் றசீத் அல் மக்தூம் எனும் பெயரிலான கிராமம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டு, இக் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 45 வீடுகளும் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

35 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த 45 வீடுகளுமே பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மலையக ரயில் சேவை பாதிப்பு


பதுளை, செப்.17

ஒஹிய மற்றும் இதல்கஸ்சின்ன ஆகிய பகுதிகளுக்கு இடையே காட்டில் தீ பரவியுள்ளது.

காட்டுத் தீ பரவியமையால் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

தீ பரவும் அபாயத்தை கருத்தில் கொண்டு அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பதுளை மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடியுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜி. குமாரசிறி தெரிவித்தார்.

இந்த தீ காரணமாக மலையக ரயில் சேவை தாமதமடையலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இதனிடையே இந்தத் தீ காரணமாக உடரட்ட மெனிக்கே மற்றும் பொடி மெனிக்கே ஆகிய ரயில்கள் ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று நாவலப்பிட்டி ரயில்வேக் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. (ச)



பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் காணி, பிறப்பு, இறப்பு, திருமண பதிவுகள் ஆகியவற்றுக்கான நடமாடும் சேவை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

## ஆற்றில் வீழ்ந்த மாணவனைக் காணவில்லை

கட்டுகஸ்தோட்டை, செப். 17

கட்டுகஸ்தோட்டை நகரிலுள்ள பிரதான பாலத்திலிருந்து மஹாவலி கங்கையில் வீழ்ந்ததாகக் கூறப்படும் 15 வயதான பாடசாலை மாணவன் ஒருவன் காணாமற் போயுள்ளான் என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது. மஹாவலி கங்கையில் தேடுதல் மேற்கொண்ட போதும் சிறுவனை மீட்க முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## பெண்ணின் எரிந்த உடலின் எச்சங்கள் கல்முனையில் மீட்பு





சம்மாந்துறை,செப்.17

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சொறிக்கல்முனையின், பாலனர வெளி கண்டத்தின் வயல் காணியொன்றில் வைக்கோல் போட்டு எரிக்கப்பட்ட நிலையில் பெண்ணொருவரின் உடற்பாகங்கள் சில சம்மாந்துறைப் பொலிஸாரினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டன.

சம்மாந்துறைப் பொலிஸாருக்கு கிடைத்த இரக்சிய தகவலையடுத்து அவை மீட்கப்பட்டன என்று சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சில உடற்பாகங்கள் ஆங்காங்கே சிதறிக் காணப்பட்டதாகக் கூறிய சம்மாந்துறைப் பொலிஸார், இந்த உடற்பாகங்கள் மீட்கப்பட்ட இடத்திலிருந்து கைப்பிடி எரிவடைந்த நிலையில் கூரிய கத்தியொன்று காணப்பட்டதாகவும் கூறினர்.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தின் பதில் நீதிவான் ஏ.எச்.எம். அறூஸ், அம்பாறை பொது வைத்திய சாலையின் சட்ட வைத்திய அதிகாரி செனவிரத்ன, அம்பாறைப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விஜேசேகர, சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த தஹனக்க, பெரும் குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி கே.எம்.இப்றாஹீம், கிராம உத்தியோகத்தர் கே.மதன் உள்ளிட்ட பலர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணையை மேற்கொண்டனர். சில உடற்பாகங்கள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த 3 வாரங்களாக நற்பிட்டிமுனையில் சட்டம்பியார் வீதியில் வசிக்கும் பெண்ணொருவர் காணாமற் போயுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நுவரெலியா மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளருக்கு விருது

நுவரெலியா,செப்.17

தேசிய மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் தேசிய சுயதொழில் புரிவோரின் ஒன்றியத்தின் ஊடாக நுவரெலியா மாவட்டத்தில் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக பிரதேச ஊடகவியலாளர்களாகக் கடமையாற்றும் ஊடகவியலாளர்களுக்கு 'ஸ்ரீலங்கா அபிமானி' விருது வழங்கி கௌரவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அமைப்பின் தலைவர் அன்ரன் சமன்பிரிய தெரிவித்தார்.

ஊடகத்துறையில் 15 வருடங்களைப் பூர்த்தி செய்த ஊடகவியலாளர்கள் தமது அரச தகவல் திணைக்களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டையின் பிரதி ஒன்றுடன் செயலாளர், தேசிய மனிதவள அபிவிருத்தி நிறுவனம், ஊடகப் பிரிவு, இலக்கம் 52 ஏ, தினச் சந்தை கட்டடத்தொகுதி, நுவரெலியா என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர். அல்லது 0724307395, 0522051622 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ச)

## பஸ்ஸின் மிதி பலகையில் பயணித்தவர் விழுந்து சாவு

நுவரெலியா,செப்.17

சுற்றுலா சென்றுவிட்டு பஸ்ஸின் மிதி பலகையில் வீடு திரும்பிக் கொண்டிருந்த நபரொருவர் அதிலிருந்து விழுந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வீரகெட்டிய, ரன்ன வீதியில் ஏற்பட்டுள்ளது.

தங்காலை, அதுவெலேன பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய நான்கு குழந்தைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஹுங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## காத்தான்குடியில் 33 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி

மட்டக்களப்பு,செப்.17

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் மலசலகூட வசதி அற்ற குடும்பங்களுக்கு காத்தான்குடி நகரசபை மலசலகூடங்களை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துள்ளதாக நகரசபைத் தலைவர் எஸ்.எச். அஸ்வர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் 33 மலசலகூடங்களை அமைப்பதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் புதிய காத்தான்குடி றிஸ்வி நகர், பதுறியா நகர், பர்தௌஸ் நகர் ஆகிய பகுதிகளிலேயே மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்கான ஆரம்ப நிகழ்வில் யு.என்.ஹெபடட் நிறுவனத்தின் தேசிய செயற்றிட்ட ஆலோசகர் பஹ்மி இஸ்மாயில், காத்தான்குடி நகரசபைத் தலைவர் எஸ்.எச்.அஸ்வர், பிரதித் தலைவர் எம்.எம்.ஜெஸீம், நகரசபை உறுப்பினர் அலி சப்ரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் உறவினர்களில் அவமதித்த சிலர் அன்பு பாராட்டுகிற நிலை வரும். நீண்ட நாள் திட்டமிட்ட நல்லகாரியம் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சிப் பணி இனிய அனுபவம்தரும். உடல்நலம் ஆரோக்கிய பலம் பெறும்.

**இடபம்:** உங்கள் செயல்களில் சிறு குளறுபடி ஏற்படலாம். தர்க்கவாதம் நடக்கும் இடத்தில் கருத்து சொல்லக் கூடாது. தொழில் வளம் சீராக அனுபவசாலியின் ஆலோசனை உதவும். எதிர்பாராத வகையில் பணச்செலவு ஏற்படலாம். தகுதிக்கேற்ப பணக்கடன் பெறுவீர்கள்.

**மிதுனம்:** உங்கள் மனதில் சுயகௌரவ சிந்தனை அதிகரிக்கலாம். பிறரை மதித்துப் பேசுவதால் மட்டுமே எதிர்பார்ப்பு நிறைவேறும். அதிக உழைப்பால் தொழில் வளம் சீராகும். பணவரவு சராசரி அளவில் கிடைக்கும். சொந்தத் தேவைகளை பூர்த்தி செய்வதில் ஆர்வம் கொள்வீர்கள்.

**கடகம்:** உங்கள் மனம் புகழ்ச்சியை விரும்பும் நிலைக்கு உட்படலாம். உங்களைத் தகுதிக்கு மீறிப் பாராட்டுபவர்களிடம் கவனமுடன் இருக்க வேண்டும். கூடுதலாக உழைத்து தொழிலில், முன்னேற்றம் பெறுவீர்கள். கூடுதல் பணவருமானம் கிடைக்கும்.

**சிங்கம்:** உங்கள் எண்ணத்திலும், செயலிலும், சிறுமுரண்பாடு ஏற்படலாம். உங்கள் மன வெறுப்பை பிறரிடம் வெளிப்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரம் வளர கூடுதல் உழைப்பு தேவைப்படும். அறிமுகம் இல்லாதவர் தரும் உதவியை மறுப்பது நல்லது. உடல் நலத்தில் கூடுதல் கவனம் வேண்டும்.

**கன்னி:** உங்கள் மனதில் கலைரசனை அதிகரிக்கும். தொழில் வளம் சிறக்க நேர்த்தியுடன் பணிபுரிவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உறவினர்களின் வாழ்த்துக் கிடைக்கும்.

## நாளை

புரட்டாதி - 02 செவ்வாய்க்கிழமை 18.09.2012
திதி: திருதியை பி.இ. 03.09 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.இ 01.03 வரை
சுபநேரம்: 10.33- 12.03 வரை
ராகுகாலம்: 03.03- 04.33 வரை

**துலாம்:** உங்களுக்கு அறிமுகம் இல்லாதவரிடம் பொதுவிடயம் பேசக் கூடாது. கடினப் பணிகளில் தற்காப்பு அவசியம். ஆர்வமிக்க செயற்பாடு தொழில், வியாபாரம் வளர உதவும். தேவையை விடவும் கிடைக்கிற பணவரவு குறையலாம்.

**விருச்சிகம்:** உங்கள் நண்பரின் ஆலோசனையால் செயல்களை மாற்றி அமைப்பீர்கள். நல்ல விளைவுகள் திருப்திகரமாக ஏற்படும். தொழிலில் புதிய இலக்கை அடைவீர்கள். புதிய சொத்து, பொருள் சேர்க்கை உண்டு.

**தனுசு:** உங்கள் செயல்களில் கூடுதல் மதிநுட்பம் நிறைந்திருக்கும். சமூகத்தின் பார்வையில் நல்ல அந்தஸ்து பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் பெற்றுத் தரும்.

**மகரம்:** நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்காக முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில் வளர்ச்சி படிப்படியாக நிறைவேறும். தேவையான பணவரவுக்கு காத்திருக்கிற நிலை ஏற்படும். வெளியூர் பயண திட்டத்தில் மாறுதல் இருக்கும்.

**கும்பம்:** உங்களின் செயற்பாடு அவசர கதியில் இருக்கும். கவனக்குறைவால் தவறான மனிதருக்கு உதவிசெய்து சிரமம் வருவதைத் தவிர்த்திடுங்கள். தொழிலில் இருக்கும் குளறுபடியை அனுபவசாலியின் ஆலோசனையுடன் சரிசெய்வது நல்லது.

**மீனம்:** உங்கள் வாழ்வில் சாதகமான நிகழ்வு உண்டாகும். நண்பர், உறவினர்களிடம் மங்கலத்தன்மையுடன் பேசுவீர்கள். சுயமுயற்சியால் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். பணவரவில் லாபவிகிதம் கூடும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 2 | 3 | | | |
| 3 | | 4 | 5 | | | | 8 | 2 |
| | 5 | | 6 | | | 1 | | |
| 5 | | | 7 | | | | 1 | |
| 4 | 8 | | | 3 | | | 7 | 6 |
| | 7 | | | | 1 | 2 | | 4 |
| | | 6 | | | 5 | | 3 | |
| 8 | 3 | | | | 6 | 4 | | 1 |
| | | | 3 | 8 | 2 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 3 | 5 | 7 | 1 | 9 | 8 | 4 |
| 5 | 4 | 1 | 9 | 2 | 8 | 7 | 3 | 6 |
| 9 | 7 | 8 | 3 | 4 | 6 | 2 | 5 | 1 |
| 6 | 5 | 7 | 8 | 1 | 9 | 4 | 2 | 3 |
| 8 | 1 | 9 | 4 | 3 | 2 | 6 | 7 | 5 |
| 3 | 2 | 4 | 7 | 6 | 5 | 1 | 9 | 8 |
| 1 | 8 | 6 | 2 | 9 | 3 | 5 | 4 | 7 |
| 4 | 3 | 2 | 1 | 5 | 7 | 8 | 6 | 9 |
| 7 | 9 | 5 | 6 | 8 | 4 | 3 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாகாணமட்டப் போட்டியில் சாதனை
கிளி/ ஞானிமடம் அ.த.க. பாடசாலை மாணவி
**சபிந்தா சதீஸ்கரன்**
அவர்கள் தரம்: 07
சமூகவிஞ்ஞானப் போட்டியில்
மாகாண நிலையில் முதலிடம்
பெற்றமையை பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் : கிளி/ ஞானிமடம் அ.த.க.பா.

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## ஆங்கில வகுப்புக்கள்

தரம்: 6 - A/L வரையான மாணவர்களுக்கும்
அடிப்படையில் இருந்து [illegible] (No Age Limit)
[illegible] Spoken with Grammar கற்பிக்கப்படும். முடிவில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அரச அங்கீகாரம்
பெற்ற Diploma in English சான்றிதழ் வழங்கப்படும்.
இன்றே அழையுங்கள்: 077 1372 280
அராலி வீதி, யாழ்ப்பாணம்.

## கடை விற்பனை

கே.கே.எஸ். வீதியில் தாவடிச்சந்திக்கு
அருகில் கடையொன்று
விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 2719 676,
077 7484 079
(22970)(45-6-7)

## விசேட அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் திருத்துவதற்காக ஒப்படைத்து மீளப்பெறாமல் உள்ள பொருள்களை ரசீதைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளவும். 15.09.2012 இல் இருந்து ஒரு மாதத்துக்குள் மீட்கப்படாத பொருள்களுக்கு நாம் பொறுப்பாளிகளல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

V.K.இராசரத்தினம்
1C ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/3381)(5-6-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 13★08★1928
விண்ணில் 17★09★2011

திருமதி **அந்தோனியாப்பிள்ளை** (அன்னம்)
**சின்னத்துரை**

'சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்'
இரக்கம் நிறைந்த இறைவா இவ் உலகில் உமக்கு
உகந்தவராக வாழ்ந்து உமது திருப்பாதம்
வந்தடைந்த உமது அடியாளும் எங்கள்
அன்புக்குரியவருமான
அந்தோனியாப்பிள்ளை (அன்னம்)
அவர்களை உமது கருணைக் கண்ணால்
பார்த்தருளும் அவர் என்றும் உமது வான் வீட்டில் வாழ
உமது பேரிரக்கத்தை அவர் மேல் பொழிந்தருளும்
உமது மகன் கிறீஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
ஆமென்.

16/1, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி.
(22946) (45.6.7)

இவரின் பிரிவின் துயரில்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

## A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பொறியியல் வகுப்புக்கள் (Engineering Classes)

கொழும்பிற்கு செல்லாமலேயே யாழ்ப்பாணத்தில் பொறியியல் பாடத்தினை கற்க கூடிய வாய்ப்பு, கொழும்பில் உள்ள APSS நிறுவனத்தின் சிறந்த விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடத்தப்படும்.

* Telecommunication System Engineering
* Electrical and Electronic Engineering
* Civil Engineering
* Quantity Surveying

ஆகிய பொறியியல் வகுப்புகள் யாழ்ப்பாணத்தில் உள்ள Jaffna Technical Institute இல் கொழும்பில் உள்ள APSS நிறுவனத்தால் நடத்தப்படுகின்றது. பயிற்சியில் இணைவோர் சம்பளத்துடன் Training இல் இணைக்கப்படுவர். London இல் நடைபெறும் City & Guilds exam க்கு ஏற்றவாறு விரிவுரைகள் நடைபெறும்.



2012 ஆம் ஆண்டு June மாதம் நடைபெற்ற
Civil Engineering Advanced Diploma
பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

City & Guilds

புதிய வகுப்புகள்
ஆரம்பம்
23/09/ 2012

187 நாடுகளில் அங்கீகாரம் பெற்ற
பொறியியலாளர் சான்றிதழ்.
விவரங்களுக்கு
Head Office:
**Apss International Network (Pvt) Limited**
5, Harmers Avenue, Colombo 6.
Tel: 94- 11 - 2361587, 077 3867695, Hot Line: 077 230 6624, 077 8418 804



2012 ஆம் ஆண்டு June மாதம் நடைபெற்ற
Civil Engineering Diploma
பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

**Jaffna Technical Institute**
No. 7, Palali Road, Jaffna
Tel: 071 8561 654, 077 8249 949
(சி/3377) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணத்துக்கு சென்றவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு,செப்.17

திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காலி - கொழும்பு வீதியின் தடெல்ல பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பஸ் சாரதியின் நித்திரைத் தூக்கமே விபத்துக்கான காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## தமிழக - இலங்கைப் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிக்க மேர்வின் தயார்

### ஜெயலலிதாவுடன் பேசவும் விருப்பம்

ஆன்மிக வழிபாடுகள் மற்றும் சுற்றுலாவுக்காக தமிழகம் வரும் சிங்களவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தக்கூடாது. இந்த விடயத்தில் தமது அரசு உறுதியாகவே உள்ளது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ள கூற்றை இலங்கை அரசின் சார்பில் தான் பெரிதும் வரவேற்கின்றார் என்று மக்கள் தொடர்பாடல், மக்கள் அலுவல்கள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் தமிழகத்துக்குமிடையில் சுமுகமானதொரு உறவைக் கட்டியெழுப்புவதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு தாம் தயாராகவே உள்ளார் என்றும், தமிழகத்துடன் இலங்கை வரலாற்றுரீதியில் பின்னிப்பிணையப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

டில்லியை விட எமக்கு தமிழகத்துடன் நெருங்கிய உறவுகள் அவசியம். அவர்கள்தான் எமது அயலவர்கள். வரலாற்று ரீதியில் தொடர்புகளை பேணியவர்கள். இதற்கு பல சான்றுகள் உள்ளன. ஏன் எம்.ஜி.ஆர். கூட இலங்கையில் பிறந்தவர்தான் என்று அவர் கூறினார்.

தமிழகத்திலுள்ள ஒரு சில குழுக்களின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளால் நாம் தமிழக அரசை குறைகூறமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-சி)



படையினருக்கான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு திவுலபிட்டிய. சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு மங்கள விளக்கு ஏற்றுகிறார். அருகில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உட்படப் பலர் காணப்படுகின்றனர்.

## ஜப்பானின் போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில்



கொழும்பு,செப்.17

ஜப்பானின் போர்க் கப்பல்கள் மூன்று கொழும்பு துறைமுகத்துக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை வந்துள்ளன.

சிமுயுக்காய் மற்றும் மட்சுக்காய் என்ற பெயர்களை உடைய இரண்டு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கு நேற்று வந்துள்ளன. காசிமாய் என்ற கப்பல் நேற்று முன்தினம் கொழும்பை வந்தடைந்துள்ளது.

நல்லெண்ணப் பயணத்தின் அடிப்படையில் இந்தக் கப்பல்கள் இலங்கைக்கு வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூன்று ஜப்பானியக் கப்பல்களும் நாளைமறுதினம் புதன்கிழமை இலங்கையிலிருந்து புறப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (ச)

# 'சீபா' உடன்படிக்கை விரைவில் கைச்சாத்து

### அரசு தீர்மானம் என்கிறார் கெஹலிய

கொழும்பு,செப்.17

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சர்ச்சைக்குரிய சீபா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளது. உள்ளூர் வர்த்தக சமூகத்தின் கடுமையான எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அரசு இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வர்த்தகப் பொருளாதார இரு தரப்பு உடன்படிக்கையான 'சீபா' நிச்சயமாகக் கைச்சாத்திடப்படும். எனினும் அவசர அவசரமாக உடன்படிக்கையில் கைச்சாத்திடும் திட்டம் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சீபா உடன்படிக்கை நன்மை தீமைகள் தொடர்ந்தும் ஆராயப்படுகின்றது.



ஒப்பந்தம் தொடர்பில் சில உள்ளூர் வர்த்தகர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர் என்று அவர் கூறினார்.

எதேச்சதிகாரமான தீர்மானங்களை எடுக்க முடியாது. பல்வேறு தரப்பினருடனும் பேச்சு நடத்தி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீபா உடன்படிக்கையின் நன்மை, தீமைகள் தொடர்பில் தொடர்ந்தும் ஆராயப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக உடன்படிக்கை தொடர்பான அனைத்து விடயங்களையும் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## அதிகரித்த வரி அறவீட்டால் வாகன இறக்குமதியில் வீழ்ச்சி

கொழும்பு,செப்.17

கூடுதலான வரி அறவீடு காரணமாக நாட்டின் வாகன இறக்குமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதம் நாட்டின் மொத்த புதிய வாகனப் பதிவானது 48 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. ஜூன் மாதத்தில் 2268 புதிய வாகனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

அரசால் கூடுதல் வரி அறவீடு செய்யப்பட்ட காரணத்தினால் 11 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்ட வாகனம் தற்போது 21 லட்சமாக உயர்வடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

14 லட்ச ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட வாகனம் 17 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

## கொள்கலன்களில் கதிர்வீச்சை வெளிப்படுத்தும் பொருள்கள்

கொழும்பு,செப்.17

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துருப்பிடிக்காத உருக்கு மற்றும் அலுமினிய உற்பத்திப் பொருள்கள் கொண்ட கொள்கலன்களில் செயற்கைக் கதிர்வீச்சை வெளிப்படுத்தும் பொருள்கள் இருப்பது கொழும்பு துறைமுகத்தில் கண்டறியப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப்பொருள்களைத் துறைமுகத்திலிருந்து வெளியே அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கவில்லை என்று இலங்கை அணுசக்தி சபையின் தலைவர் ஆர்.எல். விஜேவர்தன தெரிவித்தார்.

இந்தப் பொருள்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கும் இந்திய அணுசக்தி ஆணைக்குழுவுக்கு இந்தப் பொருள்கள் குறித்துத் தெரிவிக்க அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (ச)

## விஷப்பாம்பு போன்றது மு.கா.; மடியில் தூக்கி வைக்காதீர்!

### அரசை எச்சரிக்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு,செப்.17

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைப்பதற்கு அரசு முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெறுவது, விஷப்பாம்பைத் தூக்கி மடியில் போட்டுக் கொள்ளும் விவேகமற்ற - ஆபத்தான ஒரு விடயத்துக்கு ஒப்பான செயலாகும்.

பாலை வார்த்து வளர்த்தாலும் சமயம் வாய்க்கும் போது பாம்பு தனது இயல்பான குணத்தைக் காட்டத் தவறாது. அதேபோன்றுதான் சலுகைகளை வாரி வாரிக் கொட்டினாலும், மு.கா. வேலி பாயும் தனக்கே உரித்தான தாவல் போக்கைப் பிற்காலத்தில் கைவிட்டு விடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவைப் பெற்று கிழக்கில் ஆட்சியமைப்பதே சாலச்சிறந்தாகும். எனவே, அதற்குரிய திட்டங்களை அரசு அவசரமாக வகுக்க வேண்டுமென்றும் அந்த அமைப்பு ஆலோசனை வழங்கியுள்ளது.

அரசு வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றக் கூடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியொன்றை அமைப்பதில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், ரொபேட் ஓ பிளேக்கின் இலங்கைப் பயணம் ஆகியவை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைப்பதற்கு அரசு முஸ்லிம் காங்கிரஸின் உதவியை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளமை ஓர் அபாயகரமான முடிவாகும்.



தேர்தலில் அரசை எதிர்த்து இனவாதத்தை தூண்டிவிட்டு செயற்பட்ட ஒரு தரப்புடன் அரசு எப்படி கூட்டுச்சேர முடியும்? அரசு இதய சுத்தியுடன் செயற்பட்டாலும் அந்தக் கட்சி தனது சுயநலவாதப் போக்கைக் கைவிடப்போவதில்லை.

கிழக்கில் ஆட்சியமைப்பதற்கான சக்தி அரசுக்குள்ளது. எனவே, அது இனவாதக் கட்சிகளின் முன்னால் கூனிக் குறுகி நிற்க வேண்டிய அவசியமில்லை. ஆட்சியை அமைப்பதில் சிக்கல் எற்பட்டால், ஐ.தே.கவின் ஆதரவை அரசு பெறுவதே சாலச் சிறந்தசெயலாகும்.

பிளேக் ஆலோசனை வழங்குவது சாத்தான் வேதம் ஓதுவது போன்றது. எனவே அது குறித்து நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை - என்றார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தபால் மூலம் -

# ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

SEPT.'2012 TO FEB.'2013

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2012

(சி/3401)

## விபத்தில் இளைஞன் காயம்

மிருசுவிலில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், லான்ட் மாஸ்டர் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை மிருசுவில் கெற்பேலி அம்மன் கோயிலுக்கு அருகில் இடம்பெற்றது. இதில் சின்னராசா கிருபா (வயது-25) என்ற இளைஞனே படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(16-9)

**சிவமணி ஜோதிடம்**

9, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7368

(சி/3396) (45.6.7)

**யனோசிகா புத்தகசாலை**

பாடசாலை புத்தகங்கள் உபகரணங்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்.

(22977) (45.6.7)

**வாடகைக்கு**

நெல்லியடி வதிரிச் சந்தியில் உள்ள மேல் மாடிக் கட்டடம் வாடகைக்கு விடப்படும்

தொடர்புகளுக்கு: 077 0869 999
021 2264 875

(18760) (45.6.7)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

*35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய No-1 BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 19.09.2012*

**விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.**

* றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
* கதிர்வேலான், கிளிநொச்சி (021 228 0007)

**T.P NO : 077 6090926**

(22979)(6.7.8)

## மரண அறிவித்தல்



### கதிரன் கந்தையா

*(மாப்பிள்ளைக் கந்தையா)*

உடுவிலை பிறப்பிடமாவும் இணுவில் தெற்கு துரைவீதியை வசிப்பிடமாவும் கொண்ட கதிரன் கந்தையா (15.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன் -லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னாச்சியின் அன்புக் கணவரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2012) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(22980)(9.14)

துரைவீதி,
இணுவில் தெற்கு.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள்.

**வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**


- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு UK 650 /= Germany 710 /= France 765 /=
- யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம். (Door to Door Service)
- 24 மணி நேரத்தில் விநியோகிக்கும் சேவை (TDD Service)
- மருந்து பொருட்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
International Courier & Cargo Service

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லமுத்து கணபதிப்பிள்ளை



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், காரைநகரை வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக முகவரியாகவும் கொண்ட செல்லமுத்து கணபதிப்பிள்ளை கடந்த (14.09.2012) வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் புண்ணியம் - இராசம்மா தம்பதியரின் மகளும், முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், கணபதிப்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, விசாலாட்சி, மாயவரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, சின்னம்மா ஆகியோரின் மைத்துனியும், சிவலோகராஜ புஸ்பத்தின் சகலியும், விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற வள்ளியம்மை, கோமதி (வவுனியா), பேமதாஸ் (கனடா), காலஞ்சென்ற சற்குணராசா (வெள்ளையன்) மற்றும் சதாசிவம் (சிவா - கொழும்பு), காலஞ்சென்ற சிவராசா மற்றும் பரமேஸ்வரி (வவுனியா), வசந்தா (கனடா), பரஞ்சோதி (கனடா) ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற K.P.நாகரத்தினம் (கொழும்பு), நாகரத்தினம் (வீரசிங்கம் - வவுனியா), கோகிலகௌரி (கனடா), திலகவதி (கொழும்பு), தவராசா (வவுனியா), இராசலிங்கம் (கனடா), உமையவள்ளி (கனடா) ஆகியோரின் மாமியும், கமலநாயகி (பிரான்ஸ்), கருணாகரன் (கனடா), சிவநாதன் (பிரான்ஸ்), பேமச்சந்திரன் (கனடா), தேவகுமாரி (வவுனியா), சத்தியா (வவுனியா), கோபிஷா (பிரான்ஸ்), கஜந்தன் (லண்டன்), விஜிதா (ஜேர்மனி), பேமஷாலினி (கனடா), துலக்சனா, சங்கீதா, ஆதவன் (கனடா), கோகிலப்பிரியா (London College of Higher Studies) , சௌதாரணி (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), பேமகிரிஷா (ஜேர்மனி), தாரணி (கனடா), கணாகரன் (விபுலானந்தாக் கல்லூரி வவுனியா), தயந்தினி (வவுனியா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), லிஷாந்தன் (கனடா), கணநீதன், கணவர்ணன், பாவனன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், அனிதா, அபிசன், அபிராம், சகானா, ரம்மியன், ஆரணி, நிந்துசன், ஐஸ்ணவி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்லோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவகாமி அம்மன் வீதி, காரைநகர்.

(22983)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன்கூடிய காலநிலை நிலவும்.

## வரணியில் குளங்கள் புனரமைப்பு

வரணி கரம்பைக் குறிச்சி கிழக்கில் திக்கில் குளம் ஆலய நிர்வாகத்தால் தற்சமயம் சேறு அகற்றப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது. அதேசமயம் வரணி வடக்கு கூழாநின்ற புலம் முருகன் ஆலயக் குளமும் தண்ணீர் முழுமையாக வற்றிய நிலையில் ஆலயச் சுற்றாடலில் உள்ள பொதுமக்களால் சிரமதானப் பணி மூலம் சேறு அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. கூடுதலாக கால்நடைகளுக்கான தண்ணீர்ப் பிரச்சினை இந்த குளங்களின் புனரமைப்பின் மூலம் நீக்கப்பட்டுள்ளது. (3-122)

# தமிழர் தங்களுக்கென்ற தனி நாட்டில் சுதந்திரமாக வாழ வேண்டும்

## நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவிப்பு

சென்னை, செப்.17

12 கோடி மக்கள், இரண்டு பெரும் தாய் நிலங்களைக் கொண்ட ஓர் இனத்தைச் சேர்ந்த மக்கள், தங்களுக்கு என்று ஒரு நாட்டைப் பெற்றுச் சுதந்திரமாக வாழ வேண்டும். இலங்கை இரு நாடுகளாக வேண்டும். அதுதான் எனது கனவு என்று நாம் தமிழர் இயக்கத் தலைவர் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.



ஆனந்த விகடன் வார இதழுக்கு சீமான் அளித்திருக்கும் பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**கேள்வி:** சரி... நீங்கள் பிரதமராகவோ, தமிழ்நாட்டின் முதல்வராகவோ இருந்தால், இலங்கையுடனான உறவை எப்படி அணுகுவீர்கள்?

**பதில்:** பிரதமராவது என் கனவல்ல, 12 கோடி மக்கள், இரண்டு பெரும் தாய்நிலங்களைக் கொண்ட ஓர் இனத்தைச் சேர்ந்த மக்கள், தங்களுக்கு என்று ஒரு நாட்டைப் பெற்றுச் சுதந்திரமாக வாழ வேண்டும். இலங்கை இரு நாடுகளாக வேண்டும்.

**கேள்வி:** அடிப்படையில் உங்கள் இயக்கத்தின் இலக்குத் தான் என்ன?

**பதில்:** இலக்கு ஒன்று தான். அது தமிழ் இனத்தின் விடுதலை!

**கேள்வி:** ஈழத் தமிழர்களுக்குத் தனி நாடு காணும் உங்கள் கனவு, இந்தியத் தமிழர்களுக்கும் நீளுமா?

**பதில்:** இல்லை. ஆனால், இந்தியாவை ஆளும் தேசியக் கட்சிகள் இந்த நிலத்தில் இருந்து நாங்கள் பிரிந்து போவதற்கான காரணங்களை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன என்று மட்டும் சொல்வேன். தவித்த வாய்க்குத் தண்ணீர் தராத ஒரு தேசத்தின் மீது எப்படி வரும் எனக்கு நேசம்?

**கேள்வி:** தமிழீழத்தை அடைய என்ன திட்டம் உங்களிடம் இருக்கிறது?

**பதில்:** அரசியல் புரட்சி. 12 கோடித் தமிழரில் ஒரு 50,000 பேரை ஒன்று திரட்டிவிட்டால்கூட மிகப் பெரிய புரட்சி. அட, ஐ.நா. சபைக்குள் என்னை அரை மணி நேரம் பேசவிடுங்கள். நான் நாடு அடைந்துவிடுவேன்! எனப் பதிலளித்தார் சீமான். (3)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

### நாவாந்துறைப் பகுதியில்

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அந்த வகையில் இன்று காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரை சேமக்காலை வீதியிலும், முற்பகல் 10.30 தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நாவலர் வீதி 1ஆம், 2 ஆம், 3ஆம் குறுக்குத் தெருவிலும், நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நாவாந்துறை தபாற்கந்தோர் அருகிலும், நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியில் இருந்து முற்பகல் 10 மணிவரை வசந்தபுரம் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை நித்திய ஒளி சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30 தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை சூரியவெளி சனசமூக நிலையத்திலும்,

நாளைமறுதினம் புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை சென்- நீக்கிலஸ் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 தொடக்கம் பிற்பகல் 1.30 வரை கோயில் ஒழுங்கையிலும் நடைபெறும்.

20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை காதி அபூபக்கர் வீதிச் சந்தியிலும் முற்பகல் 10 மணி தொடக்கம் 11.30வரை கண்ணபுரம் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 தொடக்கம் பிற்பகல் 1.30 வரை கண்ணாபுரம் 1,2, 3 ஆம் குறுக்குத் தெருவிலும் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என்று யாழ்ப்பாண மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அ.எ. ஞானசோதி அறிவித்துள்ளார். (3)

## வரணி, மாசேரி கிராமத்தில் டெங்கு ஒழிப்புத் திட்டம் தீவிரம்

டெங்கு நோய் ஒழிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக கடந்த வாரம் வரணி மாசேரி கிராம சேவகர் பிரிவில் சுகாதாரப் பிரிவினர் வீடு வீடாகச் சென்று வீடுகளின் சுற்றாடல் தூய்மையை பரிசீலனை செய்து வருவதுடன் டெங்கு நோய் பரவும் காரணிகள் பற்றி குடும்பத்தினருக்கு விளக்கம் அளித்தும் வருகின்றனர். இந்த விடயம் தொடர்பாக சுகாதாரத் தொண்டர்கள் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் சென்று நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சுகாதாரப் பகுதியினரின் வருகையை முன்கூட்டியே அறிந்த குடும்பஸ்தர்கள் அவசர அவசரமாகத் தமது வளவுகளையும் வீட்டுச் சுற்றாடலையும் சுத்தப்படுத்துவதில் ஆர்வமாக ஈடுபட்டு வருவதை பரவலாகக் காணமுடிகின்றது. (3-122)

## விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.17

லண்டன்- லங்கா திறன் அபிவிருத்தி கல்வி நிறுவனத்தில் ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை திருமறை கலாமன்றத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் வரவேற்புரையை லங்கா திறன் அபிவிருத்தி நிலையமுகாமைத்துவ பணிப்பாளர் எஸ். செந்திலிங்கம் வழங்கினார். சிறப்புரையை வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரும், தொழில் நுட்பக் குழுத் தலைவருமான த. நடனேந்திரன், யாழ். மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் க. முதலியார், வேலணை பிரதேச சபை செயலாளர் செ.ரமேஷ், முன்னாள் வலி.வடக்கு பிரதேச சபை தொழில்நுட்ப அதிகாரி எம்.எஸ். சர்வானந்தன் ஆகியோர் வழங்கினர். விருதுகளையும்- சான்றிதழ்களையும் திருமதி எஸ். செந்திலிங்கம் வழங்கி கௌரவித்தார். (3-50)

## நுளம்பு வலை விநியோகம்

மாசேரி கிராம அலுவலர் பிரிவில் கடந்த வார நடுப்பகுதியில் பயனாளிகளுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. பொது நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட இந்த நுளம்பு வலைகள் மாசேரி, இடைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு வழங்கப்பட்டன. வரணி பிரதேச பொதுச் சுகாதார பரி சோதகர் பா. நிஜன் தலைமையில் மாசேரி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து இந்த நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. (3-122)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
21 ★ 10 ★ 1945



இறப்பு
18 ★ 08 ★ 2012

### அமரர் இராசையா செல்வரத்தினம்

கடந்த (18.08.2012) இல் சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும், தொலைபேசி ஊடாக ஆறுதல் தெரிவித் தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (17.09.2012) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிருத்திய நிகழ் விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்தட்டுமட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

சகோதரர்கள்.

(22971)(6.7.8)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொ யிலர் கோழி (இறைச்சிக் கோழி) மீள் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(22489) (5.6.7)

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து புவனேஸ்வரி



மலைவேம்படி ஒழுங்கை, சுதுமலை கிழக்கு, மானிப்பாயைச் சேர்ந்த தம்பிமுத்து புவனேஸ்வரி நேற்று (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - தங்கச்சிஅம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் இராசதுரை ஆகியோரின் சகோதரியும், பிரசாந்தனின் அன்பு அத்தை யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2012) திங்கட்கிழமை சுதுமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறிவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலைவேம்படி ஒழுங்கை,
சுதுமலை கிழக்கு, மானிப்பாய்.


தகவல்:
த. இராசதுரை ([illegible])

(22976)(6.7.8)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் கந்தசாமி

(உரிமையாளர் - திலகம் தையலகம் - இல. 45, மேற்கு மார்கட், யாழ்ப்பாணம்.



ஆறுகால்மடம், புதுவீதியைச் சேர்ந்த மயில்வாகனம் கந்தசாமி நேற்று (16.09.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் தையல்நாயகியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஞானாம்பிகை மற்றும் ஜெயலக்சுமி ஆகியோரின் பாசமிகு கணவரும், திலகவதி, ஞானரூபன், பிரதீபன், கோகுலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரவீந்திரன், யாழினி, பைந்தமிழ்ச்செல்வி, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனும், பார்த் தீபன், பாமினி, பிருந்தன், சுதாகர், விஜிதா, ஹரிபவன், ஐதுர்சிகன், அச்சயா, அனோ ஜிதன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவாஜினி, ஹரிராம், அப்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2012) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புது வீதி,
ஆறுகால்மடம்,
[illegible]கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(22975) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்வோம்

துணிவுடன் இருங்கள். ஆனால், எதிர்ப்புணர்வைக் காட்டாதீர்கள். தொடர்ந்து கடுமையாக உழையுங்கள் விட்டு விட்டு உழைப்பதில் பலனில்லை. ஏதாவது ஒன்றில் விசேஷமான திறமை பெறுங்கள்.

சூழ்நிலைக்கேற்ப அனுசரிக்கப் பழகிக் கொள்ளுங்கள். அதற்காக உங்கள் நோக்கத்தைக் கைவிட வேண்டியதில்லை. வெளிப்படையாகப் பேசுங்கள். ஆனால் முரட்டுத்தனம் வேண்டாம்.

துணிவுடன் இருங்கள். ஆனால், எதிர்ப்புணர்வைக் காட்டாதீர்கள். தொடர்ந்து கடுமையாக உழையுங்கள் விட்டு விட்டு உழைப்பதில் பலனில்லை. ஏதாவது ஒன்றில் விசேஷமான திறமை பெறுங்கள். அதற்காக உங்களைக் குறுக்கிக் கொண்டு தெளிவை இழக்க வேண்டியதில்லை. எழுத்திலும் பேச்சிலும் திறமையினை வளர்த்துக் கொள்ளுங்கள். வெறும் வார்த்தை ஜாலங்களில் ஈடுபடாதீர்கள். அடிப்படை களையும் விவரங்களையும் தனித்தனியாகப் பிரித்துக்கொள்ளுங்கள். செயலுக்குத் திட்டமிடுங்கள். அதே சமயம் விவரங்களை அலட்சியப் படுத்தாதீர்கள். மனித இனத்தில் நம்பிக்கை வையுங்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள். ஏமாளியாகவோ, தலை கர்வத்துடனோ இருக்காதீர்கள். மனதில் சித்திரம் உருவாக்கி முன்கூட்டியே திட்டமிடுங்கள். உடனடியான எதிர்காலத்தை மறந்து நீண்ட எதிர்காலத்திற்குத் திட்டமிடாதீர்கள். மரியாதைக் குறைவினையோ, வெறுப்பையோ வளர்த்துக் கொள்ளாதீர்கள்.

வேலையை நேசியுங்கள். அதுவே முழு திருப்தியை அளிக்கும். முயற்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். சிறிய குழிகள்தான் பெரிய பள்ளங்களாகின்றன. துணிவுடன், நேர்மையுடன் இருங்கள். கஷ்டங்களைக் கடக்க அது உங்களுக்கு உதவும்.



# உங்கள் குடும்பம் மகிழ்வாக இருக்க சில வழிகள்...



★ அன்பாகப் பேசுங்கள்
★ பிறர் மீது அக்கறை காட்டுங்கள்
★ வீட்டை அழகாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ யாரைப் பற்றியும் குறை கூறாமல் இருங்கள்.
★ வாக்குக் கொடுத்தால் அதை செய்து முடியுங்கள்.
★ எப்போதும் இன்முகத்துடன் இருங்கள்.
★ முன் மாதிரியாக நடந்து கொள்வது.
★ உறவுகளை நம்புங்கள்
★ ஒன்றாக உல்லாசப் பயணம் சென்று வாருங்கள்.
★ பணிவுடன் நடவுங்கள்.
★ எதையும் எடுத்தால் எடுத்ததை உரிய இடத்தில் வையுங்கள்.
★ பிறர் வேலைகளில் உதவுவது.
★ விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள்.
★ பிறர் வருந்தும் போது ஆறுதல் கூறுங்கள்.
★ சுறுசுறுப்பாக இருங்கள்.
★ சிறிய விடயங்களைக் கூடப் பாராட்டிப் பழகுங்கள்.
★ புதிய முயற்சிகளை ஊக்குவியுங்கள்.
★ நகைச்சுவையாகப் பேசுங்கள்.
★ செலவுகளைக் குறைக்க ஆலோசனை கூறுங்கள்.
★ நேரத்தை மதித்து நடவுங்கள்.
★ தற்பெருமை பேசாமல் இருங்கள்.
★ தெளிவாகப் பேசுங்கள்.
★ நேர்மையாய் இருங்கள்.
★ பிறர் மனதைப் புண்படுத்தாமல் இருங்கள். உங்கள் குடும்பம் மகிழ்வாக இருக்கும்.

# எச்சரிக்கையாக இருங்கள்

உங்கள் நண்பர்களாகவோ அல்லது காதலர்களாகவோ இருந்துவிட்டு பிரிய நேர்ந்தால் பிரிவு மட்டும் துயரத்தை அளிப்பதில்லை. சில நேரங்களில் நண்பர்களோ அல்லது காதலரோ கூடத் துயரத்தை அளிக்கலாம்.

அதாவது, பழகும் போது ஒன்றாக எடுத்துக் கொண்ட புகைப்படங்களைக் காட்டி பெற்றோரிடமோ அல்லது கணவரிடமோ காண்பித்து விடுவேன் என்று மிரட்டுவது.

காதல் கடிதங்கள் அல்லது வாழ்த்து அட்டைகளை வைத்துக் கொண்டு மிரட்டல் போன்ற செயல்களில் ஈடுபடலாம்.

இன்னும் சிலர் உள்ளனர், கொடூர மனம் படைத்த ஆண்கள், தனது தோழிகளின் புகைப்படத்தை இணையத் தளத்தில் போட்டு விடுவேன் என மிரட்டுவது மற்றயவர்களுக்கும் செல்பேசி எண்களை அளித்து அவர்களுக்கு பிரச்சினையை உண்டுபண்ணி விடுகிறார்கள். இதனால் அந்த பெண் மட்டுமல்ல குடும்பமே கவலை கொள்கிறது.

சிலர் முன் வந்து இது குறித்து புகார் அளித்தால் தவறு செய்தவர்கள் தண்டிக்க வாய்ப்பும் ஏற்படுகிறது. ஆனால் இது போன்றவர்கள் நமது பெயர் வெளியே வந்துவிடுமே என்று எண்ணி புகார் அளிக்க முன்வருவதில்லை.

எனவே, பெண்களே நண்பராக இருந்தாலும் சரி, காதலராக இருந்தாலும் சரி எச்சரிக்கையாக இருங்கள்.



# புகுந்த வீட்டில் வாழப் போகும் பெண்ணே..



★ முதலில் உங்கள் புகுந்த வீட்டில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் யார் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

★ மாமனார், மாமியார் என்றாலே கொடுமைக்காரர் குற்றம் கூறுபவர், திமிர் பிடித்தவர் என்ற தப்பான அபிப்ராயங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள், உங்களது தாய், தந்தையைப் போல, மாமனார், மாமியாரைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

★ வயது ஆக ஆக பெரிய வர்களுக்கு குழந்தை மனமும், பிடி வாதக் குணமும் அதிகரிக்கும். அதற்கு ஏற்றால்போல் நீங்கள் உங்கள் புகுந்த வீட்டில் நடந்து கொள்ள வேண்டும்.

★ சமையல் செய்யும் போது, மாமியாரின் உதவியை நாடுங்கள் அப்பொழுதுதான் அந்த வீட்டில் யாருக்கு என்ன பிடிக்கும், என்ன பிடிக்காது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

★ மறந்து கூட கணவரிடம் பேசி தனிக்குடித்தனம் செல்ல முயற் சிக்காதீர்கள். ஏனென்றால் பெரும்பா லான மாமியாருக்கு மருமகள் மீது வெறுப்பு ஏற்படுவதற்குக் காரணமே இதுதான்.

★ புகுந்த வீட்டில் உள்ளவர்களிடம், ஒளிவு மறைவின்றி மனம் விட்டுப் பேச வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு, உங்கள் மீது நம்பிக்கை வரும்.

★ கணவரிடம் அவரது அம்மா, தங்கை இவ்வாறு செய்தார்கள், திட்டினார்கள் என்று குறைசொல்லாதீர்கள். அது கணவனுக்கும் அவரது தாய் தந்தையருக்கும் பகைமை வளரக் காரணமாகிவிடும்.

★ புகுந்த வீட்டில், பிறந்த வீட்டு பெருமைகளை, புகழ்ந்துபேசுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ அதிகாலையில் எழுந்து, வீட்டின் முன் கோலம் இடுவது, சமையல் செய்வது, கணவரை வேலைக்கு அனுப்புவது, மாமனார் மாமியாருக்குத் தேவையான உதவிகளைச் செய்வது என பல வேலைகளையும் விரும்பிச் செய்ய வேண்டும்.

★ பிறந்த வீட்டில் எப்படி உறவினர்களுடன் விருப்பு வெறுப்பின்றி பழகினீர்களோ, அதைப்போலவே புகுந்த வீட்டு உறவினர்களுடனும் நடந்து கொள்ளுங்கள்.

★ ஆண்டுக்கு ஒருமுறை, புகுந்த வீட்டு குடும்பத்துடன் சுற்றுலா செல்லுங்கள். அப்போது தவறாமல் மாமனார் மாமியாரையும் அழைத்துச் செல்ல வேண்டும்.

★ புகுந்த வீட்டில், கணவனுடைய திருமணமாகாத தம்பியோ தங்கையோ இருந்தால், அவர்களை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள். இது புகுந்த வீட்டினரிடம், உங்களைப் பற்றிய மதிப்பை அதிகரிக்கும்.

★ விட்டுக்கொடுக்கும் மனம் யாரிடம் உள்ளதோ அவர்களால் எந்தச் சூழலிலும் குடும்பத்தை வெற்றிகரமாக நடத்த முடியும். எனவே கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழுங்கள். வாழ்க்கை எந்த நாளும் மகிழ்வாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் பத்திரமுல்லை யில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத் தோட்டப் பொருள்கள் விற்பனை நிலையத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுச் சென்று பார்வையிட்டார்.

# ஐ.தே.க. உறுப்பினருக்கும் வலை வீசுகிறது அரச தரப்பு

## விலைபோகமாட்டேன் என்கிறார் இம்ரான்

திருகோணமலை,செப்.17
பல்வேறு சலுகைகள் வழங்குவதாகக் கூறி தம்முடன் இணையுமாறு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனக்கு அழுத்தம் கொடுப்பதாக திருமலையிலிருந்து ஐ.தே.க. சார்பாக கிழக்கு மாகாண சபைக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இம்ரான் மஹ்ரூப் குற்றம் சுமத்தினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்திலிருந்து வருகிறோம். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுங்கள். உங்களுக்கு கோடிக் கணக்கான பணம், மற்றும் பல வசதிகள், சலுகைகள் எனத் தருகிறோம் - என்று கூறினார்கள் என இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார். இதனைத் தான் நிராகரித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

எத்தகைய சலுகைகள் வழங்கப்படும் என அவர்கள் தெரிவித்தார்கள் என்பதை இப்போதைக்குப் பகிரங்கப்படுத்தப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரான எனது தந்தை ஏ.ஜி.எஸ் மஹ்ரூப் மேற்கொண்ட சேவைகளை கட்சி மாறாமல் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக இருந்து மேற்கொள்ளவுள்ளேன் - என்று இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு அலைந்துதிரிந்த மஹிந்த அரச தரப்பு கூட்டம், அது கைகூடாத நிலையில் தற்போது ஐக்கிய தேசியக் கட்சி மாகாணசபை உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு அலைந்து திரிகின்றது என இம்ரான் மஹ்ரூப் மேலும் தெரிவித்தார்.

இந்த மாகாண சபைத் தேர்தலில் 10ஆயிரத்து 45 வாக்குகளைப் பெற்று மாகாண சபை உறுப்பினராக இவர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

# முஸ்லிம்களை ஏமாற்றாதீர்

## நம்பி வாக்களித்தவர்களின் விருப்பத்துக்கு மாறாக நடப்பது சரியல்ல என்கிறார் இராஜேஸ்வரன்

மட்டக்களப்பு,செப்.17

தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் மக்களின் ஏகோபித்த கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றிணைந்து கிழக்கில் ஆட்சியமைக்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத் துள்ளது. இந்த வாய்ப்பை முஸ்லிம் காங்கிரஸ் கைவிடக் கூடாது. தமிழ், முஸ்லிம் மக்களை ஏறி மிதிக்கும் மஹிந்த அரசுடன் கூட்டுச் சேர்ந்து தம்மை நம்பி வாக்களித்த முஸ்லிம் மக்களுக்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப்பீடம் துரோகமிழைக்கக்கூடாது.



- இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பேராசிரியரான மு.இராஜேஸ்வரன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமை, தீர்வைப் பெறுவதற்காக கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து எம்மை வெற்றிப் பாதையில் விட்டுள்ளார்கள்.

அதேபோல், பெரும்பாலான முஸ்லிம் மக்களும் தமது உரிமைகளை வென்றெடுக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்து அக்கட்சியை கிழக்கின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மாற்றியுள்ளார்கள். இன்று கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு இழந்த வற்றை மீட்டெடுக்க முடியாத நிலையில் ஏங்கித் தவிக்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு அரசுடன் கூட்டுச் சேர்வதைத் தவிர்த்து வாக்களித்த மக்களின் விருப்பத்துக்கு மாறாக முஸ்லிம் தலைமை நடக்கக் கூடாது- என்றார். (ச)

## சட்ட நூல்கள் வெளியீடு

திருகோணமலை,செப்.17
தொழிலாளர் உரிமைகள் தொடர்பான சட்டம் மற்றும் சான்றுகள் சட்டம் ஆகிய இரண்டு நூல்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை திருகோணமலை இயேசு அக்கடமி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வெளியிடப்பட்டன.

மனித உரிமைகள் மேம்பாட்டுக்கும் பாதுகாப்புக்குமான நிலையம் யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் சிரேஷ்ட சட்டத்தரணியும் சட்ட உதவி ஆணைக் குழுவின் பணிப்பாளருமான இரா.திருக்குமாரநாதனை ஆசிரியராகக் கொண்டு சட்டமும் நீங்களும் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுவரும் சட்டக் கைநூல்களின் வரிசையில் இந்த நூல்கள் வெளியாகியுள்ளன.

நூல் ஆய்வுரையை கிழக்கு மாகாண சபையின் சட்ட அதிகாரி அனிபு லெப்பை நிகழ்த்தினார். (ச)

# வரலாற்றுக் கடமையை மு.கா. நிறைவேற்ற வேண்டும்

## தமிழ், முஸ்லிம் ஆட்சியால் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்கிறார் துரைரெட்ணசிங்கம்

திருகோணமலை,செப்.17
சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் கிழக்கில் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க வரலாறு வழியைக் காட்டியுள்ளது. இந்த வழியில் பயணிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைகோர்க்க வேண்டும். இதனூடாகத் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கமுடியும்.''

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருமலை மாவட்டக் கிளைத் தலைவருமான க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்க வரலாறு எமக்கு வழியைக் காட்டியுள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் தவறவிடக்கூடாது. சிறுபான்மை இனங்களான நாம் இவ்வழியில் ஒற்றுமையுடன் பயணிக்கவேண்டும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைகோர்த்தால் தான் கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மை சமூகத்தினர் ஆட்சியமைக்கலாம்.

தமிழ் மக்கள் காலம்காலமாக உரிமைக்காகப் போராடி வருகின்றனர். அதேபோல முஸ்லிம் மக்களும் தங்களின் உரிமைகளை இந்த நாட்டில் வென்றெடுக்க வேண்டும். இதற்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

கிழக்குத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து கூட்டமைப்பை வெற்றிப்பாதையில் விட்டுள்ளனர். அதேபோல பெரும்பாலான முஸ்லிம் மக்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்து கட்சியின் பெருமையை நிலைநாட்டியுள்ளனர்.

அரசில் இருந்து விலகி தனியாக மு.கா. தேர்தலில் போட்டியிட்டதனாலும், தேர்தலின் பின்னர் தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து மு.கா. ஆட்சியமைக்கும் என்ற நம்பிக்கையினாலும் தான் தாம் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்தோம் என கிழக்கில் உள்ள பெரும்பாலான முஸ்லிம் மக்கள் எம்மிடம் கூறியுள்ளனர். அதேவேளை, கூட்டமைப்புடன் இணைந்து மு.கா. ஆட்சியமைக்க வேண்டும் என்று கிழக்கு புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்கும் வரலாற்றுக் கடமையை மு.கா. செய்யவேண்டும். அதைவிடுத்து அரசுடன் இணைந்து ஆட்சியமைத்து மாபெரும் வரலாற்றுத் துரோகத்தை மு.கா. செய்யக்கூடாது.

கிழக்குத் தேர்தல் முடிவுகள் உத்தியோக பூர்வமாக வெளியான தினமன்றே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், முகாவுடன் இணைந்து ஆட்சியை அமைக்க அழைப்பு விடுத்துள்ளார்.

முதலமைச்சர் பதவியைக்கூட மு.காவுக்கு விட்டுக்கொடுக்கிறது கூட்டமைப்பு- என்றார். (ச-சி)

## ஐ.தே.க.குழுத் தலைவராக தயாகமகே

கிழக்கு மாகாண சபையின் ஐ.தே.க.குழுத் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரான தயாகமகே நியமிக்கப்பட்டுள்ளார். அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய வேட்பாளர்கள் அனைவரிலும் அதி கூடிய விருப்பு வாக்குகளை (41,067) இவர் பெற்றிருந்தார் என்பதுடன், கிழக்கு மாகாணத்திலும் ஒட்டு மொத்தமாக இவரது விருப்பு வாக்குகளே முதலிடம் பெற்றுள்ளது. (ச)

# இரக்கமற்ற முறையில் மகனை காயப்படுத்திய தந்தை கைது

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, செப்.16
தனது 11 வயது மகனை தீயினால் சுட்டும் இரக்கமற்ற முறையில் துன்புறுத்திக் காயப்படுத்திய தந்தையொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

குறித்த சிறுவனின் தாயார் வெளிநாட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில் சிறுவன் அவனது தந்தையாரின் பராமரிப்பிலேயே வாழ்ந்து வருகிறான். இந்த நிலையில் தந்தையார் தினமும் மதுபோதையில் வீட்டுக்கு வந்து சிறுவனை துன்புறுத்தி வருவதாகவும் கடந்த வியாழக்கிழமை தீயினால் சுட்டு சிறுவனைக் காயப்படுத்தி உள்ளதாக கிளிநொச்சி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. சிறுவன் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். பொலிஸாரும் சிறுவர் நன்னடத்தைப் பிரிவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (16-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியத்தில் மீண்டும் வாகை.....



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது தொடர்ச்சியாக இந்த அணி தேசிய ரீதியில் உடற்பயிற்சிப் போட்டிகளில் சாதித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ங-130)

## இன்றைய ஆட்டங்கள்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணிக்கு

இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4.30 மணிக்கு

ஆதிசக்தி விளையாட்டுக் கழகம்எதிர் சென்சேவியர் விளையாட்டுக் கழகம். (ங-23)

### நியூஸ்ரார் பிறிமியர் லீக்

## திருநெல்வேலி வி.க.,ஜொனியன்ஸ் பந்தாடின- எதிரணிகளை

யாழ்ப்பாணம், செப்.17

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில்திருநெல்வேலி கிரிக்கெட் கழகம், ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் களமிறங்கிய திருநெல்வேலி வை.எம்.ஏச்.ஏ. விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிஷாந்தன் 29 ஓட்டங்களையும், ராசேந்திரம் 24 ஓட்டங்களையும், சுதா 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் திருநெல்வேலி கிரிக்கெட் அணி சார்பாக பாலமுரளி, சிவராஜ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், கோபி 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

147 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழக அணி 19.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்று வாகை சூடியது.

இதில் லவக்காந் 32 ஓட்டங்களையும், ரஜிந்தன் 25 ஓட்டங்களையும், சிவராஜ் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் திருநெல்வேலி வை.எம்.ஏச்.ஏ. விளையாட்டுக் கழக அணி சார்பாக வினோஜன் 3 இலக்குகளையும், நிஷாந்தன் 2 இலக்குகளையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.



ஆட்ட நாயகன் விருது பெறும் திருநெல்வேலி கி.வி.க. வீரன் சிவராஜ்

ஆட்ட நாயகனாக திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சிவராஜ் தெரிவுசெய்யப்பட்டார்.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அன்புஜன் 55 ஓட்டங்களையும், காண்டீபன் 47 ஓட்டங்களையும் , விதுஷன் 45 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக அதிரடியாகக் குவித்து ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி சார்பாக உதயா 2 இலக்குகளையும், குணா, சுரேஷ், வினோஸன் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.



ஆட்ட நாயகன் விருது பெறும் ஜொனியன்ஸ் வீரன் விதுஷன்

213 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குக்ளை இழந்து 175 ஓட்டங்களை மட்டும் பெற்றது. 37 ஓட்டங்களால் ஜொனியன்ஸ் அணி ஸ்ரான்லியை வீழ்த்தியது.

இதில் சுதர்சன் 90 ஓட்டங்களையும், ரஜனிக்காந் 23 ஓட்டங்களையும், செல்வராஜ் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக விதுஷன் 3 இலக்குகளையும், மயூரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் விதுஷன் தெரிவு செய்யப்பட்டார். (ங-23)

## போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

புதுக்குடியிருப்பு, செப்.17

புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில் அமைந்துள்ள றேடியன் முன்பள்ளிக் கல்லூரியின் முதலா வது வருடப் பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படுகின்ற நிறைவு விழாவின் ஓர் அங்கமாக றேடியன் முன்பள்ளிக் கல்லூரியும், சுதந்திரபுரம் மத்திய இளைஞர் விளையாட்டுக் கழகமும் இணைந்து மா பெரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டி மற்றும் மரதன் ஓட்டப் போட்டி என்பவற்றை நடத்தவுள்ளன.

மேற்படி போட்டிகளில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களும் பங்குபெற்ற முடியும் எனப் போட்டிக் குழு அறிவித்துள் ளது.

ஆண், பெண் இருபாலருக்குமான மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டி புதுக்குடியிருப் புச் சந்தியில் ஆரம்பித்து சுதந்திரபுரம் மத்திய இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நிறைவடையும்.

15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டச்சுற்றுப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி என்பற்றில் பங்குபற்ற விரும்புவோர் 19ஆம் திகதிக்கு முன்னர் தனது பெயர் விவரங்களை றேடியன் முன்பள்ளிக் கல்லூரியில் பதிவு செய்யுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ங-23-555)

# தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள்

## மகளிர் கபடி இறுதியில் நெல்லியடி ம.ம.வி.

பாடசாலைகளுக்கிடையே தேசிய ரீதியில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடியில் நெல்லியடி ம.ம.வி. அணி இறுதிப் போட்டிக்கு விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை பெரதேனியா மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த இறுதிப் போட்டியில் கந்தளாய் அக்கிரபோதி தேசிய பாடசாலை அணியுடன்நெல்லியடி ம.ம.வி. பலப் பரீட்சை நடத்தவுள்ளது.

இதேவேளை குறித்த பிரிவில் மூன்றாமிடத்துக்கான போட்டியில் விளையாட சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி வீராங்கனைகள் தகுதி பெற்றுள்ளனர். (ங-23-423)

## உடற்பயிற்சிப் போட்டி வவு.திருக்குடும்பம் இரண்டாம் இடம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் வவுனியா திருக் குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை தேசியமட்டத்தில் இரண்டாமிடத்தையும், மானிப்பாய் மகளிர் கல்லூரி தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (ங-23-422)

## உதைபந்தாட்ட அரையிறுதிக்கு முன்னேறிய வடமாகாண அணிகள்

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே தேசிய ரீதியில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட 19வயதுப் பிரிவில் வடமாகாணத்தைச் சேர்ந்த மூன்று அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, மன்னார் சென். சேவியர் கல்லூரி என்பனவே 19 வயதுப் பிரிவு உதைபந்தில் அரையிறுதியில் விளையாடத் தகுதி பெற்ற வடமாகாண அணிகளாகும்.

இதேவேளை தேசிய மட்ட 15 வயதுக்குட்பட்ட பிரிவில் அரையிறுதிப் போட்டிக்கு இளவாலை யங்ஹென்றிஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் கஞத்துறை திருச்சிலுவை அணியை 1:0 என்ற ரீதியில் தோற்கடித்தே அரையிறுதி வாய்ப்பை ஹென்றிஸ் அணி எட்டிப் பிடித்தது. இன்று களுத்துறையில் நடைபெறவுள்ள அரையிறுதியில் ஹென்றிஸ் அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறுமா என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும். (ங-23-130-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

Group (A): England, India, Afghanistan
Group (B): Australia, West Indies, Ireland
Group (C): Sri Lanka, South Africa, Zimbabwe
Group (D): Pakistan, New Zealand, Bangladesh

# இன்றும் 1 தினமே

செப்.18 முதல் – ஒக். 7 வரை

# 2010 ஆம் ஆண்டு மூன்றாவது 'ரி-20'




அறிமுகமாகி சில ஆண்டுகளின் கோடி ரசிகர்களை ஈர்த்திருந்தது 'ரி-20'. வெல்லப்பட்ட இரண்டு கிண்ணங்களும் ஆசிய நாடுகளுக்கே உரித்தாகியது. மூன்றாவது உலகக் கிண்ணத் தொடரில் நிலைமை மாறியது. கரீபியன்களின் தீவில் களமிறங்கின அணிகள். கிரிக்கெட்டில் முன்னர் கொடி கட்டிப் பறந்தவர்கள் இவர்கள்.

முதல் கோணலே முற்றும் கோணலாய் அமைந்தது இலங்கைக்கு. நியூஸிலாந்து தீவு, இலங்கை தொடரின் முதலாவது மோதல். அதிரடி டில்ஷானுடன் ஆரம்பமாகும் என்று கணக்கிட்ட போதும் முதலிரண்டு பந்துப் பரிமாற்றங்களிலேயே அது பொய்பித்து போனது. மஹேல முதலாவது ஆட்டத்தில் இலங்கையின் முத்து. இலங்கையின் இலக்கை போராடிப் பிடித்து வென்றது நியூஸிலாந்து.

இந்தத் தொடர் இலங்கைக்கு சறுக்கலாகவே இருந்தது. இலங்கையால் இந்த முறை அரையிறுதி மட்டுமே முன்னேற முடிந்தது. அரையிறுதி இங்கிலாந்துக்காரர்கள் இலங்கையை அடித்துக் கலைத்து விட்டனர்.

ஆசிய நாடுகளின் ஆதிக்கம் இலங்கையின் வெளியேற்றத்துடன் முடிவு. இறுதியில் இரண்டும் வெள்ளைத் தோல்கள். திருடர்கள் என்று இங்கிலாதிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ஆஸ்திரேலியர்களுடன் இங்கிலாந்துக்காரர்கள் மோதல்.

முதன் முறையாக கிண்ணம் வெல்லும் ஆவலில் இங்கிலாந்து. இந்தக் கிண்ணத்தையும் வென்று அனைத்துக் கிண்ணங்களையும் வென்ற சாதனையாளராக வேண்டும் என்று ஆஸியின் நினைப்பு.

சுழற்றப்பட்டது நாணயம். அதில் வெற்றி இங்கிலாந்துக்கு. வழக்கத்துக்கு மாறாக களத்தடுப்பு தேர்வு. களமிறங்கிய ஆஸிக்கு ஆரம்பத்திலிருந்து அதிர்ச்சி. மத்திய வரிசை துணை கொடுத்தது துடுப்பாட்டத்தில். டேவிட் ஹஸி, கம்ரான் வைட் ஆஸியின் பலமாகினர். டேவிட் ஹஸி 59, வைட் 30 ஓட்டங்கள் பெற்றுக் கொடுப்பு. ஆஸி. 6 இலக்கை பறிகொடுத்து பெற்றது 147 ஓட்டங்கள்.

இந்தத் தொடரில் இங்கிலாந்துக்காரர்களின் கை ஆரம்பத்திலிருந்தே ஓங்கியிருந்தது. இதனால் இந்த இலக்கு அவர்களுக்கு வெகு சுலபம். ஆரம்பத்திலிருந்தே அவர்கள் அதிரடியாக ஆடியதால் வெற்றியிலக்கை வெகு சுலபமாக நெருங்கினர். கீஸ்வெஸ்டர், பீற்றர்ஸன் ஆஸியின் அஸ்தியை கரைத்த வீரர்கள்.

இவர்களின் அதிரடி 17 பந்துப் பரிமாற்றதில் தொட்டது வெற்றி. முதன் முறையாய் விருதுகள் ஒரே அணிக்கே பகிர்வு. ஆட்டநாயகன் கீஸ்வெஸ்டர், தொடர் நாயகன் பீற்றர்ஸன். (5)

# சங்கா, மலிங்க சர்வதேச அணியில்






சர்வதேசக் கிரிக்கெட் சபையில் இந்த ஆண்டுக்கான ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககார, வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இதில் குமார் சங்ககார இந்த ஆண்டுக்கான டெஸ்ட் அணியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தார். இந்தியாவின் மகேந்திரசிங் டோனி தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக இந்தியாவின் கௌதம் கம்பீர், இங்கிலாந்தின் அலஸ்ரெயர் குக் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். குமார் சங்ககார தனது வழமையான மூன்றாம் நிலையில் துடுப்பெடுத்தாடத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நான்காம் நிலையில் விராத் ஹோக்லியும், 5 ஆம் நிலையில் அணித் தலைவரும் இலக்குக் காப்பாளருமான மகேந்திரசிங் டோனியும், 6 ஆம் நிலையில் மைக்கல் கிளார்க்கும், 7 ஆவது நிலையில் சகலதுறை விரரான சயிட் அப்ரிடியும் சேர்க்கப்பட்டுள்ளனர். பந்துவீச்சாளர்களான மோர்னி மோர்க்கல், ஸ்டீவன் பின், லசித் மலிங்க, சயிட் அஜ்மல் ஆகியோர் தொடர்ந்து வரும் 8 ஆம், 9 ஆம், 10 ஆம், 11 ஆம் இடங்களில் காணப்படுகின்றனர். அணியின் 12 ஆவது வீரராக ஆஸ்திரேலியாவின் ஷேன் வொட்சன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (5)



# தினம் ஒரு பரிசு

உதயன் வழங்கும் விசேட பரிசு மழையில் நனைவதற்குத் தயாராகுங்கள்...

# இந்தியா வெற்றிக்கு போராட வேண்டும்



'ரி-20' உலகக் கிண்ணத்தை இந்திய அணி வெல்வது கடினம். 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டதைப் போன்று இந்த ஆண்டு உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ள முடியாது, என்று இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில் தேவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், இந்த விடயத்தில் எனது மனது ஒரு மாதிரியாகவும், அறிவு வேறு மாதிரியாகவும் சொல்கிறது. இந்த உலகக் கிண்ணத்தை இந்தியா வெல்லும் என்று இதயம் சொல்கிறது. ஆனால் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்வது கடினம் என்று எனது கிரிக்கெட் அறிவு நினைக்கிறது.

இப்படியொரு பெரிய தொடருக்கு முன்பாக, நியூசிலாந்துக்கெதிராக கடைசியாக 'ரி-20' ஆட்டத்தில் இந்திய அணி விளையாடிய விதம் நல்ல அறிகுறியாக தெரியவில்லை. இந்த ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி வாய்ப்பிலிருந்து கோட்டைவிட்டது. இது போன்ற வெற்றி வாய்ப்புகளை எப்போதும் விட்டு விடக்கூடாது. ஏனெனில் இது போன்ற ஆட்டங்களில் தோல்வியை தழுவினால், அணியின் நம்பிக்கையையும் இழக்க வேண்டியதாகி விடும்.

இந்திய அணியின் பலமே துடுப்பாட்டம்தான். வழக்கமாக ஒவ்வொரு அணியிலும் ஒன்று அல்லது 2 துடுப்பாட்ட வீரர்கள் வெற்றி தேடித்தரக்கூடியவராக இருப்பார்கள். ஆனால் இந்திய அணியில் 5-6 துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டத்தின் போக்கை மாற்றும் திறன் படைத்தவர்களாக உள்ளனர்.

புற்றுநோய் பாதிப்பிலிருந்து குணமடைந்து மீண்டும் களமிறங்கிய யுவராஜ்சிங் குறித்து ஒவ்வொருவரும் பேசுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை, அவர் களத்தில் செய்ததை விட, மீண்டும் களம் திரும்பியதைத்தான் பெரிதாக நினைக்கிறேன் என்றும் சதம் அல்லது அரைசதம் அடித்தாரா அல்லது 5 இலக்குகள் சாய்த்தாரா என்பதை விட அவர் களத்தில் வெளிப்படுத்திய உத்வேகம் பாராட்டுக்குரியது எனவும் கூறியுள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**HP LapTop வெகுமதிகள் யாழ்ப்பாணத்தில் நளினில்**



**HP LapTop கொள்வனவு செய்தால் FREE**



**மிகக் குறைந்த விலையில்**

- 8 GB Pendrive 1000/= (Warranty)
- HUAWEI Dongle 7.2 3000/=
- Nokia 21 mbps 4200/=
- Dual core (2nd Generation) i3,i5,i7

**NALIN IT** T.P : 077 7667975, 222 1121 / 1166
www.facebook.com/nalinit.
194/2, Parameswara Junction , Jaffna


# டெக்கான் சார்ஜர்ஸ் வெளியேற்றம்

இந்தியன் பிறிமியர் லீக் தொடரின் அணிகளுள் ஒன்றான டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவெடுத்துள்ளது. அந்த அணியை உரிமைப்படுத்தியுள்ள டெக்கான் குரோனிக் கல்ஸ் நிறுவனத்தின் நிதிப் பிரச்சினைகள் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு முதல் இந்தியன் பிறிமியர் லீக் தொடரில் பங்குபற்றிவரும் டெக்கான் சார்ஜர்ஸ் அணி, 2009 ஆம் ஆண்டு சம்பியன்களாகத் தெரிவாகியிருந்தது. எனினும் அந்த அணி இந்தாண்டு இடம்பெற்ற இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் மிகமோசமான திறமை வெளிப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தது.

நிதி நெருக்கடியில் டெக்கான் குரோனிக்கல்ஸ் நிறுவனம் சிக்கித் தவித்து வந்த நிலையில் அண்மையில் கருத்துத் தெரிவித்த அந்த நிறுவனத்தின் அதிகாரி, தங்களது நிறுவனத்தின் நிதி நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக டெக்கான் சார்ஜர்ஸ் அணியை விற்பனை செய்யப்போவதாக அறிவித்திருந்தனர். எனினும் ஒரேயொரு கோரிக்கை மாத்திரம் அந்த அணியை வாங்குவதற்காக விடுக்கப்பட்டிருந்தது. 900 இந்திய கோடி ரூபாய்கள் பெறுதியான அந்தக் கோரிக்கையை விடுத்த நிறுவனத்தை டெக்கான் குரோனிக்கல்ஸ் நிறுவனம் நிராகரித்திருந்தது. அதனை அடுத்து நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது.

இதனை அடுத்து நேற்று முன்தினம் இரவு சென்னையில் ஒன்றுகூடிய இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உயர்மட்டக்குழு, ஒப்பந்த விதிகளை மீறியமைக்காக டெக்கான் குரோனிக்கல்ஸ் நிறுவனத்திற்கு உரிமையான டெக்கான் சார்ஜர்ஸ் அணியை இந்தியன்பிறிமியர்லீக் தொடரிலிருந்து நீக்குவதாக அறிவித்திருந்தது. டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் வீரர்களுக்கான ஊதியம் இன்னமும் வழங்கப்பட்டிருக்காத நிலையில் அது வழங்கப்படும் எனத் தொடர்ந்து வழங்கப்[illegible] உறுதி மொழிகள் டெ[illegible]க்கான் சார்ஜர்ஸ் அணியினரால் மீறப்பட்டு வந்ததாக இந்தியக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

குமார் சங்ககார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் வீரர்கள் புதிதாக உருவாகும் அணிக்கு அவ்வாறு மாற்றப்படுவார்களா? இல்லையெனில் புதிய ஏலத்தில் விற்கப்படுவார்களா? என்பது' இன்னமும் தெரியவில்லை. (5)

## மரண அறிவித்தல்



### ஜோசப் அல்பிரட்

(இராசிங்கம்)

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் அல்பிரட் கடந்த (12.09.2012) புதன் கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தேயு ஜோசப்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மரினாவின் (டக்கி) அன்புக் கனவரும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, லூர்த்தம்மாவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் ஜோண்சிங்கம் காலஞ்சென்ற வன்னியசிங்கம் (டேவிட்) மற்றும் இராசமலர், இராசராணி (பட்டு-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நீல்மரின் (லண்டன்), நொயலின்மரின் (ஜேர்மனி) காலஞ்சென்ற நொயல் மரின் மற்றும் நெல்சிமரின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மொனிக்கா, (லண்டன்) ஜெயரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் ஜெனோஜா மலர்விழி, ஜெயோல்மரின், நொயல்மரின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று 17.09.2012 (திங்கட்கிழமை) பிற்பகல் 2.30 மணியளவில் ஆனையூர் தூய அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஆனையூர் அடைக்கலநாயகி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோ.யோண்சிங்கம் (சகோதரன்)

"ஆவேமரியா"
உயரப்புலம், ஆனைக்கோட்டை. (22965)(9.14)


**SPOKEN ENGLISH With Diploma Certificate**

உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளும் 2 -4 வயதிற்குள் தம் தாய் மொழியைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்திற்குள் குழந்தைகள் ஒரு மொழியைப் பேசப் பழகுகையில் பெரியவர்களான உங்களால் இன்று வரை ஏன் ஆங்கிலத்தைப் பேசிப் பழக முடியவில்லை ?
இலக்கண வழியில் ஆங்கிலத்தைப் படித்தமையே காரணமாகும் !

எமது பயிற்சிப்பட்டறையில் தமிழ்த் தொடர்பற்ற ஒரு வழியில் (method) மனதை ஆங்கிலத்தில் மட்டும் சிந்திக்க வைத்து அதை மற்றைய மாணவர்களுடன் பேச விடுவதன் மூலம் மிக எளிதாகவே எல்லோராலும் ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளிக்கப்படுகிறது.

எமது இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் A/L எடுத்த மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள் 22.09.2012 இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணைந்து கொள்ள முடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு - I 08 - 10 பிரிவு III 01 - 03
பிரிவு - II 10 - 12 பிரிவு IV 03 - 05

பயிற்சிக்காலம் 03 மாதங்கள்

SAAMSON ENGLISH 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ் TEL :077 621 4567 (அ/3402)(8.14)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு விசேட கட்டணக் கழிவு

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள் Batch I - 17.9.2012 Batch II - 19.9.2012 Batch III - 22.9.2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

**CIMA கல்வி @ CAPSTONE**
0771 250 350
No. 154,A/1, Navalar Road, Jaffna.

**யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!!!**
Diploma in Mobile Phone Repairing (Hardware and Software Repairing)
சகலவகையான கைத்தொலை பேசிகளையும் மிகக்குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி!!!
குறிப்பு:- இக் கற்கை நெறியை நீங்கள் கற்பதன் மூலம் ஒரு போன்சொப் ஒன்றை சுயமாக ஆரம்பிக்க முடியும்.
By :- Selvathashan, M.Sc in ICT
மேலதிக விபரங்களுக்கு :-
UNI - ICT CAMPUS (PVT) LTD
No:83,Palaly Road, Kantharmadam,Jaffna
T.P :- 021 321 6433 / 0777 110 862

**ஓறியன்ற் பினான்ஸ் பிஎல்சி**
Orient Finance
இல 46.48. டாக்டர் என்.எம். பெரேரா மாவத்தை, பொறல்ல, கொழும்பு-08.
தொலைபேசி 011-7577577 தொலைநகல் 011-7577511 இணையம்:- www.orientfinance.lk, Reg No- PB/75/PQ
பதிவு செய்யப்பட்ட, பதிவுசெய்யப்படாத வாகனங்களுக்கு மிக விரைவான லீசிங் வசதி



வடக்கு, கிழக்கில் எமது சேவையினை விஸ்தரிக்கின்றோம். (22969)

இல 30, 1ம் குறுக்குத் தெரு, வவுனியா. 024 7200180, 077 8613169, 077 0607354, 077 2930091
பழைய வைத்தியசாலை முன்பாக, கண்டி வீதி, கிளிநொச்சி. 021 7201186, 0776627285, 077 2433194
இல:165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் 021-7200829, 077 3354998, 077 9532182
இல 26,28 வெயிலி வீதி மட்டக்களப்பு 077-9114368,


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org